# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2043 மார்கழி 13 வெள்ளிக்கிழமை (28.12.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 009



ராம்கோ RAMCO MADRAS CEMENTS LTD RAMCO CEMENT

SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து


# தொடரும் அடைமழையால் வடக்கில் பெரும் பாதிப்பு!

## வெள்ளத்தில் மிதக்கும் வன்னி வீடுகள்

(யாழ்ப்பாணம்)

நாட்டில் பெய்துவரும் அடைமழை காரணமாக வடக்கில் சுமார் 10 ஆயிரம் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. வவுனியா மாவட்டத்திலேயே அதிகளவான குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது. இதே வேளை கிளிநொச்சி, முல்லைத்தீவு பகுதிகளில் கொட்டில் வீடுகளில் தங்கியுள்ள மக்கள் பெரிதும் கஷ்டப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (19ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ பயிற்சி 3-ம் திகதி நிறைவு

இராணுவத்தில் இணைத்துக் கொள்ளப்பட்ட தமிழ்ப் பெண்களின் பயிற்சி நிறைவு எதிர்வரும் 3-ம் திகதி நடைபெறவுள்ளதாக தெரிய வருகின்றது.

கடந்த நவம்பர் மாதம் 17-ம் திகதி இராணுவத்தில் இணைத்துக் கொள்ளப்பட்ட தமிழ் யுவதிகளுக்கு கிளிநொச்சி பாரதிபுரத்தில் அமைந்துள்ள (19ஆம் பக்கம் பார்க்க)

## ரொரன்டோவை மிரட்டும் பனிப்புயல்

(ரொரன்டோ)

கனடாவின் ரொரன்டோவையும், ஒன்ராரியோவின் தென் பகுதியையும் பெரும் பனிப் புயல் தாக்கும் என்று கனடா வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

இதுகுறித்து கனடாவின் வானிலை ஆய்வு மையம் கூறுகையில்,

ரொரன்டோவையும், ஒன்ராரியோவின் தென் பகுதியையும் கடந்த (19ஆம் பக்கம் பார்க்க)

## இடதுசாரிகளின் யோசனை ஜனாதிபதியால் நிராகரிப்பு

(கொழும்பு)



நம்பிக்கையில்லாத் தீர்மானம் குறித்த இடதுசாரி கட்சிகளின் யோசனையை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நிராகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவிற்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் தொடர்பில் இடதுசாரிக் கட்சிகள், ஜனாதிபதியிடம் கோரிக்கை முன்வைத்திருந்தன.

நம்பிக்கையில்லாத் தீர்மானம் குறித்த விவகாரம் நாட்டின் அரசியல் சாசனத்திற்கு அமைவான முறையில் காணப்படுவதனால் மாற்று யோசனைத் திட்டங்களை அமுல்படுத்த வேண்டிய அவசியமில்லை என ஜனாதிபதி (19ஆம் பக்கம் பார்க்க)

## வெலிகந்தையிலுள்ள மாணவர்களை பெற்றோர் சென்று பார்வையிட்டனர் பீடாதிபதிகளும் சென்றனர்

(யாழ்ப்பாணம்)

கைது செய்யப்பட்டு வெலிகந்தை புனர்வாழ்வு நிலையத்தில் புனர்வாழ்வளிக்கப் பட்டுவரும் யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் நால்வரையும் அவர்களது பெற்றோர்கள் மற்றும் பல்கலைக்கழக பீடாதிபதிகள் நேற்று வியாழக்கிழமை சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

சுமார் ஒரு மணி நேரம் நீடித்த இந்தச் சந்திப்பின்போது தாம் எப்போது இந்தீ இடத்தில் இருந்து வெளியில் வருவோமென எதிர்பார்த்து காத்திருப்பதாக மேற்படி மாணவர்கள் தெரிவித்ததாக சந்திப்பில் கலந்து கொண்ட பீடாதிபதி ஒருவர் தெரிவித்தார்.

உளவளத்துணை எப்போது முடியும் என்றும் மாணவர்கள் எப்போது விடுதலை செய்யப்படுவார்கள் என்ற விபரங்களையும் அறிந்து கொள்வதற்கு உரிய அதிகாரிகள் அங்கு இருக்கவில்லை என்று மேற்படி பீடாதிபதிகள் மேலும் தெரிவித்தனர். (எ-11)

## கிளி.யில் அடைமழை தொடர்ந்தால் குளங்கள் உடைப்பெடுக்கலாம்?

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் பெய்துவரும் அடைமழை மேலும் தொடர்ந்தால் அப்பகுதியில் உள்ள குளங்களின் நீர்மட்டம் உயர்வடைந்து தாழ்நிலப் பகுதி மக்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தக்கூடும் என கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசன பொறியியலாளர் எஸ்.விகிர்தன் அறிவித்துள்ளார்.

நேற்றிரவு 9 மணிவரையான, மழை வீழ்ச்சியின்படி ஆபத்து நிலை எதுவுமில்லை எனவும் தொடர்ந்து மழை பெய்யுமிடத்து தாழ்நிலப் பகுதிகளுக்கு ஆபத்து ஏற்படக் கூடும் எனவும் அவர் தெரிவித்தார்.

34 அடி உயரம் கொண்ட இரணைமடுக் குளத்தில் 33 அடி உயரத்துக்கு நீர் உயர்வடைந்துள்ளது.

அதேபோன்று அக்கராயன்குளம், கல்மடுக்குளம் என்பனவற்றிலும் நேற்று இரண்டு அடிக்கு நீர்மட்டம் உயர்வடைந்துள்ளது.

இந்நிலையில் இரவு முழுவதும் மழை தொடர்ந்தால் நீர்மட்டம் மேலும் உயர்வடையும்.

அத்துடன் நேற்று வவுனியா தொடக்கம் முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி வரையிலான பகுதிகளில் அதிக மழை பதிவாகியுள்ளது.

அப்பகுதிகளிலிருந்தும் நீர் வடிந்து மேற்படி குளங்களுக்குச் செல்லக்கூடும்.

தற்போது அனைத்துக் குளங்களினதும் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. எனினும் தாழ்நிலப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் அவதானத்துடன் இருக்குமாறு அவர் மேலும் தெரிவித்தார். (ஏ)

## புலிச் சந்தேக நபர்களின் பிணை மனு நிராகரிப்பு

(சென்னை)

தமிழகத்தில் வைத்து கியூ பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையதாகக் கூறப்படும் 3 தமிழ் இளைஞர்களும் நேற்று சென்னை நீதிமன்றில் தாக்கல் செய்திருந்த பிணை கோரிய மனுவை நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

இது பற்றித் தெரியவருவதாவது,

அண்மையில் தமிழகத்தில் வைத்து கியூ பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப்புலிகளுடன் தொடர்புடையதாகக் கூறப்படும் 4 தமிழ் இளைஞர்களும் சென்னை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப் பட்டிருந்தனர். (19ஆம் பக்கம் பார்க்க)

## முல்லை மக்களுக்கு எச்சரிக்கை

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்டத்தில் பெய்துவரும் அடைமழை காரணமாக மின்சாரத்தினால் உயிராபத்துகள் ஏற்படும் அபாயம் காணப்படுவதாக முல்லைத்தீவு மாவட்ட மின் அத்தியட்சகர் ப.செந்தில்செல்வன் அறிவித்துள்ளார்.

தற்போது பெய்துவரும் அடைமழை காரணமாக மின் ஒழுக்கு, மின்கம்பம் சரிவதன் மூலம் விபத்துகள் ஏற்பட்டு உயிராபத்துகள் நிகழ்வதால் மக்கள் விழிப்புடன் செயற்பட வேண்டும்.

மின்கம்பம் சரிந்து விழுந்தாலோ அல்லது (19ஆம் பக்கம் பார்க்க)



துணுக்காய் பகுதியில் வெள்ளத்தினூடாக பயணிக்கும் மக்கள்...

## மிதிவெடி அகற்றலை அடுத்த வருடம் பாதுகாப்பு அமைச்சு பொறுப்பேற்கும்

ஐ.நா அமைப்பின் கீழ் உள்ள இலங்கையில் மிதிவெடி அகற்றும் செயற்பாடுகளை அடுத்த வருடம் முதல் பாதுகாப்பு அமைச்சு பொறுப்பேற்கவுள்ளதாகத் தெரியவருகின்றதோடு ஐ.நா பணியாளர்கள் யாவரும் வெளியேற்றப்படவுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இலங்கையின் மிதிவெடி அகற்றல் செயற்பாடுகளை ஐ.நாவின் முகவர் அமைப்பின் உதவியுடன் வட பிராந்திய மிதிவெடி செயற்பாட்டு அலுவலகம் மேற்கொண்டு வருகின்றது.

குறிப்பாக இறுதிப் போர் இடம் பெற்ற பகுதிகளான கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய இடங்களிலும் இதன் கீழேயே மிதிவெடியகற்றல் மேற்கொள்ளப்படுகிறது.

கடந்த ஜெனிவா அமர்வுகளின் போது இலங்கை அரசாங்கம் கொத்தணிக் குண்டுகளைப் பயன்படுத்தியது தொடர்பாகவும் இரசாயன ஆயுதங்களைப் பாவித்தது தொடர்பாகவும் ஆதாரங்கள் வெளியாகியிருந்தன.

இவற்றை வெளியிட்டதில் வட பிராந்திய மிதிவெடியகற்றல் நிறுவனத்திற்கும் (19ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# கைது செய்யப்படவேண்டிய பலர் வடக்கில் இன்னமும் உள்ளனர்

## பொலிஸ் பேச்சாளர் தெரிவிப்பு



(கொழும்பு)

வடக்கே கைதுசெய்யப்பட வேண்டிய நபர்கள் இன்னும் இருப்பதாக பொலிஸ் பேச்சாளர் பிரஷாந்த ஜயக்கொடி தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் கடந்த பல வாரங்களில் 45 பேர் பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் பூசா முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர்கள் என்றும் நீண்டகாலமாக சேகரித்துவந்த புலனாய்வுத் தகவல்களின்படியே இவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் பேச்சாளர் பிரஷாந்த ஜயக்கொடி தெரிவித்தார்.

இவர்கள் அனைவரும் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் உறுப்பினர்கள் என்பதை நிச்சயமாக உறுதிசெய்ததன் பின்னரே கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இலங்கை இராணுவத்திடம் சரணடையாமல் மறைந்துவாழ்ந்த இவர்கள் தொடர்பில் தொடர்ந்தும் விசாரணைகள் நடத்தப்படும் என்றும் அதன்பின்னர் உரிய சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பேச்சாளர் தெரிவித்தார்.

இதேவேளை, இதுவரை கைது செய்யப்பட்டுள்ள 45 பேர் தொடர்பில் அவர்களின் உறவினர்கள் தம்மிடம் முறைப்பாடு செய்துள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இவர்கள் அனைவரும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டிருப்பதாக பொலிஸார் தமது ஆணைக்குழுவுக்கு அறிவித்துள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.மாவட்ட இணைப்பதிகாரி டி.கனகராஜா தமிழோசையிடம் கூறினார்.

கைதுசெய்யப்பட்டுள்ளவர்களில் மூன்று பெண்களும் 19 வயதான மாணவர் ஒருவரும் அடங்குவதாகவும் அவர் தெரிவித்தார்.

இவர்கள் அனைவரும் போருக்கு முன்னர் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் வாழ்ந்தவர்கள் என்றும் போர் முடிந்த பின்னர் முகாம்களில் இருந்து யாழ்ப்பாணத்தில் 2010ஆம் ஆண்டளவில் மீளக் குடியேறியவர்கள் என்றும் யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்தது. (எ-11)

# ஆடைத்திருடன் அகப்பட்டான்

(கொழும்பு)

இரவு வேளைகளில் வீடுகளுக்குள்ளும் வீட்டு வளாகங்களுக்குள்ளும் புகுந்து பெண்களின் ஆடைகளை திருடிவந்த ஒருவரை பொலிஸார் சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர்.

மணல் அகழ்வில் ஈடுபடும் ஒருவரையே பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தூங்குவதற்காக பெண்களின் ஆடைகளை அவர் திருடி வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறான 10 சம்பவங்களுடன் தொடர்புடைய நபரையே நேற்ற வியாழக்கிழமை கைது செய்துள்ளதாக பாணந்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சந்தேக நபர் பெண்களின் ஆடைகளை மட்டுமே திருடிவந்துள்ளதாகவும் வேறு எந்தவொரு பொருட்களையும் அவர் திருடவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-11)

# பிரி. கைதிகளை பரிமாற்ற நீதியமைச்சருடன் பேச்சு

(கொழும்பு)

இலங்கைச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பிரித்தானிய குடியுரிமை கொண்ட தமிழரை பிரித்தானிய சிறைச்சாலைக்கு மாற்றுவது தொடர்பில் நீதியமைச்சர் ரவூப் ஹக்கீமுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரனுக்கும் இடையில் பேச்சுவார்த்தை ஒன்று இடம்பெற்றுள்ளது.

இந்தப் பேச்சுவார்த்தை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைமையகமான தாருஸ்ஸலாமில் நேற்றுமுன்தினம் இரவு இடம் பெற்றுள்ளது.

இதன்போதே பிரித்தானிய குடியுரிமை கொண்ட தமிழரை பிரித்தானியச் சிறைச்சாலைக்கு மாற்றுவது தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது.

பிரித்தானிய வெளிவிவகார அமைச்சு இந்த விவகாரம் தொடர்பில் உத்தியோகபூர்வமாக நடவடிக்கைகளை முன்னெடுத்தால் அது தொடர்பில் கவனம் செலுத்தப்படும் என்று நீதியமைச்சர் தெரிவித்துள்ளார்.

புலிகளுடன் தொடர்புகளைக் கொண்டிருந்தனர் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே புலம்பெயர்ந்த தமிழர்களை பயங்கரவாத மற்றும் அவசரகாலச்சட்டத்தின் கீழ் நீதிமன்றம் தண்டனை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

பிரித்தானியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் 1995ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட கைதிகள் பரிமாற்ற ஒப்பந்தம் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

95/5 சட்டத்தின் பிரகாரமே கைதியை பரிமாற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அவர்களுடைய பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-11)

# மானிப்பாயில் பூதம் மிரண்டனர் மக்கள்

(சுதுமலை)

மானிப்பாயில் நிலத்திலிருந்து திடீர் என புகை கிளம்பியதால் சிறிதுநேரம் பயத்தால் மக்கள் அல்லோலகல்லோலப்பட்டனர்.

சுதுமலைச் சந்திப்பகுதியில் உள்ள மின்மாற்றிக்குஅருகிலிருந்துநேற்றுக்காலைதிடீரென நிலத்திலிருந்து புகை வெளிவர ஆரம்பித்தது.

தற்போதைய காலநிலை மற்றும் நாளை 29ஆம் திகதி இடம்பெறும் என எதிர்பார்க்கப்படும் நிலநடுக்கம் என்பவற்றின் அச்சத்தில் இருக்கும் மக்கள், திடீரென நிலத்திலிருந்து புகை வருவதை அவதானித்ததும் மிரண்டு போய் ஓட்டம் எடுத்தனர்.

எனினும் துணிச்சல்மிக்க சில ஜாம்பவான்கள் புகைவரும் இடத்தை அவதானித்து அவற்றை சோதனைக்கு உட்படுத்தினர். இந்நிலையில் மின்சார வயர் எரியும் போது ஏற்படும் மணம் வெளிப்பட்டது. இதன்போதேமின் மாற்றியிலிருந்து நிலத்திற்குச் செல்லும் வயர் எரிவது அவதானிக்கப்பட்டது.

இதனையடுத்து மின்சார சபையினருக்கு அறிவிக்கப்பட்டு, அவர்கள் சம்பவ இடத்துக்கு வந்து திருத்த வேலைகளை மேற்கொண்டனர். இதன்போது பெரும்ளவான மக்கள் அப் பகுதியில் கூடியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஏ)

# திருடனுடன் போராடிய பெண் கத்திக்குத்துக்கு இலக்காகி காயம்

## வரணி இயற்றாலையில் சம்பவம்

(வரவெட்டி)

திருடனுடன் போராடிய பெண் ஒருவர் கத்திக்குத்துக்கு இலக்காகி காயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வரணி இயற்றாலை பகுதியில் வீட்டு உரிமையாளரான பெண்ணுக்கும் அவ்வீட்டுக்குத் திருடச்சென்ற திருடனுக்கும் ஏற்பட்ட கைகலப்பில் குறித்த பெண் கத்தி வெட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு 10 மணிக்கு இடம்பெற்றுள்ளது. இதில் அதே இடத்தினைச் சேர்ந்த வி.தர்சனா (வயது 30) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, குறித்த திருடன் நேற்றுமுன்தினம் இரவு 10 மணியளவில் வீட்டின் சமையல் அறையினை உடைத்து திருட்டு முயற்சியில் ஈடுபட்டுள்ளான்.

இதன்போது அவ் வீட்டிலிருந்த பெண் விழிப்படைந்து கத்தும் போது திருடன் கத்தியை கழுத்தில் வைத்து மிரட்டியுள்ளான். இதனையடுத்து அயல்வீட்டிலிருந்தவர்கள் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்றபோது அப்பெண்ணின் கையை கத்தியால் வெட்டிவிட்டுதிருடன்தப்பிச்சென்றுள்ளான்.

இதுதொடர்பாககொடிகாம பொலிஸார் விசாரணைகளைமேற்கொண்டு வருவதோடு சந்தேக நபர்ஒருவரையும்கைது செய்துள்ளனர். (எ-11,24)

# கரடிப்போக்கில் விபத்து; 7 பேர் காயமடைந்தனர்

(கனகபுரம்)

இ.போ.ச பேருந்தும் டிப்பர் வாகனமும் நேருக்குநேர் மோதி விபத்துக் குள்ளானதில் இ.போ.ச பேருந்தில் பயணித்த 7 பேர் காயமடைந்து கிளி நொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இச்சம்பவம் நேற்றுக்காலை 10 மணியளவில் கரடிப்போக்கு சந்தியில் இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் தெரியவருவது,

கிளிநொச்சியில் இருந்து பூநகரி நோக்கி பயணித்துக்கொண்டிருந்த இ.போ.ச பேருந்தும் பூநகரியில் இருந்து கிளிநொச்சி நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த டிப்பர் வாகனமும் நேருக்குநேர் மோதிக்கொண்டதிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் கோவிந்தன் நாகேந்திரன் (வயது 30), த.மகேஸ்வரி (வயது 61), சிவபாதம் நிஷாந்தா (வயது 19), ந.கறுப்பையா பிள்ளை (வயது 60), வி.அனுசியா (வயது 6), வி.வசந்தகுமாரி (வயது 34), ஐ.பத்மலோஜினி (வயது 65), ம.அனுசியா (வயது 12) ஆகியோரே காயமடைந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மழைகார்ணமாக ஏ-9 வீதியில் விபத்துக்கள் அதிகரித்துக் காணப்படுகிறது. கடந்த செவ்வாய்க்கிழமை திருமுறிகண்டி பகுதியில் இராணுவ பவல் வாகனமும் பயணிகள் பேருந்தும் விபத்துக் குள்ளானதில் வெளிநாட்டுப் பயணிகள் உட்பட 10 பேர் வரை காயமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-3,259)


பிள்ளையார் இன்

40% கழிவு

இன்றுமுதல் அதி விசேட 40 % விலைக்கழிவுடன்
தரமான சைவ உணவுகள் எமது உணவகத்தில்
நிறைவான சேவையுடன் காலை, மாலையில் வழங்கப்படும்.

இன்றைய விசேட உணவு :-

பூரி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ 85/-
சப்பாத்தி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ 85/-

தொடர்புகளுக்கு : இல. 31. மானிப்பாய் வீதி. யாழ்ப்பாணம். 021 222 2829

விற்பனைக்கு

மகிந்திரா பெல்ரோ மக்சி றக் ஒன்று விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : 0711896254

(த-1933)



ஈழத்து சிதம்பர தரிசனம்



இன்று (28.12.2012) வெள்ளிக்கிழமை அதிகாலை ஆருத்திரா தரிசனம்

ஈழத்து சிதம்பரத்தில் ஆடும் நாயகனின் ஆருத்திரா தரிசனம்
அன்னை சௌந்தராம்பிகையுடன் நடம்புரிந்தே
ஆருத்திரா தரிசனத்தை எமக்களிப்பான்
பார்த்த மாத்திரத்தில் பாவத்தை போக்குகின்ற
தீர்த்தத்தை திருவருளை எமக்களிப்பான்
கூத்தன் பாதம் பணிவோர் நலன் காத்தே
குவலயத்தை வாழ்வித்தே குறை தீர்ப்பான்
ஏத்திப் போற்றி ஈழத்து சிதம்பரத்தை வலம்வர
எம்பாவம் தொலையும் ஏற்றதோர் தீர்வு கிடைத்துவிடும்.

மதுரகவி.காரை.எம்.பி.அருளானந்தன்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## ஒப்புக்கொள்ளும் குணம்

விக்கிரம சோழன் என்றொரு ராஜா இருந்தார். அவர் ஒருநாள் மாறுவேடம் பூண்டு நகர்ச் சோதனைக்காகப் புறப்பட்டார்.

சிறைச்சாலையிலே கைதிகள் எல்லோரும் எப்படி இருக்கிறார்கள் என்று பார்த்து விட்டு வரலாமென போனார்.

பல கைதிகள் சிறைச்சாலை அறைகளினுள் அடைப் பட்டுக் கிடந்தனர். அதிலே ஒரு கைதியை அழைத்து "நீ ஏன் இந்த இடத்திற்கு வந்தாய்?" என்று ராஜா விசாரித்தார்.

"நான் ஒரு வாடகை வீட்டிலே குடியிருந்தேன். அவ்விடத்தை விட்டு வெளியேறச் சொன்னார்கள். வேறு வீடு கிடைக்கவில்லை. அங்கேயே இருந்தேன். அதற்காக என்னை பொலிஸாரிடம் முறையிட்டு உள்ளே தள்ளி விட்டார்கள்- என்று அந்நபர் கூறினார்.

ராஜா வேறொரு கைதியை அழைத்து "நீ எப்படி இங்கே வந்தாய்?" என்று கேட்டார்.

"ஒருநாள் தெருவிலே நடந்து போய்க் கொண்டிருந்தேன். தெருவிலே ஒரு தங்கச் சங்கிலி கிடந்தது. அதை எடுத்துக் கொண்டு கடையில் விற்பதற்காகப் போனேன். அவ்விடத்தில் வைத்து என்னைப் பிடித்து விட்டார்கள். "திருடினேன்" என்று கூறி தண்டனையும் கொடுத்தார்கள்" என்று கூறினான் அவன்.

ராஜா அடுத்தபடியாக இன்னொரு கைதியிடம் விசாரணையை ஆரம்பித்தார்.

"ஐயா... நான் வேறு ஒன்றும் செய்யவில்லை. ஒரு சிறிய கோயில் கட்டுவதற்காக மக்களிடம் பணம் வசூல் செய்தேன். பணம் கொடுத்தவர்கள் புகாரையும் சேர்த்துக் கொடுத்து விட்டார்கள். நான் வசூல் செய்த பணம் அனைத்தையும் சொந்த செலவு செய்து விட்டேன் என்பதற்காக இங்கே கொண்டு வந்து விட்டார்கள்" என்றான்.

ராஜா கடைசியாக வேறொரு கைதியிடம் போனார்.

"ஐயா... நான் மிகவும் ஏழை... ஏழு பிள்ளைகள்; வயதான அப்பா... அம்மா... இருக்கிறார்கள். வேலை செய்தும் போதுமான கூலி கிடைக்கவில்லை. சில சமயங்களில் வேலை கிடைப்பதில்லை. பசிக்கொடுமை... அதனாலே செய்யக்கூடாத ஒரு காரியத்தை செய்து விட்டேன். ஒரு செல்வந்தர் வீட்டிலே திருடி விட்டேன். திருடியது பெரிய குற்றம்; அதிலேயும் பிடிபட்டேன். நியாயப்படி மூன்று வருடங்கள் சிறைத்தண்டனை கிடைத்துள்ளது. நான் இங்கே வருவதற்கு வேறு காரணம் எதுவுமில்லை. நான் செய்த களவே காரணம் என்றான்.

உடனே ராஜா சிறை அதிகாரியை அழைத்தார். வேகமாக வந்தார்.

இதோ பார்! இங்கே வந்திருக்கும் திருடனைத் தவிர வேறு யாரும் ஒரு குற்றமும் செய்யவில்லை. இந்த நபர் மட்டுமே குற்றம் புரிந்துள்ளான். நல்லவர்கள் பலபேர் இருக்கும் இடத்தில் ஒரு பொல்லாதவன் இருக்கக் கூடாது. அதனாலே உடனே இவனை விடுதலை செய்யுங்கள்" என்று உத்தரவு பிறப்பித்தார். தவறை உணர்ந்தவன் வெளியிலே வந்து விட்டான்.

குற்றத்தை ஒப்புக் கொள்வது ஒரு பெரிய குணம். அதற்குத் தைரியமும் மனப்பக்குவமும் வேண்டும்.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# எரித்திரியாவே எங்கள் போராட்டத்தின் மாதிரி

## புலிகள் கூறினாராம் விக்கிலீக்ஸ் தகவல்

சுதந்திரம் பெற்ற எரித்திரியாவே தமது போராட்டத்துக்கான மாதிரி என்று தமிழீழ விடுதலைப்புலிகளின் முன்னாள் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார். இந்த கருத்தை ரொய்ட்டர் செய்தியாளரிடம் அவர் கூறியதாக அமெரிக்க தூதரகம் 1994 ஆம் ஆண்டு வோஷிங்டனுக்கு தெரிவித்தது என்று விக்கிலீக்ஸ் குறிப்பிட்டுள்ளது.

எனினும் பாலசிங்கத்தின் கருத்துக்கு அமெரிக்கத் தூதரகம் தமது விமர்சனத்தை வெளியிட்டது. அதில் அஃஸ் அபாபாவின் அரசாங்கம் கவிழ்ந்ததன் காரணமாகவே எரித்திரியாவில் சுதந்திரத்தை பெறமுடிந்தது.

இலங்கை அரசாங்கத்தை அவ்வாறு நோக்குவது பொருத்தமற்றது என்று அமெரிக்க தூதரகம் குறிப்பிட்டதாக விக்கிலீக்ஸில் தகவல் வெளியாகியுள்ளது.

இதேவேளை, தமிழீழ விடுதலைப்புலிகளின் பொதுநிர்வாகத்தை நோக்கும் போது அவர்கள் தமிழீழம் என்ற நோக்கத்துக்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளமையை காணமுடிகிறது என்றும் அமெரிக்க தூதரகம் தெரிவித்திருந்தது.

இந்நிலையில் அரசாங்க வைத்தியசாலைகள் மற்றும் பாடசாலைகளை உங்களின் நிர்வாகத்தின் கீழ் அரசாங்கமே செயற்படுத்துகிறது. ஏன் அதனையும் நீங்கள் செய்ய முடியாது என்று ரொய்ட்டர் செய்தியாளர் அன்ரன் பாலசிங்கத்திடம் கேட்டுள்ளார்.

அதற்குபதிலளித்த அவர் அதனை தாம் செய்யமுடியாது என்றும் அரசாங்கத்தைக் கொண்டு அவற்றை செய்விப்பதாகவும் குறிப்பிட்டதாக அமெரிக்க தூதரகம் தெரிவித்திருந்தது.

இதற்கிடையில் விடுதலைப் புலிகளின் முகாம்கள் இனங்காணப்படாமை காரணமாக இலங்கைப் படையினர் இலக்கின்றி ஷெல் தாக்குதல்களை நடத்தி வருவதாகவும் ரொய்ட்டர் செய்தியாளரை கோடிட்டு அமெரிக்க தூதரகம் குறிப்பிட்டுள்ளது. (அ-2)

# ஹிஜ்ராபுரம் கிராமத்தில் போதைப்பொருள் பாவனை

## நடவடிக்கை எடுக்க கோரிக்கை

(முல்லைத்தீவு)

கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் உள்ள ஹிஜ்ராபுரம் கிராமத்தில் போதைப்பொருள் பாவனை அதிகரித்து வருவதாக அப்பகுதி மக்கள் விசனமடைந்துள்ளனர்.

மேற்குறிப்பிட்ட பிரதேசத்தில் தமிழ்,முஸ்லிம் மக்கள் வாழ்ந்து வரும் நிலையில் போதைப்பொருள் பாவனையால் அப்பகுதியில் உள்ள மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

இவ்வாறு மேற்குறிப்பிட்ட கிராமத்தில் போதைப்பொருள் பாவனை அதிகரித்து காணப்படுவதால் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகின்றனர்.

இது தொடர்பாக பல தடவை முள்ளியவளை பொலிஸாருக்கு முறைப்பாடு செய்தும் எந்தவிதமான நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை.

எனவே, உரியதரப்பினர் இவ்விடயத்தில் கவனமெடுத்து போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்த ஆவன செய்யுமாறு அப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-267)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 150 | 160 | 100 |
| உருளைக்கிழங்கு | 80 | 80-100 | 140 | 90 |
| பச்சைமிளகாய் | 240 | 180 | 300 | 200 |
| தக்காளி | 100 | 100 | 140 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 30-35 | 30 | 40 | 40 |
| கோவா | 70 | 50 | 80 | 80 |
| கரட் | 100 | 60 | 140 | 140 |
| பூசணி | 30-40 | 30 | 60 | 40 |
| புடோல் | 40-50 | 60 | [illegible] | 80 |
| வாழைக்காய் | 60-70 | 70 | 100 | 80 |
| சின்ன வெங்காயம் | 140 | 120 | 160 | 160 |
| பெரிய வெங்காயம் | 90 | 110 | 120 | 120 |
| பாகற்காய் | 120 | 60 | 90 | 160 |
| வெண்டிக்காய் | 70 | 60 | 80 | 80 |
| கருணைக் கிழங்கு | 50 | 50 | 80 | 70 |
| பயற்றங்காய் | 120 | 80 | 80 | 80 |
| லீக்ஸ் | 100 | 110 | 140 | 140 |
| பீற்றூட் | -- | 90 | 160 | 120 |
| கறிமிளகாய் | 200 | 180 | 200 | 200 |
| இராசவள்ளி | 130 | 140 | 170 | 150 |
| போஞ்சி | 70 | 80 | 120 | 80 |
| கத்தரிதம்புள்ள | -- | 120 | 140 | -- |
| கீரை - 1 பிடி | 4-5 | 10 | 30 | 25 |
| தேசிக்காய் | 50 | [illegible] | 120 | 100 |
| [illegible] | [illegible] | 40 | 38 | 35-40 |

# இராசி பலன்

**28.12.2012**

(மார்கழி 13, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.28 மணிக்கு.
பூரணை பிற்பகல் 4.10 மணிவரை
திருவாதிரை பின்னிரவு 6.11 மணிவரை
இராகுகாலம் 10.58-12.28 மணிவரை
சுபநேரம் 6.28-7.58 மணிவரை
உதயம் நடேசர் ஆர்த்திரா தரிசனம்
கெந்போட்டாரம்பம், பூரணை விரதம்.

**மேடம்** சகோதர ஒற்றுமை மேலோங்கும், நீண்டநாளைய பிரச்சினையொன்று இன்று நல்ல முடிவுக்கு வரும், தொழில் போட்டிகளை முறியடித்து வெற்றி காண்பீர்கள், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**இடபம்** உறவினர் மத்தியில் மதிப்பும் மரியாதையும் உயரும், தொழில் முன்னேற்றமுண்டு, நிம்மதிக்காக ஆலயத்தை நோக்கிச் செல்வீர்கள், வருமானம் திருப்திதரும்.

**மிதுனம்** குடும்பச் செலவுகளில் சிக்கனம் காட்ட முற்படுவீர்கள், பெண்தெய்வ வழிபாட்டால் பெருமைகாண வேண்டிய நாள், மன ஆறுதல் தரும் வகையில் பயணமொன்று உருவாகலாம்.

**கடகம்** தூரத்து உறவினர்களின் வருகையுண்டு, இடமாற்றத்தால் இனிய மாற்றங்கள் ஏற்படலாம், உணர்ச்சிவசப்படும் சூழ்நிலைகள் ஏற்படலாம், சயன சுகக் குறைவான நாள்.

**சிங்கம்** செய்தொழில் மேன்மையுண்டு, குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலைகள் ஏற்படலாம், வருமானம் திருப்திதரும், செவிகுளிரும் செய்திகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

**கன்னி** செல்வாக்கு மேலோங்கும் நாள், உதிரிவருமானங்கள் வந்து சேரலாம், அன்பு நண்பர்கள் ஆர்வத்தோடு உதவி செய்ய முன்வருவர், கனவு பலிதமுண்டு, ஆரோக்கியமான நாள்.

**துலாம்** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், ஆன்றோர் சந்திப்புண்டு, வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், காரிய வெற்றிக்கு நண்பர்கள் கைகொடுத்து உதவுவர்.

**விருச்சிகம்** சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், செலவுகள் அதிகரிக்கும், போசன சுகமுண்டு, குடும்பத்தில் கோபமாகப் பேசிவிட்டு பின்னர் வருத்தமடைய நேரிடலாம், உடல்நலக் குறைவுண்டு.

**தனுசு** அரச வழியில் அனுகூலமுண்டு, உறவினர் சிலரை தேடிச் சென்று சந்திப்பீர்கள், வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும், தொழிலில் புதிய முதலீடுகள் பற்றி சிந்திப்பீர்கள்.

**மகரம்** உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், மறைமுக எதிர்ப்புகள் மாறும், பணவரவுகள் திருப்திதரும், உறவினர் கைகொடுத்து உதவ முன்வருவர், தெய்வபக்தி அதிகரிக்கும்.

**கும்பம்** மாமன், மைத்துனர் வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், பிள்ளைகளால் பெருமைகள் ஏற்படும், முன்னோர் சொத்துக்களால் நன்மையுண்டு, வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மீனம்** தொழில்ரீதியாக வரவேண்டிய பணவரவுகள் கைக்கு கிடைக்கலாம், உறவினர் மனஸ்தாபங்கள் அகலும், வாகன சுகமுண்டு, தூரதேசச் செய்திகளால் நன்மையுண்டு.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருபத்தைந்து வருடங்களாக புனரமைக்கப்படாத வீதி கவனிக்கப்படுமா?


(குனங்கிளப்பு)

சாவகச்சேரி கச்சாய் சந்தியில் இருந்து கடற்கரை நோக்கி செல்லும் ஒரு கிலோ மீற்றர் தூரமான வீதியானது கடந்த 25 வருடங்களாக புனரமைக்கப்படாது காணப்படுவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

குன்றும் குழியுமாக காணப்படும் இவ்வீதி வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமானதாகும். இவ் வீதி புனரமைப்பு தொடர்பாக அப்பகுதி மக்கள் சாவகச்சேரி பிரதேச செயலரிடம் மகஜர் ஒன்றை கையளித்துள்ளனர்.

அத்துடன் இவ் வீதியூடாக போக்குவரத்து மேற்கொள்ள முடியாமையால் பேருந்து சேவை இடை நிறுத்தப்பட்டுள்ளது. இதனால் இவ் வீதியூடாக வேறு இடங்களுக்கு செல்வோர் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

எனவே, உரிய தரப்பினர் இதனைக் கருத்திற்கொண்டு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-37)




நன்றி:-மிரர்.

# டெங்கு நோயாளர் அதிகரிப்பில் நல்லூர் பொ.சு.ப.பிரிவுக்கு முதலிடம்

## 122 நோயாளர்களை தன்னகத்தே கொண்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவில் மட்டும் 122 டெங்கு நோயாளர்கள் இந்த வருடத்தில் இனம் காணப்பட்டுள்ளனர் என யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் தொற்று நோய்த்தடுப்பு பிரிவின் புள்ளி விபரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

இந்த வருடத்தில் கடந்த 21 ஆம் திகதி வரை யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் தொற்றுநோய் தடுப்பு பிரிவிற்கு கிடைத்த தகவலின்படி நல்லூர் பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவிற்குட்பட்ட பகுதியில் 122 பேர் டெங்கு நோய்த்தொற்று ஆளாகியுள்ளனர் எனவும் சாவகச்சேரி பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவில் 85 பேர் டெங்கு நோய்த் தொற்றுக்கு ஆளாகியுள்ளனர் எனவும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதுத்விர யாழ்ப்பாணம் பொதுச்சுகாதார பரிசோதகர் பிரிவில் 71 பேரும் சண்டிலிப்பாய் பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவில் 57 பேரும் தெல்லிப்பழை பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவில் 49 பேரும் பருத்தித்துறை பொதுச்சுகாதார பரிசோதகர் பிரிவில் 45 பேரும் கோப்பாய் பொதுச்சுகாதார பரிசோதகர் பிரிவில் 40 பேரும் உடுவில் பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவில் 40 பேரும் கரவெட்டி பொதுச்சுகாதார பரிசோதகர் பிரிவில் 33 பேரும் சங்கானை பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவில் 20 பேரும் வேலணை, ஊர்காவற்றுறை பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவில் தலா 11 பேரும் டெங்கு நோய்த் தொற்றுக்கு ஆளாகியுள்ளனர்.

அத்தோடு இந்த வருடத்தில் ஜனவரி மாதம் 69 பேரும் பெப்ரவரி மாதம் 34 பேரும் மார்ச் மாதம் 27 பேரும் ஏப்ரல் மாதம் 15 பேரும் மே மாதம் 7 பேரும் ஜூன் மாதம் 3 பேரும் ஜூலை மாதம் 30 பேரும் ஓகஸ்ட் மாதம்25 பேரும் செப்டெம்பர் மாதம் 27 பேரும் ஒக்டோபர் மாதம் 108 பேரும் நவம்பர் மாதம் 138 பேரும் டிசெம்பர் மாதம் 101 பேரும் (கடந்த 21 ஆம் திகதி வரை மட்டும்) டெங்கு நோயாளர் என உறுதிப் படுத்தப்பட்டுள்ளனர்.

இந்த வருடத்தில் கடந்த மூன்று மாதங்களும் அதாவது ஒக்டோபர், நவம்பர், டிசெம்பர் (21 ஆம் திகதி வரை) மாதங்களில் டெங்கு நோய்த் தொற்றுக்கு ஆளாகுவோரின் எண்ணிக்கை திடீரென அதிகரித்துள்ளதாகவும் இதில் நவம்பர் மாதம் அதிகூடிய எண்ணிக்கையான டெங்கு நோயாளர்கள் இனம் காணப்பட்ட மாதமாக கருதப்படுவதாகவும் (இதுவரை கிடைத்த தகவலின்படி) அந்தத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

அத்தோடு இந்த ஆண்டின் முதல் மூன்று மாதங்களும் நாள் ஒன்றுக்கு சராசரியாக இருவர் அல்லது மூவர் டெங்கு நோயாளராக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டதாகவும் அதன்பின்னர் ஏப்ரல், ஜூன், ஜூலை மாதங்களில் நாள் ஒன்றுக்கு ஒரு வீதம் அனுமதிக்கப்பட்டு வந்ததாகவும் குறிப்பாக ஜூன் மாதம் 3 பேர் மட்டுமே டெங்கு நோயாளர்களாக இனம் காணப்பட்டதாகவும் அதன் பின்னர் கடந்த ஜூலை, ஓகஸ்ட், செப்டெம்பர் மாதங்களில் நான்கு அல்லது ஐந்து பேர் வீதம் அனுமதிக்கப்பட்டு வந்ததாகவும் இறுதி மூன்று மாதங்களும் சராசரியாக நாள் ஒன்றுக்கு 8 பேர் வீதம் டெங்கு நோயாளர்களாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டு வருகின்றனர் எனவும் இந்த வீதம் இன்னும் அதிகரிக்கக்கூடிய வாய்ப்புள்ளது எனவும் அந்தத் திணைக்கள தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும் டிசெம்பர் மாதத்தில் (நேற்று முன்தினம் 26 ஆம் திகதி வரை) 155 பேர் டெங்கு நோயாளர்களாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதில் சாவகச்சேரி பொதுச்சுகாதார பரிசோதகர் பிரிவில் 32 பேரும் யாழ்ப்பாணத்தில் 25 பேரும் நல்லூர், சண்டிலிப்பாயில் 22 பேரும் தெல்லிப்பழையில் 12 பேரும் கரவெட்டியில் 9 பேரும் சங்கானையில் 7 பேரும் வேலணையில் 6 பேரும் உடுவிலில் 5 பேரும் பருத்தித்துறையில் 3 பேரும் ஊர்காவற்றுறையில் 2 பேரும் பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவு ரீதியாக வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் யாழ்.மாவட்டத்தில் டெங்கு நோயின் தாக்கம் இந்த வருடம் அதிகரித்துள்ளதோடு இதுவரை 584 பேர் டெங்கு நோய்த் தொற்றுக்கு ஆளாகியுள்ளனர் எனவும் இந்த எண்ணிக்கை இன்னும் அதிகரிக்கக் கூடும் எனவும் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் தொற்று நோய்த் தடுப்பு பிரிவின் புள்ளி விபரத் தகவல்கள் தெரிவிக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (அ-6)

# மதுபோதை காரணமாக சிற்றூழியர் அடாவடி

## சடலத்தை பெறுவதில் உரிமையாளர் சிரமம்

(யாழ்ப்பாணம்)

சிற்றூழியர் மதுபோதையில் உறக்கத்தில் புலம்பியதனால் சடலத்தை பெறுவதில் உறவினர்கள் அவதிப்பட்டனர்.

இந்தச் சம்பவம் கடந்த 25 ஆம் திகதி நத்தார் தினத்தன்று மாலை 4.30 மணியளவில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இடம்பெற்றுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட முதியவர் ஒருவர் சிகிச்சை பயனளிக்காத நிலையில் உயிரிழந்தார்.

அவரது சடலம் காலை 9 மணியளவில் பிரேத பரிசோதனைக்காக பிரேத அறைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

பிரேத பரிசோதனை முடிவடைந்த பின்னர் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு சட்ட வைத்திய அதிகாரி சிற்றூழியரிடம் கூறிவிட்டு சென்று விட்டார்.

இந்நிலையில் சிற்றூழியர் அளவுக்கு அதிகமாக மதுவை அருந்தி விட்டு பிரேத அறையின் முன்பக்கமாக இருந்த அறையில் படுத்து உறங்கிவிட்டார். நீண்ட நேரமாக சடலத்தைப் பொறுப்பேற்பதற்காக காத்து நின்ற உறவினர்கள் பிரேத அறையின் முகப்பு வாயில் இருந்த அறையினுள் நிலத்தினில் தலை குப்புறவாக படுத்து உறங்கிய சிற்றூழியரை உறக்கத்திருந்து எழுப்ப முயற்சித்த போது மதுபோதையில் புலம்பிய சிற்றூழியர் அவதூறான வார்த்தைப் பிரயோகங்களிலும் ஈடுபட்டார்.

பிரேத அறையில் பிறிதொரு பிரேதம் போன்று கிடந்த சிற்றூழியரை அவ்விடத்தை விட்டு அகற்ற முயற்சித்த வைத்தியசாலை அதிகாரிகள் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைத்தனர். யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இவ்வாறான சம்பவங்கள் அண்மைக்காலமாக அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-6)




# துவிச்சக்கரவண்டிகள் திருடப்படுகின்றன

(சாவகச்சேரி)

கைதடி சந்தியில் உள்ள ஒரு வீட்டில் நட்பு ரீதியாக நிறுத்தி விட்டு செல்லும் துவிச்சக்கரவண்டிகளில் சில துவிச்சக்கரவண்டிகள் விசமிகளால் திருடிச் செல்லும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

அரசாங்கம் மற்றும் தனியார் ஊழியர்களும் சில தூர இட பயணிகளும் அவ் வீட்டில் தமது துவிச்சக்கரவண்டிகளை நிறுத்தி விட்டு பேருந்தில் பயணிப்பது வழக்கம். இவ்வாறு அவ் வீட்டில் நிறுத்தி வைக்கப்படும் துவிச்சக்கரவண்டிகளே வீட்டாருக்கும் தெரியாத வகையில் களவாடப்பட்டு வருகிறது.

இதனால் துவிச்சக்கரவண்டி உரிமையாளர் திரும்பி வந்து பார்த்து விட்டு ஏமாற்றம் அடைய வேண்டியுள்ளது. (அ-3-29)

# கலைஞர் கௌரவிப்பு

(மல்லாகம்)

புத்தாக்க அரங்க இயக்கத்தின் கலைஞர் கௌரவிப்பு நிகழ்வு நாளை சனிக்கிழமை மல்லாகத்தில் அமைந்துள்ள அலுவலக மண்டபத்தில் காலை 8.30 மணிக்கு புத்தாக்க அரங்க இயக்கப் பணிப்பாளர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கலைஞர் கௌரவிப்பு நிகழ்விற்கு பிரதம விருந்தினராக மூத்த கிராமிய நாடகவியலாளர் சதானந்தன் கலந்து கொள்ளவுள்ளார். இந்நிகழ்வில் இவ்வாண்டில் அரங்கச் செயற்பாட்டில் சிறப்பாக செயலாற்றிய ஆற்றுகையாளர்கள் கௌரவிக்கப் படவுள்ளனர்.

அத்துடன் எஸ்.ரீ.குமரன் எஸ்.ரீ.அருள் குமரனின் எழுத்துருவாக்கம் நெறியாள்கையில் புத்தாக்க அரங்க இயக்க கலைஞர்களின் கூட்டுசைவு அபத்தநாடக அளிக்கை நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (அ-9-21)

# நூலக வளர்ச்சி கருதி அதிர்ஷ்ட லாப சீட்டிழுப்பு

(சாவக்கச்சேரி)

சாவகச்சேரி பிரதேச சபையின் நாவற்குழி பொதுநூலக அபிவிருத்தி சபையின் வளர்ச்சி கருதி அதிர்ஷ்டலாப சீட்டு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

இதில் அதிர்ஷ்டசாலிகளை தெரிவு செய்யும் சீட்டிழுப்பு எதிர்வரும் 2013 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி பிற்பகல் 3 மணிக்கு நாவற்குழி பொது நூலக மண்டபத்தில் நடைபெறுமென நூலக அபிவிருத்தி சபை செயலாளர் திருமதி ராணி தெரிவித்துள்ளார். (அ-3-29)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆன்மீக சொற்பொழிவு

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் வழமை போல் நடைபெறும் நிகழ்ச்சியில் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11 மணியளவில் **கண்ணன் காட்டிய வழி** என்னும் பொருள் பற்றி வல்வை சிவகுரு வித்தியாசாலை அதிபர் ஆ.சிவநாதன் ஆன்மீக சொற்பொழிவாற்றவுள்ளார். (அ-3-35)

## வாசிப்பு மாத நிகழ்வு

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை நடத்தும் வாசிப்பு மாதத்தை ஒட்டிய கலை நிகழ்வுகள் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் சிறப்பு நிகழ்வாக அகில இலங்கை கலை இலக்கிய சங்கத்தின் பட்டிமன்றப் பிரிவு நடத்தும் பண்டிதர் பொன். சுகந்தன் தலைமையிலான சிறப்புப் பட்டிமன்றம் நடைபெறும்.

இப்பட்டிமன்றமா[illegible] இன்றைய நவீன தொழில்நுட்ப சாதனங்கள் வாசிப்பு பழக்கத்தை அதிகரிக்கின்றதா? அதிகரிக்கவில்லையா? எனும் தலைப்பிலேயே நடைபெறவுள்ளது. (அ-9)

# தெல்லிப்பழை ஆ.வை.சாலைக்கு வீதி விளக்குகள் பொருத்தப்பட்டன

(மல்லாகம்)

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு செல்லும் நோயாளர்களின் நன்மை கருதி வைத்தியசாலை வீதிக்கான மின் குமிழ்கள் வலி.வடக்கு பிரதேச சபையினால் பொருத்தப்பட்டுள்ளதாக வலி. வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் எஸ்.சுகிர்தன் தெரிவித்தார்.

மேற்படி மின்விளக்குகள் தெல்லிப்பழை சந்தியிலிருந்து வைத்தியசாலை வரைக்குமான பகுதிக்கும் வைத்தியசாலையில் இருந்து பாதுகாப்பு வலயம் வரைக்குமான பகுதிகளுக்கு பொருத்தப்பட்டுள்ளன. தெல்லிப்பழை ஆதாரவைத்தியசாலைப் பிரதேசமானது உயர்பாதுகாப்பு வலயத்தில் இருந்து விடுவிக்கப்பட்டு மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட பிரதேசம் ஆகையால் தெல்லிப்பழை வைத்தியசாலை வரையிலான வீதிக்கு அண்மையில் மின்விநியோகம் வழங்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கத்தினால் குறித்த வீதிக்கு மின்விளக்குகளை பொருத்தி உதவுமாறு வலி. வடக்கு பிரதேச சபையிடம் விடுத்த வேண்டுகோளுக்கமைவாக வைத்தியசாலை வீதிக்கான மின் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. வீதிகளுக்கான மின்விளக்குகள் வலி.வடக்கு பிரதேச சபையின் வருடாந்த நிதியில் இருந்து பொருத்தப்பட்டுள்ளதாகவும் தவிசாளர் தெரிவித்தார்.

இவ்வீதிக்கு மின்விளக்குகள் பொருத்தப்பட்டமையினால் இரவு வேளைகளில் வைத்திய சாலைக்கு செல்லும் நோயாளர்கள் மிகவும் நன்மையடைகின்றனர். தமது கோரிக்கையினை ஏற்று வைத்தியசாலை வீதிக்கான மின்விளக்குகளினை பொருத்தி தந்த வலி. வடக்கு பிரதேச சபைக்கு தமது நன்றிகளை தெல்லிப்பழை ஆதூர வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கத்தினர் தெரிவித்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். (அ-9-21)

## அநுராதபுரத்தில் மஞ்சள் மழை!

அனுராதபுரம்-திரிப்பனே-லபுன்னெருவ பகுதியில் நேற்றையதினம் காலை மஞ்சள் மழை பெய்துள்ளது.

சுமார் 10 நிமிடங்களுக்கு இந்த மஞ்சள் மழை பெய்ததாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதற்கு முன்னர் தம்புள்ள, மெதிரிகிரிய, பதுளை ஆகிய பகுதிகளில் மஞ்சள் மழையும் பொலனறுவை, மொனராகலை உள்ளிட்ட பகுதிகளில் சிவப்பு மழையும் றுஹுணு பல்கலைக்கழகத்தில் மீன் மழையும் திஸ்ஸமகாராமவில் இறால் மழையும் மாத்தறையில் முதலை மழையும் பெய்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# மன்னார் வயல் நிலங்கள் அழிவடையும் நிலையில்

## விவசாயிகள் தெரிவிப்பு

(மன்னார்)

மல்வத்துஓயா பெருக்கெடுத்தமையாலும் கடந்த சில தினங்களாக தொடர்ச்சியாக கடும் மழை பெய்தமையாலும் மன்னார் மாவட்டத்தில் ஆயிரக்கணக்கான ஏக்கர் பெரும்போக நெற்செய்கை அழிவடையும் நிலையிலுள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

மன்னார் மாவட்டத்தின் நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கிராமங்களும் மடு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட கிராமங்களும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

இந்நிலையில் இக்கிராமங்களில் பெரும்போக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள வயல்களும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. நெற்செய்கை அழிவடையும் அளவிற்கு வெள்ள நீர் வயல்களில் தேங்கியுள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

மன்னாரில் இம்முறை 50 ஏக்கர் நிலப்பரப்பில் பெரும்போக நெற்பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# புகலிடம் கிடைக்காத சிறுவர்கள் தொடர்பில் எமக்கு அறிவியுங்கள்

## தே. சி. பா. அதிகார சபை

வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு இதுவரை புகலிடம் கிடைக்காத சிறுவர்கள் இருப்பின், அவர்கள் குறித்து தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு அறிவிக்குமாறு மக்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்தகைய சிறுவர்கள் தொடர்பான தகவல்களை 1929 என்ற விசேட தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அறிவிக்குமாறு அதிகார சபையின் தலைவரும் சட்டத்தரணியுமான அனோமா திசாநாயக்க அறிவுறுத்தியுள்ளார்.

சுனாமி சட்டத்தின் பிரகாரம் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்குள் பொறுப்புகளை நிறைவேற்றும் செயற்பாடுகளின் போது சில பிரதேசங்களுடன் இணைப்புகளை ஏற்படுத்துவதற்கு கடந்த காலங்களில் அசௌகரியங்கள் காணப்பட்டதாக அவர் குறிப்பிடுகிறார்.

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட சில சிறுவர்களுக்கு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினால் வழங்கப்பட வேண்டிய பராமரிப்புகள் உரியவாறு கிடைக்கவில்லை என்பது தற்போது தெரியவந்துள்ளதாக அவர் கூறினார்.பிரதேச செயலகங்களுக்கு புதிதாக சேர்க்கப்பட்டுள்ள சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் ஊடாக தேவையான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு திட்டமிட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# சிவனொளிபாத மலைக்கு கேபிள் கார் திட்டம்

(கொழும்பு)

சிவனொளிபாத மலைக்குச் செல்கின்ற பக்தர்களினதும் சுற்றுலாப் பயணிகளினதும் வசதி கருதி கேபிள் கார்களை உபயோகிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக சுற்றுச்சூழல் பாதுகாப்பு அறக்கட்டளையின் நிறைவேற்று அதிகாரி திலக் காரியவசம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அண்மையில் நடைபெற்ற குருவிட்ட பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் இதற்கான உத்தேசத்திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளதாக பொதுநிர்வாக அமைச்சர் டபிள்யூ.டி.ஜே.செனவிரட்ன கூறியுள்ளார்.

இதற்கமைய நல்ல தண்ணியிலிருந்து மீனவவாடிவரை ஒரு கேபிள் கார்த்தடமும் அரிதான தாவரங்களைக் கொண்ட உயிரின பன்மைப் பகுதியூடாக ஏராதனவிலிருந்து ஸ்ரீபாதஸ்தானவரை மற்றைய கேபிள் கார்த்தடமுமாக இரு கேபிள் கார்த்தடங்கள் அமைக்கப்படவுள்ளன.

இதேபோன்று நக்கிள்ஸ் மலைத் தொடரிலும் வெதிஹிரிகந்த புனித பகுதியிலும் கேபிள் கார்த்திட்டம் செயற்படுத்தப்படும் எனவும் அவர் கூறினார்.

கேபிள் கார்த் திட்டங்களை ஆய்வு செய்வதற்காக அவுஸ்திரேலியா மற்றும் ஹங்கேரி போன்ற நாடுகளுக்கு பல அமைச்சர்கள் விஜயம் செய்துள்ளதாக தெரிவித்த திலக் காரியவசம், இருப்பினும் இந்த திட்டத்தில் சமய, கலாசார மற்றும் சுற்றுச்சூழல் ஆகியவற்றின் தாக்கம் மீதான பாரதூரமான விளைவுகள் குறித்தும் கவனம் செலுத்தப்பட வேண்டிய அவசியம் உள்ளது எனவும் கூறினார். (அ-2)


## பழுதடைந்த முச்சக்கர வண்டிக்கான கேள்வி கோரல்

எமது இல்லப் பாவனையிலுள்ள பழுதடைந்த முச்சக்கர வண்டியைக் கேள்விகோரி விற்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

30.12.2012ற்கு முன்னர் நேரிலோ அல்லது பதிவுத் தபாலிலோ தங்களது கேள்விக் கோரிக்கைகளைச் சமர்ப்பிக்கலாம். வாகனத்தினை அலுவலக நேரத்தில் பி.ப 1.00 மணி வரை பார்வையிடலாம்.

தொடர்புகளுக்கு :- தி.இராசநாயகம், தலைவர்
மகாதேவா ஆச்சிரமச் சிறுவர் இல்லம்
ஜெயந்திநகர், கிளிநொச்சி.
தொலைபேசி இலக்கம் :- 077 0604950, 021 4923118

(-1926)



இவர்களுக்கு மணமகள் தேவை — கல்யாண மாலை — இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1987 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: திருவாதிரை 3<br>உயரம்: 5'6''<br>கி.பா: 20.75<br>தொழில்/ தகைமை: BBA, MBA (UK)<br>தொ. இல: B -858 | பிறப்பு: 1977 RC<br>உயரம்: 5' 4''<br>தொழில்/ தகைமை: A/L , நிர்வாகமும் நிதிப்பொறுப்பும்<br>தொ. இல: G -884 |
| பிறப்பு: 1983 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: உத்தராடம் 1<br>உயரம்: 5'6''<br>கி.பா: 17.25, 8 இல் செவ்.<br>தொழில்/ தகைமை: Network Engineering (BSc)<br>தொ. இல: B -859 | பிறப்பு: 1974 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: பூராடம் 3<br>உயரம்: 5'5''<br>கி.பா: 29<br>தகைமை: BA, MEd ஆசிரியை<br>தொ. இல: G -885 |
| பிறப்பு: 1977 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: திருவாதிரை 2<br>கி.பா: 13.75<br>உயரம்: 5' 6''<br>தொழில்/ தகைமை: இ.போ.ச (சாலைப்பரிசோதகர்)<br>தொ. இல: B -861 | பிறப்பு: 1973 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: மகம் 3<br>கி.பா.:4.5<br>உயரம்: 5' 3''<br>தொழில்/ தகைமை: அச்சகம் சம்பந்தமான வேலை (சொந்தம்)<br>விவாகரத்தானவர் தொ. இல: G -886 |
| பிறப்பு: 1981 RC வேளாளர்<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>உயரம்: 5'2''<br>தொழில்/ தகைமை: B.Com (Management) (வங்கி உதவி முகாமையாளர்)<br>தொ. இல: B -862 | பிறப்பு: 1989 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: பூசம்<br>உயரம்: 5' 3''<br>கி.பா: 54<br>தொழில்/ தகைமை: A/L<br>தொ. இல: G -888 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டில் பெய்துவரும் கடும் மழையால் வெள்ளத்தில் தத்தளிக்கும் கிராமங்கள்

(யாழ்ப்பாணம்)


யாழ்.குடாநாட்டில் கடந்த சில நாட்களாக பெய்துவரும் கனமழையினால் தாழ் நிலப் பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

தொடர்ச்சியான மழையின் காரணமாக மக்களின் அன்றாட நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதோடு தொற்றுநோய்களும் பரவும் அபாயமும் நிலவுகின்றது.

சனநெரிசல் மிக்க இடங்களில் உள்ள மக்களின் வாழ்க்கை நிலை மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

பொம்மைவெளி, சூரியவெளி, வசந்தபுரம், நித்தியவெளி, காக்கைதீவு, குருநகர், பாசையூர், கொழும்புத்துறை போன்ற கரையோரப் பகுதிகளிலும் நல்லூர் யமுனா ஏரி போன்ற இடங்களிலும் வெள்ளத்தின் பாதிப்புக்கள் அதிகமாகவே உள்ளன.

சில இடங்களில் மழையில் நனையாமல் வாழ்வதற்குக்கூட ஒரு வீடு இல்லை, குடிநீர் வசதியில்லை, மலசலகூடம் உட்பட எவ்வித


அடிப்படை வசதிகளும் இன்றியே இவர்கள் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.

குடிசை வீடுகளுக்குள்ளும் வெள்ளம் புகுந்துள்ளதால் மக்கள் சமைப்பதற்காக அருகில் உள்ள கட்டடங்களை நாடியுள்ளனர்.

இவ்வெள்ளத்தினால் பொம்மைவெளியும் அதனை அண்டிய பிரதேசங்களும் கடும் பாதிப்புக்குள்ளாகியுள்ளன.

மலசலகூடங்களுக்குள்ளும் வெள்ளநீர் உட்புகுந்து பெரும் சுகாதார சீர்கேட்டை ஏற்படுத்தியுள்ளது.

அப்பகுதி மக்கள் இரும்பு விற்பனையில் ஈடுபடுவதனால் அப்பகுதி எங்கும் உக்கல் இரும்புகளும் தகரங்களும் குவிந்துள்ளன.

இதனால் அங்கு நுளம்பு பெருகும் அபாயமும் வயிற்றுளைவு, வாந்திபேதி போன்ற நீர் சம்பந்தமான நோய்களும் ஏற்படும் ஆபத்துக்கள் உள்ளன.

வெள்ளத்தில் மிதந்துவரும் கழிவுகள் வீட்டிற்குள்ளும் சென்றுவிடுவதாக சூரியவெளியில் இருக்கும் வயோதிபத்தாய் ஒருவர் வருத்தத்துடன் தெரிவித்தார்.

இதனால் தமது பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்லமுடியாது காணப்படுவதாகவும் தாய் ஒருவர் வருத்தம் தெரிவித்தார்.

நாடு முழுவதும் உதவி வழங்கும் தொண்டு நிறுவனங்கள் எம் நிலைகண்டும் ஒரு சிறு உதவி செய்வதற்குக்கூட முன்வருவதில்லை என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

வயல்களில் உள்ள குளங்கள், பாழடைந்த கிணறுகளை வெள்ளம் மூடியுள்ளதால் அபாயமான இடங்கள் எங்கு உள்ளன என்பதனை இனங்காண முடியாத அபாயநிலை காணப்படுகின்றது.

இதனால் ஒழுகும் வீட்டிற்குள் வைத்திருக்கவேண்டிய நிலை உள்ளதாக அவர்கள் வருத்தத்துடன் கூறுகின்றனர்.

தம்முடைய காணிகளுக்கு உறுதியில்லை என்ற காரணத்திற்காகவே எமக்கு இதுவரை யாரும் உதவிகள் செய்ய முன்வருவதில்லை எனவும் நாம் இங்கு குடிய மர்ந்து 10 வருடங்களாகியும் இதுவரை எவ்வித நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை எனவும் தற்போது பெய்துவரும் மழையினால் ஏறக்குறைய நாம் இடம்பெயர்ந்தவர்களாகவே ஆக்கப்பட்டு விட்டோம் என தமது வீடுகளுக்குள் வெள்ள நீர் புகுந்த குடும்பங்கள் தெரிவிக்கின்றன.

யாழ். நகருக்கு அருகில் ஒரு பிரதேசம் இவ்வாறு பின்தங்கி இருப்பது யார் கண்ணிலும் புலப்படவில்லையா என அவர்கள் கேள்வியெழுப்புகின்றனர்.

பாதிக்கப்பட்ட கிராமங்களுக்கு நேரில் சென்ற யாழ்ப்பாணம் பிரதேச செயலர் திருமதி தெய்வேந்திரம் சுகுணரதி அங்குள்ள மாசடைந்த இடங்களை பார்வையிட்டதோடு அவற்றினைத் துப்புரவு செய்யுமாறும் அறிவுறுத்தியுள்ளார்.

மேலும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 2011 ஆம் ஆண்டு சுற்று நிருபத்திற்கு அமைவாக உலருணவு வழங்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இப்பிரதேச மக்களின் உதவியுடன் அண்மையில் சிரமதானம் ஒன்றினை இப்பகுதியில் மேற்கொள்ளவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

**முல்லைத்தீவு மாவட்டத்தில்........**

முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடர்ச்சியாக பெய்து வரும் மழை காரணமாக ஆயிரக்கணக்கான குடும்பங்கள் இடம்பெயர்ந்து பாடசாலைகளிலும் பொது மண்டபங்களிலும் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் சிராட்டிகுளம் என்னும் கிராமத்தில் 65 குடும்பங்கள் பறங்கியாறு பெருக்கெடுத்ததன் காரணமாக வெளியுலக தொடர்பை இழந்துள்ளனர்.

இதேவேளை இவர்களை உலங்கு வானூர்தி மூலம் வெளியே கொண்டு வருவதற்கு இராணுவத்தினர் முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர்.

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் மு/ தேராங்கண்டல் அ.த.க.பாடசாலையில் 25 குடும்பங்களும் கல்விளான் அ.த.க. பாடசாலையிலும் அங்குள்ள பொது மண்டபத்திலும் 40 இற்கு மேற்பட்ட குடும்பங்களும் யோகபுரம் கிழக்கு கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த 25 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் மு/ பாலிநகர் மகா வித்தியாலயத்திலும் 15 குடும்பங்கள் மு/ யோகபுரம் மகா வித்தியாலயத்திலும் மு/ அனிஞ்சியன் குளம் தமிழ் வித்தியாலயத்தில் 20 இற்கு மேற்பட்ட குடும்பங்களும் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் மந்துவில் கிராமத்தில் 225 குடும்பங்களும் ஆனந்தபுரம் கிராமத்தில் 50 இற்கு மேற்பட்ட குடும்பங்களும் தங்க வைக்கப்பட்டுள்ள இதேவேளை ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள மாங்குளம் கிராமத்தில் பல இடங்களில் இருந்தும் 150 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் மாங்குளம் மகா வித்தியாலயத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் முள்ளியவளை, குமுழமுனை, செம்மலை, அளம்பில், நாயாறு கிராமங்களில் இருந்து பல நூற்றுக்கணக்கான குடும்பங்கள் இடம்பெயர்ந்து பொது இடங்களிலும் உறவினர், நண்பர் வீடுகளிலும் தங்கியுள்ளனர்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு சமைத்த உணவினை உடனடியாக வழங்குமாறும் பாதிக்கப்பட்ட மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு நகர்த்துமாறும் முல்லை. மாவட்ட அரச அதிபர் நா. வேதநாயகம் அனைத்து பிரதேச செயலாளர்களுக்கும் பணிப்புரை விடுத்துள்ளார்.

முல்லை மாவட்டத்தில் உள்ள அநேகமான குளங்கள் உடைப்பெடுக்கின்ற அபாயத்தில் இருப்பதால் பாதுகாப்பான இடங்களுக்கு நகர்ந்து செல்வதற்கு தயாராக இருக்குமாறு முல்லை. மாவட்ட அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் பிரிவினால் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஏனைய உதவிகளான பாய், நுளம்பு வலை, சிறு குழந்தைகளுக்கான பால்மா, லாந்தர் விளக்கு என்பவற்றை பொது அமைப்புக்கள் அந்தந்தப் பகுதி பிரதேச செயலகங்களிடம் ஒப்படைத்து உதவுமாறு முல்லை மாவட்ட அரச அதிபர் கேட்டுள்ளார்.

**கிளிநொச்சி மாவட்டத்தில்....**

கிளிநொச்சி மாவட்டத்தில் வெள்ளப் பாதிப்பு காரணமாக அப்பகுதி மக்கள் பாடசாலைகளில் தஞ்சமடைந்துள்ளனர். இதில் தொடர் மழை காரணமாக கல்மடுக்குளத்தின் நீர் அதிகரித்து வெளியேறுகின்றமையால் தர்மபுரம், கட்டைக்காடு, பெரியகுளம் , புளியம்பொக்கணை ஆகிய கிராமங்களின் பெரும்பாலான பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. குறிப்பாக தாழ் நிலப்பகுதி வீடுகளுக்குள் வெள்ளநீர் உட்புகுந்தமையால் அங்கு வசிக்கும் மக்கள் புளியம்பொக்கணை நாகேஸ்வரா வித்தியாலயம், கட்டைக்காடு அ.த.க. பாடசாலை, தர்மபுரம் இல 1 அ.த.க.பாடசாலை ஆகிய பாடசாலைகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு முதற்கட்டமாக கிராம அமைப்புக்களாலும் கிராம அலுவலராலும் சமைத்த உணவுகள் வழங்கப்பட்டு வருவதுடன் குடிநீர், சுகாதார வசதி என்பனவும் ஏற்படுத்தி கொடுக்கப்பட்டுள்ளன. ஏனைய பொருட்கள் வழங்கப்படாமையால் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை பெரும் சிரம நிலையில் உள்ளனர். (அ-4-3-15-263)

# தேசிய பாடசாலைகளுக்கு அதிபர்களை நியமிக்க முடிவு

## கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

தேசிய பாடசாலைகளுக்கு புதிதாக 102 அதிபர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

புதிதாக அதிபர்களை சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் கோத்தபாய ஜயரட்ன குறிப்பிடுகின்றார்.

அதிபர் தரம் ஒன்றில் உள்ளவர்களையே புதிதாக சேர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் நடவடிக்கைகள் இம்மாதம் 30 ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளன. கடந்த காலங்களில் புதிதாக அதிபர்களை சேர்த்துக் கொள்ளும் நடவடிக்கையில் தாமதம் நிலவியதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# என்னை பதவிவிலக்குவதற்காக அரச ஊடகங்கள் பிரசாரம்

## பிரதம நீதியரசர் தெரிவிப்பு

(கொழும்பு)

அரச ஊடகங்கள் சேறுபூசும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார். இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிரதம நீதியரசர், சிரேஷ்ட சட்டத்தரணிகள் மற்றும் நீதிமன்றக் கட்டமைப்பை இழிவுபடுத்தும் நோக்கில் அரசாங்க ஊடகங்களில் திட்டமிட்டு பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆளும் கட்சியைச் சேர்ந்த சிலர் இந்த அடிப்படையற்ற போலிப் பிரசாரத்தை வழிநடத்தி வருகின்றனர்.

பதவி விலகுமாறு அழுத்தம் கொடுத்தே இந்தப் பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சட்ட ரீதியாக தம்மை பதவி விலக்க முடியாது என அரசாங்கம் புரிந்து கொண்டுள்ளதனால் இவ்வாறு போலிப் பிரசாரங்களை கட்டவிழ்த்து விடுவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதிகளை ஊடறுத்து பாய்கிறது வெள்ளம்

## வீதி சீரமைக்கப்படாமையே காரணம்

கல்லாறு சுண்டிக்குளம் பிரதான வீதியில் மூன்று இடங்களில் வெள்ளம் பெருக்கெடுத்து பாய்வதால் பயணிக்க முடியாது மக்கள் அல்லலுறுகின்றனர்.

இவ்வாறு அமோகமாக பாயும் வெள்ளத்தினால் தினமும் பயணிக்கும் கடற்றொழிலாளர்கள் மற்றும் பயணிகள் செய்வதறியாது தவிக்கின்றனர்.

இவ்வாறு வெள்ளம் வீதியை ஊடறுத்துப் பாய்வதால் நீந்திச் செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலையும் காணப்படுகின்றது.

இடப்பெயர்வின் பின் இவ்வீதி புனரமைக்கப்படாமையும் வீதிக்கு கீழான பாலங்கள் அமைத்து தண்ணீர் பாய்வதற்கு ஏற்ப ஒழுங்குகள் மேற்கொள்ளப்படாமையுமே இவ்வாறு வீதியை வெள்ளம் ஊடறுத்துப் பாய்வதற்கு காரணமாகும்.

இப்பகுதி மக்கள் வீதியைப் புனரமைத்து தருமாறு பல தடவைகள் உரிய தரப்பினரிடம் விடுத்திருந்தும் எக்கோரிக்கை வேலைகளும் இடம்பெறவில்லை.

இதன் காரணமாக இப்பரிதாப நிலை காணப்படுகின்றது. தமது வாழ்வாதாரத் தொழிலாக மேற்கொண்டு வாடும் கடற்றொழிலாளர்கள் இவ்வீதியால் பயணிக்க முடியாத காரணத்தால் தொழிலுக்குச் செல்ல முடியாத நிலையில் வாழ்வாதாரப் பிரச்சினையை எதிர்கொள்ள வேண்டிய அவல நிலையில் உள்ளனர்.

எனவே மழை முடிவுற்ற பின்னாவது இவ்வீதிப் புனரமைப்பை மேற்கொள்ள உரிய தரப்பினர் முன்வர வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-264)

# இயற்கை அனர்த்தம் பற்றிய எதிர்வுகூறல்

✴ இலங்கையில் இவ்வாண்டு ஏற்பட்ட ஒவ்வொரு நில அதிர்வும் இயற்கையானது என எனது ஆய்வுகள் உறுதிசெய்கின்றன. அந்த வகையில் 28.12.2012 முதல் 03.01.2013 வரையான காலப் பகுதிக்குள் இலங்கையில் நில அதிர்வு உணரப்பட வாய்ப்புண்டு. இதற்கமைவான துல்லியப் படுத்தப்பட்ட இரு நாட்கள் (31.12.2012, 01.01.2013)

மீண்டும் ஜனவரி மாத இறுதிக்குள் நான்கு நில அதிர்வுகள் வெளிப்பட வாய்ப் புகள் அதிகமாகவே உள்ளன. இவை பற்றி மேலதிக ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின் றன.

✴ 28.12.2012 முதல் 05.01.2013 வரையான காலப்பகுதிக்குள் புவியின் எந்தவொரு பகுதியிலாவது பாரிய நில அதிர்வு இடம்பெறலாம். துல்லியப்படுத்தப் பட்ட இரு நாட்கள் (31.12.2012, 01.12.2013)

✴ 30.12.2012 முதல் 05.01.2013 வரையான காலப்பகுதிகளுக்குள் புவியின் எந்தவொரு பகுதியிலாவது பாரிய எரிமலை வெடிப்பு நிகழலாம்.

✴ 08.01.2013 முதல் 12.01.2013 வரையான காலப்பகுதிக்குள் இலங்கையில் வட கிழக்குப் பருவ மழை தீவிரம் அடைந்து அதிகப்படியான மழை வீழ்ச்சியைத் தரலாம். இக்காலப்பகுதியில் குளங்களுக்கு நீரேந்து பிரதேசங்களில் இருந்து நீர் வரத்து அதிகமானதாக இருக்கும். அதனால் வடகிழக்கு பிரதேசத்திலுள்ள குளங்களில் உள்ள மேலதிக நீரையும் அதற்கு மேலாகவும் வெளியேற்றி தயார் நிலையில் இருக்க வேண்டும். சில வேளைகளில் அனர்த்த நிலை ஏற்பட்டால் அதற்கான தற்காப்பு உபாயங்களை கையாளுதல் வேண்டும்.

**வி.கணேசமூர்த்தி,**
**விசுவமடு.**

### மின்னல் தாக்கத்தால்

# மஹரகம வைத்தியசாலைக்கு 15 கோடி ரூபா நட்டமடைவு

(கொழும்பு)

மஹரகம புற்றுநோய் வைத்தியசாலை மின்னல் தாக்கத்தால் சுமார் 15 கோடி ரூபா பெறுமதியான கதிர்வீச்சு சிகிச்சை வழங்கும் அலகொன்று முற்றிலுமாக சேதமடைந்துள்ளதாக தெரியவருகின்றது.

வைத்தியசாலையில் மொத்தம் 4 கதிர் வீச்சு சிகிச்சை வழங்கும் பிரிவுகள் உள்ளதாகவும் அதில் ஒரு அலகொன்றே மின்னல் தாக்கத்தால் சேதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதில் தினசரி 100 நோயாளிகள் வரை சிகிச்சை பெற்று வந்ததாகவும் தெரிவிக்கப் படுகின்றது.

இதனையடுத்து சிகிச்சை பெற வரும் பயணிகள் திருப்பியனுப்பப்படுவதாகவும் இதனை பழைய நிலைக்கு கொண்டு வருவதற்கு இன்னும் சில தினங்கள் செல்லும் எனவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (அ-2)

### கூகுள் இணையத்தில்

# பாலியல் குறித்த தேடலில் இலங்கையர்கள் ஆர்வம்

(கொழும்பு)

கூகுள் இணைய தளத்தில் பாலியல் தொடர்பான தேடலில் அதிகம் ஈடுபடுவோர் இலங்கையர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கூகுள் இணையதேடு தளத்தில் செக்ஸ் என்ற பதத்தை அதிகளவில் தேடிய நாடுகளின் வரிசையில் இலங்கை முதனிலை வகிக்கின்றது. 2012 ஆம் ஆண்டின் கூகுள் புள்ளி விப ரத் தரவுகளின் அடிப்படையில் இந்தத் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இப்பட்டியலில் இந்தியா இரண்டாம் நிலை வகிப்பதுடன் பப்புவா நியூகினியா மூன்றாம் இடத்தை வகிக்கின்றது.

எதியோப்பியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகள் முறையே நான்காம், ஐந்தாம் இடங்களை வகிக்கின்றன.

கடந்த ஏப்ரல் மாதம் 15 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரையில் அதிகளவான இலங்கையர்கள் செக்ஸ் என்ற பதத்தை கூகுளில் தேடியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# ஜப்பானின் புதிய பிரதமருக்கு ஜனாதிபதி மஹிந்த வாழ்த்து

(கொழும்பு)

ஜப்பானில் நடைபெற்று முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று புதிய பிரதமராகப் பதவியேற்றிருக்கும் ஷின்சோ அபேக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

ஜப்பானின் புதிய பிரதமருக்கு ஜனாதிபதி அனுப்பி வைத்திருக்கும் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, ஜப்பானிய மக்கள் உங்கள் தலைமைத்துவத்தின் மீது வைத்திருக்கும் அசைக்க முடியாத நம்பிக்கையை நடைபெற்று முடிந்த பாராளுமன்றத் தேர்தல் எடுத்துக்காட்டியுள்ளது.

அரசியல் அரங்கில் உங்களுக்குக் காணப்படும் உரிமை வெளிக்காட்டப்பட்டுள்ளது. ஜப்பானிய மக்கள் மனநிறைவை எட்டுவதற்கு உங்கள் தலைமையிலான அரசாங்கம் தகுந்த வழிகாட்டல்களை வழங்கும் என நான் நம்புகின்றேன்.

ஜப்பான்- இலங்கை ஆகிய இரு நாட்டுக்கும் இடையிலான நட்புறவு தொடர்ந்தும் வெற்றிகரமாக முன்கொண்டு செல்லப்படும் என நான் நம்புகின்றேன்.

இலங்கைக்கும் ஜப்பானுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகள் தோற்றம் பெற்று 60 வருடங்கள் பூர்த்தியடைந்திருக்கும் நிலையில் இரு நாட்டுக்கும் இடையிலான நட்புறவுகள் மேலும் பலமடையும் என எதிர்பார்க்கின்றேன் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

# வடக்கு பொலிஸாருக்கு தமிழ்மொழி பயிற்சி

(கொழும்பு)

வடக்கில் கடமையாற்றுகின்ற பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு தமிழ்மொழி பயிற்சி அளிக்கப்பட வுள்ளது.

இதற்கமைய யாழ்ப்பாணம், வவு னியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய பிரதேசங்களில் கடமையாற்றி வரும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு விசேட தமிழ் மொழிப் பயிற்சி வழங்கப்படவுள்ளது. பொலிஸ் உத்தியோகத்தர் களுக்கு மொழிப் பயிற்சி அளிக்க வேண்டியது அவசிமானது என தேசிய மொழிகள் அமைச்சு அறிவித்துள்ளது. ஐந்து மாதங்கள் இந்த மொழிப் பயிற்சி வழங்கப்படவுள்ளது. (அ-2)

# இந்தோ.வின் உதவியை அஸி.அகதிகள் நிராகரிப்பு

(கொழும்பு)

இந்தோனேசிய கடற்கரையில் தரைதட்டியுள்ளபடகில் உள்ளவர்கள் இந்தோனேசிய அதிகாரிகளின் உதவிகளை நிராகரித்துள்ளனர்.

இந்தோனேசிய தகவல்களின்படி இலங்கையர்கள் இருக்கலாம் என்று நம்பப்படும் இந்தப் படகு குறித்த நாட்டின் மெண்டாவாய் தீவுப் பகுதியில் இயந்திரப் பிரச்சினை காரணமாக தரைதட்டியுள்ளது.

படகில் உள்ள 40 பேரையும் காப்பாற்ற இந்தோனேசிய அதிகாரிகள் குழு ஒன்றை அனுப்பினர். எனினும் படகில் இருந்தோர் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை.

பதிலாக தமக்கு அவுஸ்திரேலிய அதிகாரிகள் உதவ வேண்டும் என்று படகில் உள்ளவர்கள் கோரியுள்ளனர். (அ-2)



யாழ்ப்பாணம் கோண்டாவில் சபரீச ஐயப்ப தேவஸ்தானத்தின் மகரஜோதிப் பெருவிழாவில் நேற்று முன்தினம் நல்லூர் நடராஜா பரமேஸ்வரி திருமண மண்டபத்தில் வைத்து ஐயப்ப சுவாமிமார்களுக்கு இரு முடிகட்டி யானை மீது ஐயப்பன் பவனி வர சுவாமிமார்கள் ஊர்வலமாக வரும் நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்வினைப் படங்களில் காணலாம். (படங்கள்:-எஸ்.ஆர்.கரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தமான் கடலில் காற்றழுத்த நிலை

இலங்கை அருகே வங்கக்கடலில் புதிய காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகியிருப்பதாக தமிழக வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

வடகிழக்கு பருவமழை இவ்வாண்டு எதிர்பார்த்த அளவுக்குப் பெய்யவில்லை. வங்கக் கடலில் அடுத்தடுத்து காற்றழுத்த தாழ்வு நிலைகள் உருவானாலும் அவற்றால் தமிழகத்தில் பாரியளவில் மழை பெய்யவில்லை.

கடந்த 3 நாட்களுக்கு முன்பு அந்தமான் கடலில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வுநிலை காரணமாக தென் கடலோர தமிழகத்தில் இலேசான மழை பெய்தது.

இந்நிலையில் இலங்கை அருகே வங்கக் கடலில் புதிய காற்றழுத்த தாழ்வுநிலை உருவாகியிருப்பதால் தரைக்காற்றும் 55 கிலோ மீற்றர் வேகத்தில் வீசும் என்றும் நாளைய தினம் சில பகுதிகளில் ஓரளவு கனமழை பெய்யும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்தக்காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக இலங்கையின் வடக்கு, கிழக்கு மற்றும் தெற்கு பகுதிகளில் ஆங்காங்கே மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. (அ-2)

# ஆயுத மோதல் கோவையை மூடிய ஐக்கிய நாடுகள் சபை

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையானது இலங்கை தொடர்பிலான சிறுவர்கள் மற்றும் ஆயுத மோதல்கள் கோவையை மூடியுள்ளது.

கடந்த 19 ஆம் திகதியன்று இந்தக் கோவை மூடப்பட்டதாக இலங்கையின் வெளியுறவு அமைச்சு தெரிவித்துள்ளது. முன்னதாக இலங்கையில் சிறுவர்களும் ஆயுதங்களும் தொடர்பான பிரச்சினை தொடர்பில் ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபை தொடர்ந்தும் கவனம் செலுத்தி வந்தது.

இந்நிலையில் இலங்கையின் ஆயுத மோதலில் ஈடுபடுத்தப்பட்ட சிறுவர்கள் புனர்வாழ்வு அளிக்கப்படுவதை அடுத்து ஐ.நா. பாதுகாப்பு சபை அக் கோவையை மூட தீர்மானித்தது. (அ-2)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண நிதி ஒதுக்கீடு

## அமைச்சர் றிசாத் தெரிவிப்பு

(கொழும்பு)

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வன்னி மாவட்ட மக்களின் நிவாரணத்திற்கு தேவையான நிதியினை அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமரவீர ஒதுக்கீடு செய்துள்ளதாக வன்னி மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவரும் அமைச்சருமான றிசாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அமைச்சர் தெரிவிக்கையில்,

சீரற்ற காலநிலையால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கால் மடு, முசலி, நானாட்டான், மன்னார் நகர பிரதேச செயலகப் பிரிவில் உள்ள மக்கள் பாதிப்புக்குள்ளாகியுள்ளதாகவும் இவர்களுக்கு நிவாரணங்களை வழங்கத் தேவையான நிதிகளை மாவட்ட செயலாளர்களுக்கு வழங்குமாறும் தாம் அமைச்சர் மஹிந்த அமரவீரவிடம் கேட்டுக் கொண்டதற்கமைவாக போதுமான நிதியினை ஒதுக்கீடு செய்துள்ளார்.

அதேவேளை, வெள்ளத்தால் மடு, சிலாபத்துறை பிரதேசங்களுக்கான போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளதாக நிவாரணப் பொருட்களை அக்கிராமங்களுக்கு எடுத்துச் செல்ல முடியாதுள்ள நிலையில் கடற்படையின் உதவியுடன் படகு மூலம் அதனை விநியோகிக்க போதுமான நடவடிக்கையெடுக்குமாறு அப்பிரதேசங்களுக்குப் பொறுப்பான கடற்படை பொறுப்பாளர்களுக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு நட்ட ஈடு வழங்கத் தேவையான உதவிகளை நல்குமாறு விவசாய அமைச்சர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் பாதிப்புக்குள்ளான விவசாயிகளின் விபரங்களை சேகரிக்குமாறு வடமாகாண விவசாய அமைச்சின் செயலாளர் மற்றும் பிராந்திய விவசாய பணிப்பாளர்களுக்கு பணிப்புரை வழங்கியுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# கஸ்தூரியார் வீதியில் கனரக வாகனங்கள் பயணிக்கத் தடை

## யாழ்.மாநகரசபை தீர்மானம்

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் பாரிய வாகனங்கள் செல்வதற்கு தடைவிதிக்க வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாநகரசபையில் அண்மையில் நடைபெற்ற மாதாந்த பொதுக்கூட்டத்தின் போதே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

குறித்த வீதியிலுள்ள கட்டடத்தின் மேல் வீதிக்கு குறுக்காக கட்டடங்களை இணைக்கும் நடைபாதையொன்று கொங்கிறீட்டினால் அமைக்கப்பட்டுள்ளது.

உயர்ந்த பெரிய வாகனங்கள் இவ்வீதியினூடாக செல்வதால் குறித்த இந்நடைபாதையின் கீழ்ப்பகுதி வாகனங்களினால் தேய்க்கப்பட்டு தற்போது உள்ளே உள்ள கம்பிகள் வெளித்தெரியும் வகையில் உள்ளன.

குறித்த கட்டடம் பழைமை வாய்ந்தது என்றும் புராதனச் சொத்துக்களில் ஒன்றாக பேணப்பட வேண்டியதனால் அதனை உரிய வகையில் பாதுகாக்கவேண்டும்.

அதனால் அத்தொங்கு நடைபாதைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் பெரிய வாகனங்களை அப்பகுதியில் பயணிப்பதற்குதடைவிதிக்குமாறு சபையில் கோரப்பட்டுள்ளது. இதனையடுத்தே மேற்படி தீர்மானம் கொண்டு வரப்பட்டது. (அ-4)

# தமிழ்- ஈரான் அகதிகள் ஆஸி.மனுஸ்தீவில் மோதல்

## 7 பேர் படுகாயம்

அவுஸ்திரேலியா மனுஸ் தீவில் தங்க வைக்கப்பட்டிருக்கும் அகதிகளுக்கிடையே கிறிஸ்மஸ் தினத்தன்று ஏற்பட்ட கைகலப்பில் 7 பேர் படுகாயமடைந்துள்ளதாக அவுஸ்திரேலிய தகவல்கள் தெரிவிக்கின்றன.

மனுஸ் தீவு அகதிகள் முகாமில் உள்ள இலங்கைத் தமிழ்ர்களுக்கும் ஈரான் அகதிகளுக்கும் இடையில் இம்மோதல் இடம்பெற்றுள்ளதாக அவுஸ்திரேலிய குடிவரவு அமைச்சர் கிறிஸ்போவன் உறுதி செய்துள்ளார்.

இணைப்பு அறையில் இந்த மோதல் ஏற்பட்டதாகவும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ள ஈரான் அகதிகள் விடுத்த அழைப்பை தமிழ் அகதிகள் மறுத்ததனாலேயே இந்த மோதல் ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அகதி முகாமில் சேவையில் இருந்து ஜி 4 எஸ் என்ற நிறுவனத்தின் ஊழியர் ஒருவரும் மோதலில் காயமடைந்துள்ளார்.

மோதல் குறித்து மனுஸ் தீவு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். மனுஸ் தீவில் 30 சிறுவர்கள், பெண்கள் உட்பட இலங்கை, ஈரான், ஆப்கான், ஈராக், பாகிஸ்தான் அகதிகள் 130 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# பாலியல் குற்றவாளி 20 வருடங்களின் பின் கைது

(கொழும்பு)

20 வருடங்களுக்கு முன்னர் பாலியல் வல்லுறவு குற்றச்சாட்டிற்குள்ளான நபரொருவரை கம்புறுபிட்டிய பொலிஸார் கைது செய்துள்ளனர்.

1992 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 3 ஆம் திகதி 14 வயதுடைய பாடசாலை மாணவியொருவரை பாலியல் வல்லுறவுக்குட்படுத்தியமை தொடர்பில் குறித்த நபர் கைது செய்யப்பட்டிருந்தார். மாவட்ட நீதிமன்றில் சந்தேக நபரை ஆஜர்ப்படுத்தியபோது அவருக்கு பிணை வழங்கப்பட்டது. பிணையில் வெளியே வந்த குறித்த சந்தேக நபர் தலைமறைவாகி விட்டார்.

அச் சமயத்தில் இச் சந்தேக நபர் 18 வயதுடைய வாலிபராக இருந்தார். குற்றவாளியாக இனங்காணப்பட்ட குறித்த நபருக்கு மாத்தறை உயர் நீதிமன்றம் 15 வருட கடூழிய சிறைத்தண்டனையும் 25 ஆயிரம் ரூபா தண்டமும் விதித்து தீர்ப்பளித்தது.

பாலியல் வல்லுறவு குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்ட குறித்த நபர் தலைமறைவாகிய தால் அவரை கண்ட இடத்தில் கைது செய்யுமாறு நீதிபதி உத்தரவு பிறப்பித்திருந்தார்.

இருந்தபோதிலும் குறித்த குற்றவாளியை கண்டு பிடிப்பதில் பாரிய சிக்கலை பொலிஸார் எதிர்கொண்டனர். இறுதியாக 20 வருடங்களின் பின்னர் கனன்கேயில் தனது மனைவியுடன் வசித்து வந்த நிலையில் கம்புறுபிட்டிய பொலிஸார் அவரை கைது செய்துள்ளனர். (அ-2)


# சொத்து விபரங்களை வெளியிடாத அரசியல்வாதிகளின் பெயர்கள் அம்பலமாகும்

## தேர்தல் ஆணையாளர் எச்சரிக்கை

சொத்து விரபங்களை இதுவரையில் வெளியிடாத அரசியல்வாதிகளின் பெயர்கள் அம்பலப்படுத்தப்படும் என தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 2013 ஆம் ஆண்டு ஜனவரி இந்தப் பெயர்கள் வெளியிடப்படும். சில அரசியல்வாதிகளும் கட்சிகளும் சொத்து விபரங்கள் பற்றிய தகவல்களை வழங்கி வருகின்றன. ஏற்றுக் கொள்ளப்பட்ட பிரதான அரசியல் கட்சிகளின் அரசியல்வாதிகள் சொத்து விபரங்களை வெளியிட்டுள்ளனர்.

எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னதாக சொத்து விபரங்களை வெளியிட முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)



யாழ்.சாவகச்சேரி கிழக்கு ஒழுங்கையில் அமைந்துள்ள ஸ்ரீ கல்கி இல்ல சிறுவர்களின் நத்தார் தின நிகழ்வுகள் அண்மையில் நடைபெற்றன. இந்நிகழ்வின் போது....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராகு-கேது பெயர்ச்சி பலன்கள்

## 02.12.2012-20.06.2014

ஜோதிடக் கலைமணி, சிவல்புரி சிங்காரம்

## தனுசு



மூலம், பூராடம், உத்ராடம் 1 ஆம் பாதம்

**இலாப ஸ்தான இராகுவால் நாளும் செல்வம் கூடிவரும்!** 80/100

**இரக்க சிந்தனையால் எல்லோர் மனதிலும் இடம்பெற்ற தனுசு இராசி நேயர்களே!**

நவக்கிரகங்களில் புத்திரகாரகன் என்று போற்றப்படும் குரு உங்கள் இராசிநாதனாக விளங்குகிறார். எனவே, நீங்கள் தலைமைப் பதவிக்கு தகுதி பெற்றவர்களாக விளங்குவீர்கள். தக்க சமயத்தில் மற்றவர்களுக்கு கைகொடுத்து உதவுவீர்கள். எப்பொழுதும் உற்சாகத்துடன் காணப்படுவீர்கள். எதிரியை பேசவைத்து எடைபோடுவதில் வல்லவர்கள். மதிவளம் உங்களிடம் இருப்பதால் மக்கள் மத்தியில் நல்ல செல்வாக்கைப் பெற்றிருப்பீர்கள். சொல்லாற்றல் மிக்கவர்களாக விளங்குவீர்கள். யாராக இருந்தாலும் தவறைத் தட்டிக் கேட்கத் தயங்க மாட்டீர்கள்.

சாமர்த்தியமாகப் பேசிச் சமாளிப்பது உங்களுக்கு கைவந்தகலை. சேமிப்பதை அக்கறையாகக் கொண்டாலும் செலவு செய்ய யோசிக்கமாட்டீர்கள். ஓய்வு என்ற சொல் அகராதியில் இருந்து அகற்றப்பட வேண்டும் என்று நினைப்பீர்கள். எடுத்த காரியங்களை எப்பாடுபட்டாவதும் முடித்து விடுவீர்கள். முன்கோபம் ஒன்றை மட்டும் குறைத்துக்கொண்டால் உங்களைப்போல் ஒரு நல்லவரை உலகில் காண இயலாது என்றே சொல்லலாம். அப்படிப்பட்ட நல்ல குணங்களைப் பெற்ற உங்களுக்கு இந்த இராகு-கேது பெயர்ச்சி எப்படிப்பட்ட மாற்றங்களை எல்லாம் வழங்கப்போகிறது என்பது பற்றிப் பார்ப்போம்.

**இலாபத்தை வரவழைத்துக் கொடுக்கும் பதினொராமிடத்து இராகு!**

**வாரிசுகளை வளர்ச்சியடைய வைக்கும் ஐந்தாமிடத்து கேது!**


இதுவரை விருச்சிக இராசியில் சஞ்சரித்துவந்த இராகுவும் இடப இராசியில் சஞ்சரித்துவந்த கேதுவும் தனது வான்வெளிப் பயணத்தில் 02.12.2012 அன்று பின்னோக்கிச் சென்று வாழ்க்கையில் பல திசை திருப்பங்களை உருவாக்கப்போகிறார். இலாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் இராகு உங்களுக்கு இலாபத்தை அள்ளி வழங்கப்போகிறார். எனவே, இனி உங்களுக்கு சோகங்கள் விலகும். சுகங்கள் கூடும். தேகநிலையிலும் தெளிவு பிறக்கும்.

உற்சாகத்தோடு பணியாற்றி, ஒவ்வொரு நாளும் நல்ல நாளாக அமைய வழிவகுத்துக் கொள்வீர்கள். கடன் பிரச்சினையும், காண்பவர்களால் பிரச்சினையும், உடனிருப்பவர்களால் உபத்திரவமும், உள்ளம் மயங்கும் விதத்தில் வழக்குகளும் மறைமுக எதிர்ப்புகளும் உங்களை மண்டியிருந்த நிலை இனி மாறும்.

பொது வாழ்வில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு இதுவரை புதுப்புது பிரச்சினைகள் வந்து இதுவரை மன அமைதியை குலைத்திருக்கலாம். ஆனால் இந்த சர்ப்பக் கிரகத்தின் பார்வை பலனாலும் அது உச்சசனியுடன் சேர்க்கை பெற்றிருப்பதாலும் இனி இழந்த செல்வாக்கை மீண்டும் பெறுவீர்கள்.

அரசியல் வாழ்வில் அடியெடுத்து வைத்தவர்கள் அற்புதப் பலன்களை காணப் போகிறார்கள். உரசிய பகைவர்கள் இனி ஒதுங்கிச் செல்வர். வரவு செலவுகள் கூடும். வருமானம் திருப்தி தரும். ஒரு தொழில் செய்வோர் இரு தொழில் செய்யும் சூழ்நிலை உருவாகும்.

ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாக இருந்து போற்றும் காரியத்தை முடித்துக் கொடுப்பர். வேற்று மனிதர்களின் ஒத்துழைப்போடு விறுவிறுப்பாக முன்னேற்றம் காண்பீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு ஊதிய உயர்வு உற்சாகம் தரும். விடா முயற்சிக்கு வெற்றி கிடைத்தது



என்று நினைப்பீர்கள்.

ஆதாய ஸ்தானத்தில் உலாவரும் இராகுவை திருப்திப்படுத்த அது பெயர்ச்சியாகி ஒரு மாதத்திற்குள் சிறப்பு வழிபாடுகளை நீங்கள் மேற்கொள்வது நல்லது.

புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திடும் வாய்ப்பும், பொன்னான எதிர்காலத்தை அமைத்துக்கொள்ள தொழில் தொடங்கும் வாய்ப்புகளும் உருவாகும் நேரமிது. மனக்குழப்பங்கள் அகலும். மாற்றினத்தவர்களின் ஒத்துழைப்போடு பணப்புழக்கம் அதிகரிக்கும் இந்தநேரத்தில் பலவித நல்ல காரியங்களை செய்து முடிப்பீர்கள். இளைய சகோதரத்தின் வழியில் இருந்த பிரச்சினை அகலும். அந்நிய தேச பயணம் எண்ணியபடியே கைகூடும்.

**அனுபவங்களை கற்றுத்தரும் ஐந்தாமிடத்து கேது!**

ஐந்தாமிடத்தில் இப்பொழுது கேது சஞ்சரிக்கப் போகிறார். இதுவரை எதிரிகளின் ஸ்தானம் எனப்படும் 6 ஆம் இடத்தில் கேது சஞ்சரித்து வந்தார்; அதன் விளைவாக எதிர்ப்புகளும், மனக்கசப்பான சம்பவங்களும் ஏராளமாக உங்களுக்கு வந்து சேர்ந்திருக்கலாம். இனி அந்தநிலை மாறும். வீண் பழி சுமத்தியவர்களும் உங்களை விட்டு விலகுவர்.

புத்திர ஸ்தானம் என்று அழைக்கப்படுவதும் 5 ஆம் இடம்தான். அந்த இடத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது நன்மைகளைத் தருமா என்று நீங்கள் சிந்திக்கலாம். ஞானகாரகன் என்று வர்ணிக்கப்படுபவர் கேது. அது 5 இல் சஞ்சரிக்கும் பொழுது பிள்ளைகளின் கல்வி நலன்கருதி ஒரு தொகையை செலவிட்டு மகிழ்வீர்கள். அதுமட்டுமல்ல அதன் கடல்தாண்டிய முயற்சிக்கும் நீங்கள் வழிவகுத்துக் கொடுப்பீர்கள்.

பெண் குழந்தைகளின் சுப சடங்குகள் நடைபெறும் நேரமிது. அதன் எதிர்கால நலன்கருதி நகைகளை வாங்கி சேமிக்கவும் முற்படுவீர்கள். நீண்ட நாளாக பேசிய திருமணப் பேச்சுக்கள் இப்பொழுது நல்ல முடிவிற்கு வரும்.

பிள்ளைகளால் இதுவரை ஏற்பட்ட பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும். கடந்த ஓராண்டாக சர்ப்பக் கிரகத்தின் சஞ்சாரத்தால் பிள்ளைகள் மனக்கவலை தரும் விதத்தில் நடந்து கொண்டிருக்கலாம். இனி அந்த நிலையை கேதுவின் ஆதிக்கம் மாற்றும். பூர்வீக சொத்துக்களை பிரித்துக்கொள்ள முடியாமல் அவதிப்படுபவர்கள் இனி புன்னகை பூக்கப்போகிறார்கள். பாதி, பாதியிலேயே பஞ்சாயத்து நின்று போகிறதே என்று கவலைப்பட்டவர்கள் இப்பொழுது வெற்றிப் பெருமிதத்தோடு வீடு திரும்பப் போகிறார்கள்.

இதுவரை ஒத்துவராத சகோதரர்கள் இனி ஒத்துவந்து உங்கள் குணமறிந்து நடந்துகொள்வர். பக்கத்துவீட்டாரின் பகை மாறும். பாசத்தைப் பொழிபவர்கள்போல நடித்து மோசம் செய்தவர்களெல்லாம் இனி நேச மனதோடு நெருங்கி வந்து உறுதுணையாக இருப்பர். ஆசைப்பட்டபடியே வீடு கட்டி குடியேறுவீர்கள். அடுத்தவர் நலன் கருதி எடுத்த முயற்சிக்கும் ஆதாயம் கிடைக்கும்.

ஈசனை வணங்கி நீங்கள் எடுத்த காரியங்களில் எல்லாம் வெற்றி காண்பதை அனுபவத்தில் கண்டுகொள்வீர்கள். விக்னேஷ்வரனையும் சர்வேஷ்வரனையும் நீங்கள் விடாது வழிபட்டு வாருங்கள். தக்க பரிகாரம் கிடைக்க அடிக்கடி நீங்கள் கேது பரிகாரம் செய்வது நல்லது. கிரக தானியம், கிரகவஸ்திரங்களை வழங்கி சாந்தி பரிகாரங்களை செய்தால் கேது, கேட்ட வரங்களை கொடுப்பார்.

நீதிமன்றத்தில் இருக்கும் வழக்கு நல்ல முடிவுக்கு வரும். இல்லம் சம்பந்தமாக எடுத்த முயற்சிகள் இனி வெற்றி பெறும். சாதனையாளர்களாக திகழ்ந்து இனி சரித்திரத்தில் இடம் பெறப் போகிறீர்கள். சோதனை காலம் முடிந்தது. சொந்தங்களும் சுற்றங்களும் இனி உங்களை வாழ்த்தப் போகின்றது.

**பாதசார அடிப்படையில் பலன் தரும் இராகு!**

பாதசார அடிப்படையில் சஞ்சரிக்கும் இராகு முதலில் குரு காலில் சஞ்சரிக்கப் போகிறார். உங்கள் இராசி நாதனாக குரு விளங்குகிறார். எனவே, இது யோகமான நேரம்தான். சொல்லைச் செயலாக்கிக் காட்ட இயலும். சுகங்களும் சந்தோஷங்களும் வந்து சேரும். நல்ல மனதிற்கு சொந்தக்காரர்களாக இருப்பவர்கள் உங்களோடு வந்து இணைவர். நாளும் பொழுதும் நல்லதே நடக்கும்.

இராகு தன் சுயசாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது செல்வந்தர்களின் தொடர்பு கிடைக்கும். திடீர் தன இலாபம் வந்து திக்குமுக்காட வைக்கலாம். சகோதர பாசம் கூடும். மனைவி மக்கள் பெயரில் கூட்டுத் தொழில் செய்யும் யோகம் உருவாகும். அந்நிய தேசத்தில் இருந்து அனுகூலச் செய்தி வந்துசேரும்.

இராகு செவ்வாய் காலில் சஞ்சரிக்கும்பொழுது இடமாற்றம், ஊர் மாற்றங்கள் வந்து சேரலாம். எதிர்பாராத விரயங்களும் வந்து சேரலாம். வாங்கிய சொத்தை விற்கும் சூழ்நிலைகூட உருவாகலாம். இருந்தாலும் அதற்காக கவலைப்பட வேண்டியதில்லை. குரு பெயர்ச்சிக்குப் பிறகு மீண்டும் சொத்துக்கள் வாங்கி சேர்க்கும் யோகம் உண்டாகும்.

பொதுவாக மே 2013 க்கு மேல் மிதுன குருவின் சஞ்சாரத்தால் மிகச் சிறந்த பலனை காணப்போகிறீர்கள். குரு பார்க்க கோடி நன்மை என்பதற்கிணங்க அதன்பிறகு உங்கள் வாழ்க்கையில் மிகப்பெரிய மாற்றங்களும் முன்னேற்றங்களும் வந்துசேரப் போகின்றன.

**பாதசார கேது தரும் பலன்கள்!**

மேட இராசியில் சஞ்சரிக்கும் கேது முதலில் சூரியன் சாரத்தில் சஞ்சரிக்கப் போகிறார். எனவே, தந்தை வழி உறவில் இருந்த விரிசல் அகலும். தன்னிச்சையாக செயற்படத் தொடங்குவீர்கள். பங்காளி பகை மாறும். அரசியலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகளும் பதவிகளும் வந்து சேரலாம்.

கேது சுக்கிரன் சாரத்தில் சஞ்சரிக்கும்பொழுது எதிரிகளின் பலம் கூடும். எதையும் ஒரு முறைக்குப் பலமுறை யோசித்து செய்வது நல்லது. பெண் வழிப் பிரச்சினைகள் தலைதூக்கலாம். விலையுயர்ந்த பொருட்களைக் கூட விற்க நேரிடலாம். இக்காலத்தில் சுக்கிர வழிபாடும் பெண் தெய்வ வழிபாடுகளும் உங்களுக்குத் தேவை.

கேது தன் சுயசாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது பிள்ளைகள் வழியில் சுபகாரியங்கள் நடைபெறும். செல்லப் பிள்ளைகளுக்கு சீர்கொடுக்க நகை வாங்கிச் சேர்ப்பீர்கள். பஞ்சாயத்துக்கள் நல்ல முடிவுக்கு வரும். உத்தியோகத்தில் மேல் அதிகாரிகளின் அனுசரிப்பும், உயர் பதவிகள் வருவதற்கான அறிகுறிகளும் தோன்றும். காரிய தாமதங்கள் அகலும். கடை திறப்பு விழாக்கள் முதல் கட்டிட திறப்பு விழாக்கள்வரை நடத்திப் பார்ப்பீர்கள்.

**வாழ்க்கை வசந்தமாக வழிபாடு!**

இலாப ஸ்தானத்தில் இராகுவால் வருமானம் திருப்தியாக அமையவும் பஞ்சம ஸ்தான கேதுவால் பிள்ளைகள் வழியில் நல்ல காரியங்கள் நடைபெறவும் அருகிலுள்ள சிவாலயத்திற்குச் சென்று குரு தட்சாணமூர்த்தியை வியாழக்கிழமைதோறும் வழிபட்டு வாருங்கள். சுய ஜாதக ரீதியாக இராகு, கேதுக்களின் பாதசார பலமறிந்து சர்ப்பதோஷ பரிகாரங்களை முறையாகச் செய்வது நல்லது.

# சாதனை மிக்கவர்களாகத் திகழ்ந்து சரித்திரத்தில் இடம்பெறப் போகிறீர்கள்

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

323

## மாயமாய் மறைந்த பணம்

சங்ககிரி என்ற ஊரில் தவசி என்ற நெசவாளி இருந்தான். அவன் நெசவுத் தொழிலில் கைதேர்ந்தவன். விதவிதமான வேலைப்பாடமைந்த உயர் வகை ஆடைகளை நெய்வதில் வல்லவன். ஆனால் அவன் திறமைக்கேற்ற வேலை அவனுக்குக் கிடைக்கவில்லை. சரிவர வேலை கிடைக்காததால் வீட்டில் வறுமை சூழ்ந்தது.

தவசியை விட திறமையில் குறைந்த நெசவாளிகள் நாள் பூராகவும் வேலை செய்து நிறையப்பொருள் ஈட்டி வந்தனர். அவர்கள் நெய்யும் மோட்டாரகத் துணிகளுக்கு நிறைய கிராக்கி இருந்தது. அதனால் அவர்களுக்குத் தொழில் நல்ல முறையில் நடந்தது. ஆனால் உயர்ரகத் துணிகள் நெய்யும் தவசிக்கு வேலை கிடைக்கவில்லை.

கடைசியில் தவசி மனம் வெறுத்தவனாய் இவ்வூரில் உள்ள மக்கள் என் திறமையைச் சரிவரப் புரிந்துகொள்ளவில்லை. என்னுடைய திறமையை மதித்து வேலைதரும் வேற்றாருக்குச் சென்று பிழைக்கலாம் என்ற நோக்கத்துடன் அவ்வூரை அடுத்துள்ள ஒரு நகரத்திற்குச் சென்றான். அங்கு அவனுடைய திறமைக்கேற்ற வேலை கிடைத்தது. நிறைய வேலை செய்தான். அதனால் அவனுக்கு நிறையப் பொருள் கிடைத்தது. செலவு போக எஞ்சியதைத் தன் வீட்டுத் தோட்டத்தில் புதைந்து வைத்தான்.

சிலகாலம் சென்றன. அதுவரை நூறு பொற்காசுகள் சேர்ந்தன. அவற்றை எடுத்துக் கொண்டு தன் ஊருக்குச் சென்று மனைவி மக்களைக் காண நினைத்தான். அன்றைய தினம் இரவு அவன் பணத்தைப் புதைத்து வைத்த இடத்தருகில் இருந்த இரண்டு தேவதைகள் பேசிக்கொண்டன.

நண்பனே தவசிக்கு இது போதாத காலமாயிற்றே. அவனுக்கு ஏன் இவ்வளவு செல்வத்தைக் கொடுத்தாய்? என்று மற்றைய தேவதையைப் பார்த்துக் கேட்டது.

நான் என்ன செய்வேன்? உழைப்புக்குத் தக்க ஊதியம் தரவேண்டியது என் பொறுப்பு. கொடுத்துவிட்டேன். உனக்கு அது பிடிக்காவிட்டால் திரும்ப எடுத்துக்கொள் என்றது.

மறுநாள் காலையில் தவசி புதைத்து வைத்த இடத்தில் தோண்டிப்பார்த்தபோது ஒரு பொற்காசு கூட இல்லை. காலியாக இருந்தது. அதைக் கண்டதும் அவன் குய்யோ முய்யோ என்று அழுதான். அக்கம் பக்கத்திலுள்ளவர்கள் வந்து காரணம் கேட்டனர்.

தவசி அழுதுகொண்டே பொற்காசுகள் களவு போனதைக் கூறினான்.

பைத்தியக்காரா பொற்காசுகளை இவ்விதம்பூமியில் புதைத்து வைக்கலாமா? யாரோ நீ புதைப்பதைப் பார்த்துக்கொண்டிருந்துவிட்டுத் தோண்டி எடுத்துச் சென்றுவிட்டனர். இனி இம்மாதிரி முட்டாள்தனமாக நடந்து கொள்ளாதே! பணத்தைப் பாதுகாப்பாக வைத்திருக்க உன்னால் முடியாவிட்டால் நமது ஊர் பெரிய தனக்காரிடம் கொடுத்து வை. அவர் ரொம்பவும் நம்பிக்கையானவர். உனக்கு தேவையான பொழுது கொடுப்பார் என்று ஒருவர் புத்திமதி கூறினார்.



தனது பைத்தியக்காரத் தனத்தை எண்ணி வருந்தியவனாக மேலும் கடினமாக உழைத்து நிறையப்பொருள் சேர்த்தான். இம்முறை சேர்த்த பணத்தை அவ்வூரில் பெரிய தனக்காரரிடம் கொடுத்துவைத்திருந்தான். சில மாதங்கள் சென்றன.

இருநூறு பொற்காசுகளுக்கு மேல் தவசி சேர்த்துவிட்டான். நீண்டநாட்களாகப் பிரிந்து இருக்கும் தனது குடும்பத்தினரை நினைத்துக்கொண்டான். சேர்ந்த பொருளுடன் சென்று அவர்களை துயரைப்போக்க வேண்டுமென்று தீர்மானித்தான். பெரிய தனக்காரிடம் சென்றான். தான் சேமித்த பொற்காசுகளில் இருநூறு பொற்காசுகளைப் பெற்றுக் கொண்டு திரும்பினான்.

பொற்காசுகளை ஒரு முடிப்பில் கட்டிக்கொண்டு ஊருக்குச் சென்று சென்று கொண்டிருந்தான் தவசி. வழியில் களைப்பாக இருந்தது. ஒரு மரத்தடியில் படுத்துக்கொண்டான். அந்த மரத்தின் மேல் முன்பு தவசி பொருளை அபகரித்துக்கொண்ட தேவதைகள் இருந்தன. அவை பேசலாயின.

என்ன தோழி. தவசிக்கு இன்னும் நல்ல காலம் வரவில்லை. அதற்குள் அவசரப்பட்டு அவனுக்கு இருநூறு பெற்காசுகளுக்கு மேல் கொடுத்துவிட்டாயே! என்று கேட்டது ஒரு தேவதை.

நான் என்ன செய்வேன்? அவனுடைய உழைப்புதான் அவனுக்குப் பொருளைச்சேர்த்துத் தந்தது. அதற்கு நான் எப்படிப் பொறுப்பாகமுடியும் என்றது.

எப்படியிருந்தாலும் சரி. தவசி இந்தப்பொருளுடன் வீட்டுக்குச் செல்லக்கூடாது என்று கூறிய தேவதை தவசியின் மடியிலிருந்து தங்கக் காசுகளை மாயாய் அபகரித்துவிட்டது.

தூங்கி எழுந்து தவசி மடியைத் தடவிப் பார்த்தான். பை காணவில்லை. இலேசாக இருந்தது. அவசர அவசரமாகத் திறந்து பார்த்தான். அதில் ஒன்றும் இல்லை. காலியாய் இருந்த பையைக் கண்டதும் தவசிக்கு துக்கம் தாங்கவில்லை. வெறும் கைபயுடன் எப்படி வீடு செல்வது? என்று வருந்தியவனாக மரத்திலேயே தூக்கிலிட்டு இறந்துவிட முடிவு செய்தான். தான் உடுத்தியிருந்த துணியை எடுத்து மரக்கிளையில் கட்டினான். கழுத்தில் சுருக்கை இறுக்கிக் கொள்ளும் போது தேவதைகள் அவன் முன் தோன்றின.

தவசி உன்னுடைய பொருட்களை அபகரித்துக் கொண்டது நாங்கள்தான். உனக்கு வேண்டியதைக்கேள் என்று தேவதைகள் கூறின.எனக்கு நிறையப் பொருள் கொடுங்கள். அதுவே போதும்! என்றான் தவசி.

தவசி உணவுக்கும் உடைக்கும் தவிர மீதியுள்ள பொருளால் உனக்கு என்ன நன்மை? உன்னால் அனுபவிக்க முடியாததும் தானம் செய்ய முடியாததுமான பொருளால் உனக்கு என்ன நன்மை? என்றது ஒரு தேவதை.

தேவதையே நான் என் ஆயுள் காலத்தில் பெரும்பகுதியை பொருள் தேடுவதிலேயே செலவிட்டு விட்டேன். இது வரை நான் அடைந்தது துன்பமும் துயரமும்தான். இனியாவது. நான் மகிழ்ச்சியுடன் வாழவேண்டுமானால் எனக்கு நிறையப்பொருள் தேவைப்படுகிறது என்றான் தவசி.

உனக்கு வேண்டிய பணத்தை தருகிறோம். அதில் தானதருமம் செய்து ஏழைகளுக்கு உதவி செய்தால் உன் செல்வம் நிலைக்கும்.... இல்லையென்றால் உன் செல்வம் அழிந்துவிடும் என்றது.

அப்படியே செய்வதாக வாக்களித்தான் தவசி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேன்முறையீட்டு நீதிமன்றின் அறிவிப்பு குறித்து இன்னும் தீர்மானிக்கவில்லை

## அமைச்சர் யாப்பா தெரிவிப்பு

(கொழும்பு)

எதற்கும் ஒரு வரையறை இருக்கின்றது. அதற்கு அப்பால் செல்ல முடியாது. மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் அறிவிப்பு கிடைத்துள்ளது. அது தொடர்பில் இன்னும் தீர்மானிக்கவில்லை என்று நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் தலைவரும் அமைச்சருமான அனுரபிரியதர்சன யாப்பா தெரிவித்துள்ளார்.

இலங்கை மன்றக் கல்லூரியில் நேற்று முன்தினம் இரவு நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்ட ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பதிலளிக்கையில்,

நாடாளுமன்றம் நிலையியற் கட்டளை அரசியலமைப்பு மற்றும் சட்டம் ஆகியவற்றில் நாம் நம்பிக்கை கொள்கின்றோம். அரசியலமைப்பை செயற்படுத்தும் போது நாடாளுமன்றத்திற்கு விசேட அதிகாரம் இருக்கின்றது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் அறிவிப்பு கிடைத்துள்ளது. அது தொடர்பில் இன்னும் தீர்மானிக்கவில்லை. தெரிவுக்குழுவின் செயற்பாடானது ஜனாதிபதியின் அறிவிப்புடனேயே நிறைவடையும்.

அதனால் அவருக்கு ஆலோசனை வழங்குவதற்கு ஒரு குழுவை அவர் நியமித்துக் கொள்ளலாம். அந்த குழுவை நியமிப்பதன் மூலமாக எனது தலைமையிலான தெரிவுக்குழுவை ஜனாதிபதி குறைத்து மதிப்பிடவில்லை.

பிரதம நீதியரசருக்கு எதிராக 14 குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. அதில் 5 குற்றச்சாட்டுக்களை மட்டுமே விசாரணைக்கு எடுத்துக் கொண்டோம். இரண்டு குற்றச்சாட்டுக்களில் இருந்து அவரை விடுதலை செய்துள்ளோம்.

1987 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் பிரகாரமே தெரிவுக்குழு அமைக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. பல நாடுகளில் பல முறைமைகள் இருந்தாலும் தெரிவுக்குழுவின் அறிக்கை கிடைத்தவுடன் நாடாளுமன்றத்திற்கு ஜனாதிபதி அறிவித்து விட்டு பதவி விலக்குவார்.

பிரித்தானியா மற்றும் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளின் அரசியலமைப்புக்களிலும் இந்த முறைமையே இருக்கின்றது. அனுமதியின்றி பார்க்க முடியாது.

பிரதம நீதியரசரை யாரும் தூற்றவில்லை. தெரிவுக்குழுவில் ஒலி வாங்கி முடுக்கிவிடப்பட்டிருந்த சந்தர்ப்பங்களில் பேசப்பட்ட சகல விடயங்களும் அறிக்கையிடப்பட்டுள்ளன.

ஒலிப்பதிவும் செய்யப்பட்டுள்ளது. அவற்றை சபாநாயகர் மற்றும் ஹன்சாட் திணைக்களத்தின் அனுமதியின்றி யாரும் பார்வையிட முடியாது.

தெரிவுக்குழுவின் அறிக்கையை இதயசுத்தியுடன் தயாரித்துள்ளோம். தெரிவுக்குழுவிலிருந்து எழுந்து சென்றிருக்காவிடின் விசாரணை 2013 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8 ஆம் திகதி வரை தொடர்ந்திருக்கும் என்றார். (அ-2)

# வங்குரோத்தை மூடிமறைக்க இனவாதம் பயன்படுகிறது

## முன்னணி சோசலிசக் கட்சி தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் வங்குரோத்து நிலைமையை மூடிமறைக்கவே இனவாதம் பயன்படுத்தப்படுவதாக முன்னணி சோசலிசக் கட்சியின் பிரசாரச் செயலாளர் புபுது ஜாகொட தெரிவித்துள்ளார்.

கட்சிக் காரியாலயத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டபோது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

இன மற்றும் மதப்பற்றினால் அரசியல் தலைவர்கள் இவ்வாறு செயற்படவில்லை. இது ஓர் அரசியல் திட்டமாகும்.

வரவு செலவுத் திட்டத்தில் சம்பள உயர்வு வழங்கப்படும் என மக்கள் எதிர்பார்த்து காத்திருந்தனர். தோட்டத் தொழிலாளிகள், அரசாங்க ஊழியர்கள், விவசாயிகள், மாணவர்கள் என்ற அனைத்து தரப்பினருக்கும் நன்மைகள் கிடைக்கவில்லை.

இவ்வாறான ஓர் நிலைமையில் எவ்வாறு ஆட்சி செய்வது. இனவாதம், பீதி அரசியல், அடக்குமுறை மற்றும் ஏமாற்று நடவடிக்கைகள் போன்றவற்றினால் மக்களை திசை திருப்ப முடியும். இதன் காரணமாகவே அரசாங்கம் இனவாதத்தை பயன்படுத்துகிறது.

தமிழ்மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் எதிராக இனவாத நடவடிக்கைகள் கட்டவிழ்த்து விடப்படுவதாக புபுது ஜாகொட தெரிவித்துள்ளார். (அ-2)

# கலகத்தில் ஈடுபட்ட இளைஞர்கள் 24 பேர் நாடு கடத்தப்பட்டனர்

(கொழும்பு)

தாய்லாந்தின் பாங்கொங் நகரின் கேளிக்கை விடுதி ஒன்றில் கலகத்தில் ஈடுபட்ட 24 இலங்கை இளைஞர்கள் நாடு கடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த இளைஞர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தின் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். குறித்த இளைஞர்கள் சந்தேகத்திற்கு இடமான வகையில் செயற்பட்டதாக தாய்லாந்து பொலிஸார் இலங்கை பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டு நாடு கடத்தப்பட்ட இளைஞர்களின் ஆள் அடையாளங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை. (அ-2)

# வீதி திருத்தப் பணியில் கிளி.மாவட்ட வீதிகள் தட்டிக்கழிக்கப்படுகின்றன

## நடவடிக்கை எடுக்க கோரிக்கை

(சிவநகர்)

கிளிநொச்சி மாவட்டம் ஒரு விவசாய மாவட்டமாக இருந்த போதும் விவசாய வீதிகள், கிராம வீதிகள், பிரதான வீதிகள் எவையுமே அபிவிருத்தி செய்யப்படாத நிலையில் உள்ளது.

குறிப்பாக இம்மாவட்டத்தின் நகரப் பகுதியை அண்டிய வீதிகள் மட்டும் அபிவிருத்தி செய்யப்படுகின்ற போதிலும் கிராமப் புறங்களில் உள்ள வீதிகள் எவையும் அபிவிருத்தி செய்யப்படவில்லை. உதாரணமாக கிராமங்களுக்கு செல்லும் பிரதான வீதி, கிராமங்களின் உள்ள வீதிகள், வயல் நிலங்களுக்கு அருகில் உள்ள வீதிகள் என்பனவற்றை திருத்துவதற்கு திணைக்களம், பிரதேச சபை, கமநல சேவை நிலையம், நீர்ப்பாசன திணைக்களம், வீதி அபிவிருத்தி திணைக்களம், வீதி அபிவிருத்தி அதிகார சபை இவற்றில் எதற்கு சொந்தமானது என்பது கூட தெரியாமல் மக்களிடையே குழப்ப நிலையை ஏற்படுத்துகிறது.

இதனால் குறிப்பிட்ட வீதிகளை திருத்தம் செய்விப்பதற்கு யாரை நாடுவது என்பது தெரியாமல் மக்கள் அல்லலுறுகின்றனர்.

இதற்கு காரணம் வீதிகளை அபிவிருத்தி செய்யுமாறு சில திணைக்களங்களிடம் கேட்கும் போது அவ்வீதி வேறு ஒரு திணைக்களத்திற்கு அல்லது பிரதேச சபைக்கு சொந்தமானவை என தட்டிக் கழிக்கப்படுகின்றது.

இவ்வாறே மாறிமாறி ஒவ்வொருவரும் தெரிவிப்பதால் யாரை அணுகுவது என்று மக்களுக்கும் தெரிவதில்லை. இத்தகைய வீதிகள் அபிவிருத்தி செய்யப்படுவதுமில்லை எனவும் கிளிநொச்சி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (அ-3-254)




★ 1065-லண்டனில் வெஸ்ட்மின்ஸ்டர் தேவாலயம் திறந்து வைக்கப்பட்டது.

★ 1612- கலிலியோ கலிலி நெப்டியூன் கோளைக் கண்டுபிடித்தார்.

★ 1836-தெற்கு அவுஸ்திரேலியா, அடிலெய்ட் ஆகியன அமைக்கப்பட்டன.

★ 1836-மெக்சிக்கோவின் விடுதலையை ஸ்பெயின் அங்கீகரித்தது.

★ 1846- அயோவா ஐக்கிய அமெரிக்காவின் 29 ஆவது மாநிலமாக இணைந்தது.

★ 1867-ஐக்கிய அமெரிக்கா மிட்வே தீவுக்கு உரிமை கோரியது.

★ 1879-ஸ்கொட்லாந்தில் டண்டீ என்ற இடத்தில் தொடரூந்து மேம்பாலம் ஒன்று உடைந்து வீழ்ந்ததில் அதில் சென்று கொண்டிருந்த தொடரூந்து விபத்துக்குள்ளாகியதில் 75 பேர் உயிரிழந்தனர்.

★ 1885-இந்தியாவின் வழக்கறிஞர்கள், அறிவியலாளர்கள், ஊடகவியலாளர்கள் 72 பேர் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியை ஆரம்பிப்பதற்கு மும்பையில் கூடினர்.

★ 1891-யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை சிவன் கோயிலில் பல்லாயிரக் கணக்கான ரூபாய் பெறுமதியான நகைகள் களவாடப்பட்டன.

★ 1895-பிரான்சின் லூமியேர சகோதரர்கள் பாரிஸ் நகரில் தங்கள் திரைப் படங்களை முதன்முதலாகப் பொது மக்கள் பார்வைக்கு கட்டணத்துடன் திரையிட்டனர்.

★ 1908-இத்தாலி, சிசிலியில் நிலநடுக்கம் ஏற்பட்டதில் 75 ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர்.

★ 1930-மகாத்மா காந்தி பேச்சுவார்த்தைகளுக்காக பிரித்தானியா சென்றார்.

★ 1958-கியூபாவின் சாண்டா கிளாரா நகர் மீது சே குவேரா போர் தொடுத்தார்.

★ 1981-அமெரிக்காவின் முதலாவது சோதனைக்குழாய் குழந்தை எலிசபெத் கார் வேர்ஜீனியாவில் பிறந்தது.

★ 1989- அவுஸ்திரேலியா, நியூ சவுத் வேல்ஸ் மாநிலத்தில் நியூகாசில் நகரில் இடம்பெற்ற 5.6 அளவை நிலநடுக்கம் காரணமாக 13 பேர் உயிரிழந்தனர்.

★ 2005-இரண்டாம் உலகப் போரில் இழைத்த குற்றங்களுக்காக ஜோன் டெம் ஜான்ஜுக் என்பவர் உக்ரேனுக்கு நாடு கடத்த ஐக்கிய அமெரிக்காவின் நீதிமன்றம் உத்தரவிட்டது.

★ 2006- எதியோப்பிய மற்றும் சோமாலிய அரசுத் துருப்புக்களும் சோமாலியா தலைநகர் மொகடிசுவைத் கைப்பற்றியதை அடுத்து இஸ்லாமிய போராட்ட அமைப்பின் போராளிகள் தலைநகரைக் கைவிட்டு வெளியேறினர்.

★ 2007- நேபாளத்தின் இடைக்கால நாடாளுமன்றம் நாட்டை குடியரசாக அறிவித்து மன்னராட்சியை முடிவுக்குக் கொண்டு வந்தது.

**பிறப்புகள்**

★ 1932-திருபாய் அம்பானி, இந்தியத் தொழிலதிபர் (இ.2002)

★ 1937-ரத்தன் டாடா, இந்திய டாட்டா குழுமங்களின் தலைவர்

★ 1940-அ.கு.ஆன்டனி, இந்திய அரசியல்வாதி


★ 1944-கேரி முலிஸ், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க வேதியியலாளர்

★ 1945-பிரேந்திரா, நேபாள மன்னர் (இ.2001)

★ 1947-நாஞ்சில் நாடன், எழுத்தாளர்

★ 1954- டென்செல் வோஷிங்டன், அமெரிக்க நடிகர்

**கலிலியோ**



கலிலியோகலிலிஅறிவியல் புரட்சியோடு நெருக்கமான தொடர்புடைய ஓர் இத்தாலிய வானியலாளரும் மெய்யியலாளரும் இயற்பியலாளரும் ஆவார்.

***இயற்பியலின் தந்தை*** என்ற வகையிலும் அறிவியலின் தந்தை என்ற வகையிலும் இவர் ***நவீன வானியலின் தந்தை*** எனக் குறிப்பிடப்படுகின்றார்.

பீசா நகரில் பிறந்த கலிலியோ கெப்ளரின் சமகாலத்தவராவார். கலிலியோவின் வேலைகள் குறிப்பாக அரிஸ்டோட்டிலின் வேலைகளிலிருந்து குறிப்பிடத்தக்க திருப்பமாகும்.

**பரிசோதனை அறிவியல்**

கணிய அளவுப் பரிசோதனைகளையும் அவற்றின் முடிவுகளை கணித முறையில் பகுப்பாய்வு செய்வதையும் தொடக்கி வைத்தவர் என்ற வகையில் அறிவியல் புரட்சியின் அறிஞர் குழாமில் கலிலியோவுக்கு உயர்ந்த இடம் உண்டு. அக்காலத்து மேற்கத்தேய சிந்தனையில் இத்தகைய வழிமுறை மரபு கிடையாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரேகல்லில் இருகாய்கள்! அவுஸ்திரேலியா- இலங்கை நெருக்கம்...

அவுஸ்திரேலியாவுக்கு தலைக்கு மேல் வெள்ளம்போக, அங்குள்ள எதிர்க்கட்சிகள் அரசுக்கெதிராக குரல் எழுப்பிக்கொண்டிருக்க வேறு வழியின்றி இலங்கையின் காலடியில் வந்துவிழுந்தது. போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பாடசாலைகளைக் கட்டிக் கொடுக்கவும் ஏனைய அபிவிருத்தித் திட்டங்களுக்கு உதவவும் அவுஸ்திரேலியா முன்வந்துள்ளது. அத்துடன் இலங்கைக் கடற்படையின் கண்காணிப்புத் திறனை நவீனமயப்படுத்துவதற்கும் புலனாய்வுத் தகவல்களை பரிமாறிக்கொள்வதிலும் இணைந்து செயற்படவுள்ளது. இலங்கைக்கு இவையெல்லாம் எதிர்பாராத அதிர்ஷ்டங்கள். இதுமட்டுமல்ல கொமன்வெல்த் மாநாட்டிற்கு எதிர்பார்க்கப்பட்ட தடைகளை உடைப்பதற்கும் அவுஸ்திரேலியாவையே பயன்படுத்தப் போகிறது.

ஈழத்தை ஆதரிக்கின்ற, புலம்பெயர்மக்கள் வாழ்கின்ற மேற்குலக நாடுகள் தமக்கான ஆதரவு வாக்குகளை சம்பாதித்துக்கொள்ள வேண்டுமாயின் இலங்கை அரசாங்கத்தால் தமிழ் மக்களுக்கு எதிராக மேற் கொள்ளப்பட்ட பல்வேறு மீறல்களை எதிர்த்துக் குரல்கொடுக்கவேண்டிய நிலை இருந்தது. ஆனால், அவுஸ்திரேலியாவின் மெல்போன் மற்றும் சிட்னி போன்ற நகரங்கள் ஈழத்தை ஆதரிக்கின்ற பலருக்கு பதுகாப்பான புகலிடத்தை வழங்கியுள்ள போதிலும் சிறிலங்காவை அவுஸ்திரேலியா எதிர்த்து நிற்கவில்லை.

அமெரிக்காவின் இலங்கைக்கு எதிரான மனித உரிமை அறிக்கை ஐ;நா.வில்கொண்டுவரப்பட்டதைத் தொடர்ந்து பல மேற்குலக நாடுகள் தமது அதிருப்திகளையும் அழுத்தங்களையும் முன்வைத்தபோதும் அவுஸ்திரேலிய பிரதமர் ஜூலியா கிளார்ட், அவ்வாறான நிலையைத் தவிர்த்து, இலங்கையுடன் நல்லுறவைப் பேணுவதில் சிரத்தை எடுத்துள்ளார். இலங்கைக்கு எதிராக அவுஸ்திரேலியாவில் கூட்டணி நாடுகளும் பொதுநலவாய அமைப்பும் தீர்மானத்தை இயற்றிய போதும் தொடர்ந்தும் அவுஸ்திரேலியா இலங்கையை ஆதரித்துள்ளது.

பொதுநலவாய நாடுகளின் தலைவர்களுக்கான உச்சிமாநாடு, கடந்த ஆண்டில் பேர்த்தில் இடம்பெற்றது. 2013 இல் இந்த உச்சிமாநாட்டை இலங்கையின் அம்பாந்தோட்டையில் மேற்கொள்வது என தீர்மானித்தபோது இதனைப் புறக்கணிக்குமாறு அவுஸ்திரேலியாவை பல்வேறு தரப்பினர் கோரியிருந்தபோதும்கூட அந்நாட்டு அரசாங்கம் நிறைவேற்றவில்லை. பதிலாக பேர்த் நகருக்கு இலங்கை அதிபர் மகிந்த ராஜபக்ச சென்றபோது இவருக்கான உச்சப்பாதுப்பை வழங்குமாறும் இவருக்கெதிரான ஆர்ப்பாட்டங்கைள தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறும் கட்டளையிடப்பட்டது.

அவுஸ்திரேலியவுக்கும் இலங்கைக்கும் இடையில் இப்போது ஏற்பட்டுள்ள திடீர் நெருக்கம் ஆச்சரியமளிக்கத்தக்க ஒன்றாக அமைந்துள்ளது. நடப்புச்சூழல் இதனை தவிர்க்க முடியாத ஒன்றாகவே மாற்றிவிட்டது. 2009 இல் போர் முடிவுக்கு வந்தபின்னர் மேற்குலக நாடுகளுடனான இலங்கையின் இராஜதந்திர உறவுகள் பின்னடைவு கண்டுள்ள நிலையில் அதற்கு எதிர்மாறான வகையில் அவுஸ்திரேலிய-இலங்கை உறவுகள் புதிய திருப்பத்தை எட்டிள்ளன. இந்தத் திடீர் மாற்றத்திற்கான அடிப்படைக்காரணமாக அமைந்தது, அவுஸ்திரேலியாவுக்கு படையெடுத்த அகதிகள்தான்.

இலங்கை தொடர்பான, இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பான வேறுபட்ட கருத்துக்களைக் கொண்டிருந்தாலும் அவுஸ்திரேலியா தனது நெருக்கடியைச் சமாளிப்பதற்கு இலங்கையுடன் இணைந்தேயாகவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது என்பதே உண்மை நிலையாகும்.

கடந்தவாரம் கொழும்பு வந்த அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் பொப்கார் பல்வேறு கட்டங்களில் இலங்கையுடன் இணைந்து செயற்படுவதற்கான திட்டங்களை அறிவித்திருந்தார். அதுமட்டுமின்றி அடுத்த ஆண்டு கொழும்பில் நடத்தப்படவுள்ள கொமன்வெல்த் உச்சிமாநாட்டிற்கும் அவுஸ்திரேலியா முழுமையான ஒத்துழைப்பை வழங்கும் என்றும் அவர் அறிவித்துள்ளார். அடுத்த ஆண்டில் கொமன்வெல்த் உச்சிமாநாட்டை நடத்துவதில் இலங்கை சிக்கல்களை எதிர்கொள்ளலாம் என்று எதிர்பார்க்கப்பட்டுவந்த நிலையில் தான் அவுஸ்திரேலியாவின் இந்த நிலைப்பாடு வெளியாகியுள்ளது.

அவுஸ்திரேலியாவின் இந்த நிலைப்பாடு கொமன்வெல்த் மாநாடு குறித்த மேற்குலக அழுத்தங்களில் இருந்து மீள்வதற்கு இலங்கைக்கு கைகொடுப்பதாக அமையும் என்றே கருதப்படுகிறது. கனேடியப் பிரதமரின் புறக்கணிப்பு எச்சரிக்கையும், அதையே பின்பற்ற வேண்டும் என்று பிரித்தானியப்பிரதமருக்கு கொடுக்கப்படும் அழுத் தங்களும் இலங்கைக்கு பெரும் சவாலாகவே இருந்துவந்தன. இத்தகைய நிலையில் கொமன்வெல்த் மாநாட்டிற்கு அவுஸ்திரேலியா, அரசியல் ரீதியாகவும் தொழில்நுட்பரீதியாகவும் உதவும் என்று அந்த நாட்டு வெளிவிவகார அமைச்சர் அறிவித்துள்ளது, மேற்படி நாடுகளின் எச்சரிக்கையை கேள்விக்குட்படுத்தியுள்ளது.

அவுஸ்திரேலியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் ஏற்பட்டுள்ள இந்தப் புதிய உறவு, அரசியல், இராஜதந்திரத்திற்கும் அப்பால், பாதுகாப்பு ரீதியானதாகவும் விரிவடையப் போகிறது. இலங்கைக் கடற்படையின் கண்காணிப்புத் திறனை அதிகரிக்கவும் புலனாய்வுத் தகவல்களை பரிமாறிக் கொள்ளவும் இரு நாடுகளுக்குமிடையில் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது. இலங்கைக்கு பெருந்த... என்பதில் சந்தேகம் இல்லை. படகுகளில் அடுத்தடுத்து அவுஸ்திரேலியாவுக்கு படையயெடுத்துச் சென்ற அகதிகளால் பெரும் ஆதாயத்தை அடையப்போவது இலங்கை அரசாங்கம் தான். அது ஒரேகல்லில் இரண்டு காய்களை வீழ்த்தியுள்ளது. போர் முடிவுக்கு வந்தபின்னர் தமிழ் அகதிகள் வெளியேறுவதைத் தடுப்பதற்கு அரசாங்கம் பெரும் பிரயத்தனம் செய்து பார்த்தது. அகதிகளின் வெளியேற்றம் இலங்கையை பாதுகாப்பற்ற நாடாக சர்வதேச அரங்கில் வெளிப்படுத்தி வந்ததால், அதைத் தடுக்க அரசாங்கம் கடுமையாக முயன்றது. அகதிகள் வெளியேற்றத்தை தடுப்பதில் ஆரம்பத்தில் கடற்படை அவ்வளவு அக்கறை காட்டவில்லையென்று கூறப்பட்டாலும், பின்னர் தடுப்பதில் முனைப்புக் காட்டியது.

பெரும்பாலும்கிழக்குப் பகுதியிலிருந்து புறப்பட்ட தமிழர்களை அதிகம் ஏற்றிய படகுகளே பெரும்பாலும் தடுக்கப்பட்டன. தெற்கிலிருந்து அவுஸ்திரேலியா நோக்கிப் படையெடுத்த அகதிகளை அரசாங்கம் அவ்வளவாகக் கண்டுகொள்ளவில்லை. தங்காலையில் படகு ஒன்றில் இருந்த மீனவர்களைக்கொன்றுவிட்டு அதனைக் கடத்தி சிலர் அவுஸ்திரேலியாவுக்கு தப்பிச்சென்ற போதுதான் அரசாங்கம் தீவிர தடுப்பு நடவடிக்கையில் இறங்கியது. இதுவரை 3 ஆயிரத்திற்கும் அதிகமான அகதிகளின் பயணங்களைத் தடுத்துவிட்டதாக அரசாங்கம் கூறுகிறது. இருந்தாலும் இலங்கை அரசாங்கம் நினைத்திருந்தால், முழுமையாகக் கட்டுப்படுத்தக்கூடிய ஆற்றல் அதனிடம் இருந்தது என்பதை மறுக்கமுடியாது. வலுவான கடற்படை-அமெரிக்காவின் அதி நவீன கடற்கண்காணிப்பு சாதனங்கள் பொருத்தப்பட்ட விமானங்கள் என்பன போன்ற வசதிகளை கொண்டிருந்த இலங்கை, படகு அகதிகளை முற்றாகவே கட்டுப்படுத்தியிருக்கலாம். ஆனால், அவுஸ்திரேலியாவை வழிக்குக் கொண்டுவருவதற்காக இலங்கை அரசாங்கம் அகதிகளை கட்டுப்படுத்துவதை இழுத்தடித்துள்ளதாகவே கருதப்படுகிறது.

அவுஸ்திரேலியாவுக்கு தலைக்கு மேல் வெள்ளம்போக, அங்குள்ள எதிர்க்கட்சிகள் அரசுக்கெதிராக குரல் எழுப்பிக்கொண்டிருக்க வேறுவழியின்றி இலங்கையின் காலடியில் வந்துவிழுந்தது. போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பாடசாலைகளைக் கட்டிக்கொடுக்கவும் ஏனைய அபிவிருத்தித் திட்டங்களுக்கு உதவவும் அவுஸ்திரேலியா முன்வந்துள்ளது. அத்துடன் இலங்கையின் கடற்படையின் கண்காணிப்புத் திறனை நவீன மயப்படுத்துவதற்கும் புலனாய்வுத் தகவல்களை பரிமாறிக் கொள்வதிலும் இணைந்து செயுற்படவுள்ளது. இலங்கைக்கு இவையெல்லாம் எதிர்பாராத அதிர்ஷ்டங்கள். இதுமட்டுமல்ல கொமன்வெல்த் மாநாட்டிற்கு எதிர்பார்க்கப்பட்ட தடைகளை உடைப்பதற்கும் அவுஸ்திரேலியாவையே பயன்படுத்தப் போகிறது.





அவுஸ்திரேலியாவை நோக்கிப் படையெடுத்த அகதிகளால்,இலங்கை அரசுக்கு இப்போது பெரும் அனுகூலங்கள் கிடைக்கவுள்ளன. இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள பதற்றத்தினால் அடைக்கலம் தேடி வெளியேறக்கூடிய அகதிகளுக்கான முக்கியமான வாசல் ஒன்றையும் அரசாங்கம் அடைத்துவிட்டுள்ளது. இந்த வகையில் இலங்கை அரசுக்கு பெரும் திருப்தி. ஏனென்றால் தமிழர்கள் புகலிடம் தேடக்கூடிய அவுஸ்திரேலியா போன்ற நாடுகளின் வாசல்களை அடைப்பது இலங்கைக்கு மிகவும் பாதுகாப்பானது. உள்நாட்டு நெருக்கடி நிலைமைகளால் சர்வதேச அரங்கில் இலங்கை மீது ஏற்படக்கூடிய அழுத்தங்களை அது குறைத்துவிடும். அந்த வகையில் அவுஸ்திரேலியாவுடன் ஏற்பட்டுள்ள நெருக்கமும் இணக்கப்பாடுகளும் இலங்கை அரசாங்கம் எதிர்பார்த்ததைவிடவும் அதிக பலனைக் கொடுக்கலாம்.

தொகுப்பு -சாருகன்
நன்றி: இணையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2012 இல்




**இந்த** ஆண்டு 2012 ஐ மீட்டுப் பார்த்தால், எத்தனை தொழில்நுட்ப அதிசயங்கள் நடந்தேறி இருக்கின்றன என்ற வியப்பு நம்மை நிச்சயம் சூழ்ந்து கொள்ளும். இவற்றில் அதிக அதிசயத்தைத் தந்தது மைக்ரோசொப்ட் நிறுவனம் தான். அதன் வியத்தகு செயற்பாடுகளைச் சற்றுத் திரும்பிப் பார்க்கலாம்

மைக்ரோசொப்ட் நிறுவனத்தைப் பொறுத்த வரை, 2012 ஆம் ஆண்டு, அதன் சாதனைகளை எண்ணிப் பார்த்து மகிழ்ச்சி அடையும் ஆண்டாகவே அமைந்தது. விண்டோஸ் ஒப்பரேட்டிங் சிஸ்டத்தினை முற்றிலும் புதிய முறையில் வடிவமைத்து, யாரும் எதிர்பாராத வகையில் வசதிகளைக் கொண்டதாக விண்டோஸ் 8 தொகுப்பினை வழங்கியது. பயனாளர்களுக்கான யூசர் இன்டர்பேஸ் என்னும் இடைமுகம் வியப்பினையும், வேகச் செயல்பாட்டினையும் வழங்கியது. குறிப்பாக அதன் தொடுதிரை இயக்கம், நாம் அனைவரும் எதிர்பாராத ஒன்றாகவே இருந்தது. அதே ஒப்பரேட்டிங் சிஸ்டத்தினை, தன் டேப்ளட் கம்ப்யூட்டர்களுக்கும் வழங்கி, தொழில்நுட்பப் பாதையில், இன்னும் ஒரு வெற்றி மைல்கல்லினை மைக்ரோசொப்ட் அமைத்தது. விண்டோஸ் ஆர்.டி. என அழைக்கப்படும் ஒப்பரேட்டிங் சிஸ்டம் ஏ.ஆர்.எம். கட்டமைப்பிலும் இயங்கி, இரு வேறு வகையான சாதனங்களிடையே ஒருங்கிணைப்பினைத் தந்தது.

அடுத்ததாக, விண்டோஸ் போன் 8 மொபைல் சாதனத்தினையும் மைக்ரோசொப்ட் கொண்டு வந்தது. பல புதிய வசதிகள் ம்ட்டுமின்றி, எதிர்காலத்தில் இன்னும் பல புதிய கூடுதல் வசதிகளை அமைப்பதற்கான வாய்ப்புகளையும் இந்த போன் தந்தது. இதன் அமைப்பிற்கேற்ப, வடிவைக்கப்பட்ட நோக்கியா லூமியா 920 மற்றும் எச்.டி.சி. 8 எக்ஸ் மொபைல் சந்தையில் வெற்றிகரமாக விற்பனை ஆகி, மக்களின் வரவேற்பை உறுதி செய்து வருகின்றன.

மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் மக்கள் பதிப்பாகிய, மைக்ரோசொப்ட் ஓபீஸ் தொகுப்பின் புதிய தொகுப்பும் 2012இல் வெளியானது. இது இன்னும் விற்பனைச் சந்தைக்கு வரவில்லை என்றாலும், பயனாளர்கள் இதனை தரவிறக்கம் செய்து பயன்படுத்தலாம். பல லட்சக்கணக்கானவர்கள் இதனைப் பயன்படுத்தி, இதில் இன்னும் மேற்கொள்ளக் கூடிய வசதி வாய்ப்புகள் குறித்து தெரிவித்து வருகின்றனர். இந்த ஓபீஸ் தொகுப்பு, மைக்ரோசாப்ட் நிறுவனம் வழங்கி வரும் மற்ற தொகுப்புகளுடன் எளிதில் இணைந்து செயல்படும்படி அமைக்கப்பட்டுள்ளது இதன் சிறப்பாகும். மேலும், அனைவரும் எளிதில் பெற்று பயன்படுத்தும் வகையில், இதன் உரிமம் பெறும் வழிகள் எளிமைப்படுத்தப்பட்டுள்ளது இன்னொரு சிறப்பாகும்.

மைக்ரோசொப்ட் நிறுவனம், தான் வன்பொருள் பிரிவிலும் சிறப்பாக இயங்க முடியும் என்பதனை 2012இல், சர்பேஸ் ஆர்.டி. என்னும் டேப்ளட் கணனியினை அறிமுகப்படுத்தியதன் மூலம் உறுதிப்படுத்தியது. இதன் மூலம், ஒரு மென்பொருள் நிறுவனமாகத் தன்னை முன்னிறுத்திக்கொண்ட மைக்ரோசொப்ட், டிஜிட்டல் உலகில் சேவை மற்றும் ஹார்ட்வேர் நிறுவனமாகவும் இந்த ஆண்டில் தடம் பதித்துள்ளது.

அடுத்ததாக, மிக நம்பிக்கை வைத்து, கூடுதல் வசதிகளைக் கொண்டதாக அளித்த சேவை எக்ஸ்பாக்ஸ் மியூசிக் சாதனமாகும்.

இசையைப் பொறுத்த வரை, தன் முடிவான ஒரு சாதனமாக இதனை மைக்ரோசாப்ட் வெளியிட்டது. இணையத்தில் இசைக் கோப்புகளை ஒருங்கிணைக்க எளிதாகவும், அதிக திறனுடன் கூடியதாக இது வடிவமைக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு பயனாளரும் தங்களுக்குத் தேவையானதை, தாங்கள் விரும்புவதனை இன்டர்நெட் வழியே பெற இது வழி செய்கிறது. மைக்ரோசொப்ட் நிறுவனம் சென்ற ஆண்டில் தந்த புதிய சேவையாக அதன் அவுட்லுக் டாட் காம் சேவையைக் கூறலாம். இது இறுதியான சேவையாக இருந்தாலும், புதியதாகப் பல மாற்றங்களைக் கொண்டதாக இதனை மைக்ரோசொப்ட் புதுப்பித்து வழங்கியது.

தொடர்ந்து மென்பொருள் பிரிவில் மன்னனாக இயங்கிய மைக்ரோசாப்ட் நிறுவனத்திற்கு, 2012 ஆம் ஆண்டு என்றும் நினைவில் வைத்துக் கொள்ளும் அளவிலான ஆண்டாக இருக்கும்.

கூகுள் மற்றும் ஆப்பிள் நிறுவனங்களுக்குச் சவால் விடும் வகையில் மொபைல் பிரிவிலும் சாதனங்களைக்கொண்டு வந்த இந்த ஆண்டு அந்நிறுவனத்தின் முக்கிய சாதனைக் கற்களைப் பதித்த ஆண்டாகும்.

## சீனாவிலும் இப்படி....

விண்டோஸ் ஒப்பரேட்டிங் சிஸ்டத்தினை அதற்கான கட்டணம் செலுத்திப் பெறாமல், நகலெடுத்து திருட்டுத் தனமாகத் தாங்கள் விற்பனை செய்திடும் வழக்கத்தினைப் பல சீன நிறுவனங்கள் மேற்கொண்டிருப்பதாக, அண்மையில் மைக்ரோசாப்ட் சீனாவில் தெரிவித்தது. பதினாறு நிறுவனங்கள் இவ்வாறு வர்த்தக ரீதியாக செயல்பட்டு வருகின்றன. இவர்களுடன் தனிப்பட்ட முறையில் பல முறை மைக்ரோசாப்ட் பேச்சு வார்த்தை நடத்தி, ஒப்பரேட்டிங் சிஸ்டத்திற்குக் கட்டணம் செலுத்தி உரிமம் பெறுமாறு கேட்டுக் கொண்டுள்ளது. ஆனால், அந்த நிறுவனங்கள் தொடர்ந்து, உரிமம் பெறாத ஒப்பரேட்டிங் சிஸ்டங்களையே பயன்படுத்தி வருகின்றன. இதனால், வெறுப்படைந்த மைக்ரோசாப்ட் நிறுவனம், குறிப்பிட்ட நாள் வரைக்குமான எச்சரிக்கையினைத் தந்துவிட்டு, இவ்வாறு கட்டணம் செலுத்தாமல், ஒப்பரேட்டிங் சிஸ்டத்தைப் பதிந்து தருபவர்கள் மீது சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப் போவதாக அறிவித்துள்ளது. கடந்த 2011 ஆம் ஆண்டில், மைக்ரோசொப்ட் தலைமை நிர்வாகி ஸ்டீவ் பால்மர், அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா மற்றும் சீன நாட்டு தலைவர் ஹூ ஜின்ட்டோ ஆகியோரைச் சந்தித்து, இது குறித்து ஆலோசனை நடத்தினார். அப்போது பத்து கணனிகளில் ஒன்றில்தான் கட்டணம் செலுத்தி வாங்கப்பட்ட சிஸ்டம் இருப்பதாகக் குறிப்பிட்டார். மைக்ரோசொப்ட் நிறுவனமே, பல கணனிகளை சீனாவில் வாங்கிப் பார்த்த போது 91 சதவிகித கணனிகளில் உரிமம் பெற்ற சிஸ்டம் இல்லாததனைக் கண்டதாகத் தெரிவித்தார். திருட்டு நகல் பதிப்புகளை பயன்படுத்துவதால், இவை அனைத்திலும் மால்வேர் எனப்படும் கெடுதல் விளைவிக்கும் புரோகிராம்கள் இருக்கின்றன என்றும், இவை கணனி செயல்பாட்டிற்கு உகந்த சூழ்நிலையைத் தராது என்றும் குறிப்பிட்டார். மேலும் குறிப்பிடுகையில், தற்போது வெளியிடப்பட்டிருக்கும் விண்டோஸ் 8 ஒப்பரேட்டிங் சிஸ்டம், திருட்டு நகல் எடுக்க இயலாத வகையில் நவீன தொழில் நுட்பம் மூலம் வடிவமைக்கப்பட்டிருந்தாலும், இதனையும் நகலெடுக்க கூடுதல் திறமையுள்ளவர்கள் இருப்பதாகக் குறிப்பிட்டார்.




## தகவல் தொழில்நுட்பம்

## இல் 2013

**பல** நூறு கோடி டொலர் முதலீட்டில் தொடர்ந்து இயங்கும் தொழில் பிரிவு எது எனக் கேட்டால், சிறிதும் தயக்கம் இன்றி, அன்ரி வைரஸ் புரோகிராம் தயாரிக்கும் நிறுவனப் பிரிவினைச் சுட்டிக் காட்டலாம். கணனிகளில் நுழைந்து, தனிப்பட்ட தகவல்களையும், நிறுவனங்களின் முக்கிய தகவல்களையும் திருடி, அவற்றின் மூலம் பல கோடி டொலர் இழப்பினைத் தரும் வைரஸ் புரோகிராம்கள் தொடர்ந்து இணையம் வழி பரவி வருகின்றன.

எனவே கணனி பயன்படுத்தும் ஒவ்வொருவரும், வைரஸ் எதிர்ப்பு புரோகிராம்களை வாங்கிப் பயன்படுத்தியே ஆக வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். தனி நபர்கள் இதில் பணத்தைச் செலவழிக்கத் தயங்குவதால், பல அன்ரி வைரஸ் நிறுவனங்கள் தங்கள் தயாரிப்பின் அடிப்படை வசதிகளைத் தரும் தொகுப்புகளை இலவசமாக இணையத்தில் வழங்கி வருகின்றனர்.

வரும் 2013 ஆம் ஆண்டில் நமக்கு தொடர்ந்து கிடைக்க இருக்கும் அன்ரி வைரஸ் தொகுப்புகள் இதோ..

### 1. அவாஸ்ட் (avast):

CNET நிறுவனத்தின் டவுண்லோட் தளத்தில், அவாஸ்ட் இலவச புரோகிராம் அதிக எண்ணிக்கையில் டவுண்லோட் செய்யப்பட்டுள்ளது. இலவசமாகக் கிடைக்கும், ஏவிஜி மற்றும் அவிரா அன்ரி வைரஸ் தொகுப்புகளைக் காட்டிலும் அதிக எண்ணிக்கையில் இது டவுண்லோட் செய்யப்பட்டுள்ளது. வைரஸை தடுப்பது மட்டுமின்றி, இதன் செயல்பாட்டிற்கு மிகக் குறைந்த அளவே Ram memary ஐ அவாஸ்ட் பயன்படுத்துகிறது. இதனைப் பெற நீங்கள் செல்ல வேண்டிய இணைய தள முகவரி:

http://www.avast.com/freeantivirusdownload

### 2. ஏவிஜி அன்ரி வைரஸ் (avg antivirus):

பல ஆண்டுகளாக, இலவச அன்ரி வைரஸ் தொகுப்பு பயன்பாட்டில், ஏவிஜி அன்ரி வைரஸ் தொகுப்பு தான் முன்னணியில் இருந்தது. விண்டோஸ் 8 சிஸ்டத்தில், அதன் யூசர் இன்டர்பேஸ் தளத்திற்கு ஏற்ற வகையில், இந்த இலவச அன்ரி வைரஸ் கிடைக்கிறது. ஆனால், இதனை இன்ஸ்ரோல் செய்வது தான் சற்று சிக்கலான வழியாக உள்ளது. இதனைப் பெற நீங்கள் செல்ல வேண்டிய இணைய தள முகவரி:

http://free.avg.com/inen/downloadfreeantivirus

### 3. ஆட் அவேர் அன்ரி வைரஸ் (AdAware Free Antivirus+):

ஒரு முழுமையான வைரஸ் எதிர்ப்பு புரோகிராமாக இது வளர்ச்சி பெற்றுள்ளது. அதனாலேயே, தற்போது மூன்றாம் இடத்தைப் பிடிக்கும் அளவிற்கு வளர்ந்துள்ளது. ஆனால், கட்டணம் செலுத்திப் பெறும் புரோகிராமில் உள்ள சில மேம்படுத்தப்பட்ட வசதிகள் இதில் இல்லை. இதனைப் பெற செல்ல வேண்டிய முகவரி: http://www.lavasoft.com/products/ad_aware_free.php

### 4. அவிரா (Avira):

விண்டோஸ் ஒப்பரேட்டிங் சிஸ்டத்திற்குள், எந்த வழியில் நுழைந்தாலும், கெடுதல் புரோகிராமினைக் கண்டறிவதில், இது சிறந்த புரோகிராமாகக் கருதப்படுகிறது. இதனை இன்ஸ்ரோல் செய்தவுடன், இயக்கவும், நிறுத்தவுமான பட்டன் மட்டுமே காட்டப்படுகிறது. இதனை இன்ஸ்ரோல் செய்தால், பிரவுசரின் மாறா நிலை தேடல் சாதனம் ASK.com என்பதாக மாற்றப்படுகிறது. தினந்தோறும் இதனை அப்டேட் செய்திடுமாறு கிடைக்கும் பாப் அப் செய்தி பலருக்கு எரிச்சலாக உள்ளது. ஓராண்டுக்கு முன்னர் இது முதல் இடத்தில் இருந்தது. ஆனால், மேற்கூறப்பட்ட காரணங்களினால், தற்போது நான்காம் இடத்திற்கு வந்துள்ளது. இதனைப் பெறும் தளம் http://www.avira.com/en/avira-free-antivirus

### 5. மைக்ரோசாப்ட் செக்யூரிட்டி எசன்ஷியல்ஸ் (Microsoft Security Essentials):

மைக்ரோசாப்ட் நிறுவனத்தால் வடிவமைக்கப்பட்டு, அதன் விண்டோஸ் இயக்கத்தினைக் கட்டணம் செலுத்திப் பெறுபவர்களுக்கு மட்டுமே இந்த அன்ரி வைரஸ் புரோகிராம் இலவசமாகக் கிடைக்கிறது. குறிப்பிட்ட கால இடைவெளியில் தானாகவே, கணனியில் உள்ள பைல்களை ஸ்கான் செய்திடும் வசதி இதில் கிடைக்கிறது. அதுவும், கணனியில் எந்த வேலையும் மேற்கொள்ளாதபோது இது கிடைக்கிறது. மைக்ரோசாப்ட் தரும் இந்த வைரஸ் எதிர்ப்பு புரோகிராம், அனைத்து வைரஸ்களுக்கும் எதிராகப் போராடும் என உறுதியாக நம்ப முடியாது.

### 6. பண்டா க்ளவுட் அன்ரி வைரஸ் (Panda Cloud Antivirus):

வழக்கமான அன்ரி வைரஸ் தொகுப்புகளிலிருந்து மாறுபட்டு காணப்படுகின்றது. இதனை இன்ஸ்ரோல் செய்கையில் சற்று கவனத்துடன் கேள்விகளுக்குப் பதில் அளிக்க வேண்டும். கணனி யில் உள்ள தேடல் சாதனம் மற்றும் ஹோம் பேஜ் ஆகியவற்றை இது மாற்றுகிறது. மேலும், டூல்பார்களையும் பதிக்கிறது.

http://www.cloudantivirus.com/en/ என்ற முகவரியில் இது கிடைக்கிறது.

### 7. ரைசிங் அன்ரி வைரஸ் (Rising Antivirus):


இது ஒரு சீன நாட்டு தயாரிப்பு. முதலில் சீன மொழியில் மட்டுமே கிடைத்து வந்த இந்த இலவச தொகுப்பு, தற்போது ஆங்கில மொழியிலும் கிடைக்கிறது. கட்டணம் செலுத்திப் பெறும் இதன் பதிப்பில் கிடைக்கும் பெரும்பாலான வசதிகள் இதிலும் கிடைக்கின்றன. பன்னாட்டு தொகுப்பு www.risingglobal.com என்ற முகவரி யில் கிடைக்கிறது. ஆனால், இன்னும் 2011 ஆம் ஆண்டு தொகுப்பு தான் வழங்கப்படுகிறது. இதன் சீன தளத்திற்குச் (www.rising .com.cn) சென்றால், V16 2012 என்ற அண்மைக் காலத்திய பதிப்பு கிடைக்கிறது.

### 8. கிங்சாப்ட் அன்ரி வைரஸ் (Kingsoft Antivirus):

கடந்த 11 ஆண்டுகளாக இந்த சீன நிறுவனம் இயங்கி வருகிறது. வேறுபட்ட பல வசதிகளை இந்த அன்ரி வைரஸ் தருகிறது.

### 9: போர்ட்டி கிளையண்ட் (FortiClient):

நெட்வொர்க் செக்யூரிட்டி நிறுவனமான Fortinet வழங்கும் அன்ரி வைரஸ் புரோகிராம், 11 வகை செயல்பாடுகளை இது தருகிறது. தள முகவரி: http://www.forticlient.com/



### 10. அன்த்ரெட் (UnThreat):

அன்ரி வைரஸ் புரோகிராம் பிரிவில், 2011 முதல் செயல்படும் நிறுவனத்தின் தொகுப்பு. இன்ஸ்டலேஷன் செய்திட 100 எம்பி அளவிலான பைல்கள் தேவை.

### 11. கொமடோ அன்ரி வைரஸ் (Comodo Antivirus):

அன்ரி வைரஸ் மற்றும் டிபன்ஸ் என இரு பிரிவுகளில் செயல்படுகிறது. புதிய வைரஸ்கள் வந்தாலும் அவற்றை வடிகட்டி எதிர்கொள்ளும் தொழில் நுட்பம் கொண்டுள்ளது. பெறுவதற்கு http://www.softpedia.com/get/Antivirus/ComodoAntiVirus.shtml என்ற முகவரிக்குச் செல்லவும்.

### 12. நானோ அன்ரி வைரஸ் (NANO AntiVirus)

ரஷ்யாவிலிருந்து கிடைக்கும் தொகுப்பு. தற்போது சோதனைத் தொகுப்பு மட்டுமே இலவசமாகக் கிடைக்கிறது. மிக எளிமையான யூசர் இன்டர்பேஸ் உள்ளது. இன்னும் பல இலவச அன்ரி வைரஸ் புரோகிராம்களும் இணையத்தில் கிடைக்கின்றன. இவை தொடர்ந்து அதே திறனுடன் இயங்குமா என்பது சந்தேகத்திற்குரியதாக உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாத முத்திரை குத்தவே அரசு சதித்திட்டம் தீட்டியுள்ளது

## சுமந்திரன் எம்.பி. குற்றச்சாட்டு

(கொழும்பு)

தமிழ் இளைஞர்களை மிகவும் திட்டமிட்ட முறையில் வன்முறையில் தள்ளி அவர்களைப் பயங்கரவாதிகள் எனக் காட்டுவதற்கு இந்த அரசு முயல்கிறது.தமிழ் இளைஞர்கள் எல்லோரும் இந்த அரசின் சதி வேலையில் சிக்கவேண்டாம் என தமிழ் தேசிய கூட்டமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது. கொழும்பில் முஸ்லிம் தமிழ் தேசிய முன்னணி நேற்று முன்தினம் புதன்கிழமை நடத்திய ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்

அவர் மேலும் தெரிவிக்கையில், சிங்கள மக்கள் வடகிழக்கில் சுயாதீனமாக வாழ்வதை நாம் எதிர்க்கவில்லை. ஆனால் அங்குள்ள தமிழ் மக்களின் சனத்தொகை பரம்பலை மாற்றியமைக்கும் வகையில் அரசால் திட்டமிட்ட அடிப்படையில் சட்டவிரோத குடியேற்றங்கள் நிறுவப்படுவதையே நாம் எதிர்க்கின்றோம்.

கைது செய்யப்பட்ட யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று அரசால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சட்டத்தின் மூலம் மாணவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்தாது 18 மாதங்களுக்கு தடுத்து வைத்து அவர்களை குற்றவாளிகள் ஆக்கி தண்டனை வழங்கமுடியும்.

கைது செய்யப்பட்ட மாணவர்கள் தங்களை புனர்வாழ்வுக்கு உட்படுத்துமாறு கூறினார்கள் என்று அரசு கூறுகிறது. இது வெறும் கேலிக்கூத்தாகும். தமிழ் இளைஞர்கள் வன்முறையில் இறங்க வேண்டும். அவர்களை பயங்கரவாதிகளாகக் காட்ட வேண்டும் என்பதே அரசின் திட்டம். அதற்கான பாதையை அரசு திறந்துள்ளது.இந்த சதித்திட்டத்தை நன்கு விளங்கி தமிழ் இளைஞர்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும். அரசின் இந்த சதி வலையில் சிக்கி, வன்முறையில் இறங்கிவிடக்கூடாது. தமிழர்களின் உரிமைகளுக்காக தமிழ் தேசிய கூட்டமைப்பு நடத்தும் அறவழி போராட்டத்தில் இளைஞர்கள் இணைய வேண்டும் .

தமிழ் பெண்களை அரசு பலவந்தமாக இராணுவத்தில் சேர்த்துள்ளது. இவர்கள் தொடர்பில் நாம் தொடர்ந்தும் கேள்வி எழுப்புகின்றோம். எந்த பதிலையும் அரசு வழங்கவில்லை.

இராணுவத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்ட பெண்களில்சிலர்தப்பியோடியும்சிலர்மனநிலை பாதிக்கப்பட்டும் உள்ளனர்.இவை அனைத்தும் தமிழ் மக்களை அடிமைப்படுத்தும் செயலாகவே நாம் பார்க்கின்றோம். இந்த மாதிரியான அடாவடித்தனங்களை அரசு உடனடியாக நிறுத்தவேண்டும். தமிழர்களை அமைதியாகவாழ அனுமதிக்க வேண்டும் என்றார். (அ-2)

## பொதுக்கூட்டமும் கௌரவிப்பும்

காங்கேசன்துறை உதயசூரியன் சனசமூக நிலையத்தின் 2013 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பொதுச்சபை கூட்டம் கோண்டாவில் வேதபாராயண சனசமுக நிலைய மண்டபத்தில் வ.முருகேசு தலைமையில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெற வுள்ளது.

இச்கூட்டத்தில் 5 ஆம் தர புலமைப்பரீட்சையில் 2010,2011,2012 ஆம் ஆண்டுகளில் சித்தி அடைந்த ஜெ.சுபினா, நா.ஷிசானா, பா.சாம்பவி,சு.பிரதாஞ்சன் ஆகியோர் அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற சிறுவர்களுக்கான நாடகப் போட்டியில் சிறந்த நடிகன் என விருது பெற்ற செ.கேசிகன் மற்றும் விபுலானந்த மாற்றுவலுடைய சொ. தருமதன், வி.விஜயலாதன் ஆகியோர் பாராட்டி கௌரவிக்கப்படவுள்ளனர். அத்துடன் 2013 ஆம் ஆண்டிற்கான நிர்வாகத் தெரிவும் நடைபெறவுள்ளதாக சனசமூக நிலைய தலைவர் அறிவித்துள்ளார்.(அ-9)

# யாழ்.மாவட்ட செயலகத்தின் ஓவியப் போட்டி முடிவுகள்

யாழ்.மாவட்ட செயலகத்தினால் அண்மையில் நடத்தப்பட்ட ஓவியப் போட்டியின் முடிவுகளை யாழ்.மாவட்ட செயலக மேலதிக அரசாங்க அதிபர் ரூபினி வரதலிங்கம் அறிவித்துள்ளார். இதில் வெற்றி பெற்றோர் விபரங்கள் வருமாறு,

*பாடசாலை மட்டம்*

கீழ்ப்பிரிவு

ப.லஜீபன் (யா/நயினாதீவு ஸ்ரீ கணேசா மகா வித்தி யாலயம்- தரம் 9,) கோ.அருள் ஞான கொன்சலன் (யா/மணற்காடு றோ.க.த.க பாடசாலை குடத்தனை-தரம்8), ம.கீதானந்த் (யா/ சாவ கச்சேரி இந்துக்கல்லூரி-தரம்9), ஜா.மாதங்கி (யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை-தரம்- 9),ஜி.அருண்ரோஜர் (யா/ சென்.ஜோன்ஸ் கல்லூரி- தரம் 8), ம. கீதாஞ்சலி (யா/ சாவ கச்சேரி இந்துக்கல்லூரி-தரம் 6)

மேற்பிரிவு

மதுனிகா ரதீஸ்வரன் (யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி-தரம் 13), பா.றஜீவன் (யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயம்-தரம் 13), லாவண்யா லம்போதரஜோதி (யா/இந்து மக ளிர் கல்லூரி-தரம் 12), ப.பிரதாபன்(யா/நயி னாதீவு.ஸ்ரீ கணேசா மகா வித்தியால யம்-தரம் 10), ம.பிர சாந்தி (யா/முத்துத்தம்பி மகா வித்தியாலயம்-தரம்12), மு.கிரிசனா (கோப்பாய்).

திறந்த ஓவியப் போட்டி

சர்மலா சந்திரதாசன் (கே.கே.எஸ் வீதி, மாவிட்டபுரம், தெல்லிப்பழை), சிவனேஸ்வரன் சுமணன் (வெள்ளாம்போக்கட்டி கொடிகாமம்), பாத்திமா அவ்றோஸ் அக்பர் (யாழ்ப்பாணம்) (அ-9)

# வட்டக்கச்சி மக்களும் வெள்ளத்தால் பாதிப்பு

## உதவிக்காக ஏங்கி தவிப்பு

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சியில் நேற்று முன்தினம் தொடக்கம் பெய்து வரும் கனமழை காரணமாக அப்பகுதி மக்கள் இடம்பெயர வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக மேற்குறித்த பகுதியில் உள்ள பள்ளமான இடங்களில் உள்ள வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்துள்ளது.

அப்பகுதியில் உள்ள வீதிகளையும் வெள்ளம் ஊடறுத்தும் பாய்வதால் பயணம் செய்ய முடியாத நிலையும் உள்ளது.குறிப்பாக வட்டக்கச்சியில் இருந்து நாவலடி செல்லும் பிரதான வீதி, பெரியபுலம் வீதி ஆகியவற்றிலேயே வெள்ளம் ஊடறுத்து பாய்கின்றது. வீடுகளுக்குள் புகுந்துள்ள வெள்ளத்தால் வீட்டிற்குள் இருக்க முடியாத மக்கள் வெளியேறி மழையில் நனைய வேண்டிய நிலை உள்ளது.

இவ்வாறு பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்திற்கு உதவ யாராவது முன் வருவார்களா?என அப்பகுதி மக்கள் காத்திருக்கின்றனர். (அ-3-86)

# ஆணைக்குழுவின் பரிந்துரைகள் ஜனாதிபதியால் மறைக்கப்பட்டுள்ளன

## கரு எம்.பி. குற்றச்சாட்டு

கருணாவும் கே.பியும் இலங்கை அரசாங்கத்தின் செல்லப்பிராணிகளாக உள்ளனர். எனினும் ஏதும் அறியாத தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்படுவார்கள் என்று ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கரு ஜயசூரிய குற்றம் சுமத்தியுள்ளார்.

ஜனநாயக ரீதியாக செயற்பட்ட யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் 4 மாணவர்கள் கைது செய்யப்பட்டு விடுதலைப்புலிகள் என்ற முத்திரையுடன் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். எனினும் அவர்கள் மீது இன்னும் குற்றச்சாட்டுகள் எவையும் சுமத்தப்படவில்லை.

அவர்களின் பெற்றோர்களும் அவர்களை பார்க்க அனுமதிக்கப்படவில்லை.அவர்களுக்கு நல்லிணக்கம் தொடர்பாக பயிற்சிகள் வழங்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

எனினும் தாம் நியமித்த நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளையே ஜனாதிபதி மறைத்து வைத்துக்கொண்டிருப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# புலிகளுக்கு 5 மில்லியன் டொலரை வழங்க ராஜீவ்காந்தி இணங்கினார்

## விக்கிலீக்ஸ் தகவல்

இந்து-லங்கா உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஏற்படும் மாதாந்த வரி வருமானத்துக்காக நட்டஈட்டை தருவதற்கு அப்போதைய இந்திய பிரதமர் ராஜீவ்காந்தி இணங்கினார் என்று இலங்கையில் உள்ள அமெரிக்க தூதரகம் வோஷிங்டனில் உள்ள இராஜாங்க திணைக்களத்துக்கு அறிவித்திருந்ததாக விக்கிலீக்ஸ் தகவல் வெளியாகியுள்ளது.

இதனை இலங்கைக்கான அப்போதைய உயர்ஸ்தானிகர் கே.என். திக்சித் மற்றும் இந்திய பிரதமரின் பேச்சாளர் ஆகியோர் லண்டன் ஒப்சேவருக்கு தெரிவித்திருந்தனர்.

இதனையடுத்து லண்டன் ஒப்சேவரை கோடிட்டு இலங்கையின் பத்திரிகைகளும் இந்த இரகசிய உடன்படிக்கை செய்தியை பெரிதாக பிரசுரித்திருந்ததாக விக்கிலீக்ஸ் தகவல் வெளியாகியுள்ளது.


1988 ஆம் ஆண்டு ஏப்ரல் 5 ஆம் திகதி இந்த தகவல் கொழும்பு அமெரிக்க தூதரகத்தினால் இராஜாங்க திணைக்களத்துக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த தகவலின்படி ராஜீவ்காந்தி மாதம் ஒன்றுக்கு விடுதலைப்புலிகள் அமைப்புக்கு நட்டஈடாக இந்திய ரூபாய்களில் 5 மில்லியன்களை வழங்க இணக்கம் வெளியிட்டிருந்தார் என விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது. (அ-2)


# நத்தார் புதுவருட ஆசீர்வாத நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

கானான் திருச்சபையின் நத்தார் புதுவருட ஆசீர்வாத நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. இதில் கண்களுக்கினிய நடனங்கள், நகைச்சுவை நாடகங்கள், பரவசமூட்டும் பாடல்கள், மழலைப் பேச்சுக்கள் என்பனவும் புதுவருட ஆசீர்வாத ஆராதனை, மறுநாள் இரவு 7 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும் எனவும் போதகர் அறிவித்துள்ளார். (அ-9)





யாழ்.இளைஞர்களின் உள்ளூர் வேலைவாய்ப்பை மையமாக கொண்டு திசைகாட்டி நிறுவனத்தினரால் உருவாக்கப்பட்டுள்ள முத்துமணி காமன்ஸ் ஆடைத் தொழிலக திறப்புவிழாவும் திசைகாட்டி குழுமத்தலைவர் சின்னத்துரை செல்வராசாவின் பதவி ஏற்பு நிகழ்வும் கடந்த 23 ஆம் திகதி நடைபெற்றது. இந்நிகழ்வின்போது.... (படங்கள்:-எஸ்.ஆர்.கரன் , உ.சாளின்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் கிடைக்கவில்லை

(பூந்தோட்டம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் மாந்தை கிழக்கு பிரதேசம் வெள்ளத்தில் மூழ்கிக் கிடக்கும் நிலையில் வெலி ஓயாவில் புதிதாக அமைக்கப்படவுள்ள பிரதேச செயலகத்திற்கு தமிழ் கிராமங்களை உள்வாங்குவதற்கு அதிகாரிகள் முக்கியத்துவம் கொடுத்து செயற்பட்டு வருகின்றனர் என பாண்டியன்குளம் பிரதேச சபை உபதலைவர் சி.செந்தூரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில், மாந்தை கிழக்கு பிரதேசத்தில் அனைத்து கிராம சேவகர் பிரிவும் வெள்ளத்தால் முழுமையாக பாதிப்படைந்துள்ளன. இதனால் பல கிராமங்களுக்கான போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளதுடன் அப்பகுதி மக்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

இத்துடன் சிராண்டிகுளம் கிராமம் முழுமையாக நீரில் மூழ்கியுள்ளது. அம் மக்களுக்கான எவ்வித நிவாரணமும் வழங்கப்படவும் இல்லை. பிரதேச சபையினால் அம்மக்களின் நிலைமைகள் தொடர்பில் பார்வையிட்டும் எம்மாலான உதவிகளை வழங்குவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளோம்.

இதேவேளை பேருந்துகள் சில கிராமங்களுக்கு செல்கின்றது. ஆனால் பல கிராமங்கள் எவ்வித போக்குவரத்துமின்றி காணப்படுகின்றது.

நட்டான்கண்டல் கிராமமும் வேறு சில கிராமங்களிலும் வர்த்தக நிலையங்கள் உட்பட வீடுகள் சேதமடைந்தள்ளன.

சில கிராமங்களில் சிறு குளங்கள் பாதிப்படைந்துள்ளன. அக்குளங்களை பாதுகாக்கும் நோக்கோடு திணைக்களங்கள் வருகை தராத போதிலும் பொதுமக்கள் நீரை வெளியேற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

பலநோக்கு கூட்டுறவு சங்கங்களை நிவாரணம் வழங்குதற்கு உசார் நிலையில் இருக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும் இதுவரை எதுவித நிவாரணமும் வழங்கப்படவில்லை.

இவ்வாறான நிலையில் வெலி ஓயாவில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள பிரதேச செயலகத்திற்கு கரைதுறைபற்று பிரதேச செயலகத்தில் இருந்து தமிழ் கிராமங்களை இணைப்பது தொடர்பான செயற்பாடுகள் மும்முரமாக இடம்பெற்று வருவதுடன் அனைத்து அதிகாரிகளும் அவ்வேலையிலேயே கரிசனை கொண்டுள்ளனர் எனவும் தெரிவித்துள்ளார்.

(அ-9- 266-250)

# தொடரும் வைத்தியர்களின் பணிப்புறக்கணிப்பால் நோயாளர்கள் அவதி

யாழ். போதனாவில் தொடரும் வைத்தியர்களின் ஒரு மணிநேரப் பணிப் புறக்கணிப்பினால் நோயாளிகள் பெரும் அவஸ்தையை எதிர்கொண்டு வருகின்றனர்.

இப்பணிப்புறக்கணிப்பினால் மழையின் மத்தியிலும் கால்கடுக்க காத்திருந்து சிகிச்சை பெற்றுச் செல்ல வேண்டிய நிலை காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில் காது, மூக்கு, தொண்டை வைத்திய நிபுணர் ஒருவர் இனந்தெரியாதோரால் தாக்கப்பட்டிருந்தார்.

இத்தாக்குதலின் சூத்திரதாரிகளை கண்டறியும் வரையிலும் தாம் இவ்வாறானதொரு பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலை மருத்துவ சங்கத்தினர் அறிவித்துள்ளனர். எனினும் இதுவரையிலும் குறித்த தாக்குதல் தொடர்பில் பொலிஸார் எவரையும் கைது செய்யாததோடு வைத்தியர் மீதான தாக்குதலுக்கான காரணமும் கூறப்படவில்லை.

வைத்தியர்கள் நோயாளிகளின் நலனை கருத்தில் கொள்ள வேண்டும் என ஆர்வலர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (அ-4)

## பொதுக்கூட்டம் கருத்தரங்கமும்

வல்வை மாலுமிகள் நலன்புரி சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் கருத்தரங்கமும் நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு வல்வெட்டித்துறை தெணி ஒழுங்கையில் அமைந்துள் வி.டி.ஏ.ஜி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கத்தில் சிறப்புரைகளை கப்டன்.எஸ் பால்ராஜ், கப்பல் பிரதம பொறியியலாளர் எஸ் பாலேந்திரன், யாழ்.மருதனார் மடம் கிளை பல்கலைக்கழக விரிவுரையாளர் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

தொடர்ந்து இக்கருத்தரங்கில் க.பொ.த சாதாரணதரம், க.பொ.த உ/த மாணவர்களை கலந்து கொண்டு பயன்பெறுமாறு கேட்கப்பட்டுள்ளது. வல்வை மாலுமிகள் நலன்புரி சங்கத்தின் புதிய நிர்வாக தெரிவும் இடம் பெறவுள்ளது. (அ)

## சிவப்பு மழையில் உயிரியல் துகள்கள்

நாட்டில் அண்மைக்காலமாக பெய்த சிவப்பு மழையில் உயிரியல் துகள்கள் உள்ளமை உறுதிசெய்யப்பட்டுள்ளது.

பிரித்தானிய பக்கிங்ஹாம் பல்கலைக்கழகம், செவனகல பிரதேசத்தில் பெய்த சிவப்பு மழையின் மாதிரிகளில் மேற்கொண்ட சோதனையின் போதே இது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் மேற்படி சிவப்பு மழை தொடர்பான ஆய்வுகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# நல்லிணத்தின் மூலமே இராணுவ வெற்றியை தக்க வைக்க முடியும்

## இந்திய இராணுவ மேஜர் அசோக் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் அரசியல் நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டியது அவசியமானது என முன்னாள் இந்திய சிரேஷ்ட இராணுவ மேஜர் அசோக் மேத்தா தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அதிகாரப் பகிர்வு, குற்றச்செயல்களுக்கு தண்டனை விதித்தல் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளின் மூலம் நாட்டில் அரசியல் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும். அரசியல் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதன் மூலமே இராணுவ வெற்றியை தக்க வைத்துக் கொள்ள முடியும். யுத்தத்தில் இடம் பெயர்ந்த மக்கள் மீள் குடியேற்றப்பட்டதுடன் நிலக் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன.

யுத்தம் நிறைவடைந்து மூன்றாண்டு காலப்பகுதியில் வடக்கில் பாரியளவு பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டுள்ளது.

யுத்த காலத்தில் கடமையில் ஈடுபட்டிருந்த படையினரின் பெரும் பகுதியினர் வடக்கிலிருந்து அகற்றிக் கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். (அ-2)

## சில்ப 2012 கைப்பணிகள் கண்காட்சி நேற்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

சில்ப 2012 கைப்பணிகள், சிறு மற்றும் நடுத்தர கைத்தொழில் முயற்சிகளுக்கான கண்காட்சியும் விற்பனைச் சந்தையும் நேற்று சிறிமாவோ பண்டாரநாயக்க ஞாபகார்த்த கண்காட்சி மண்டபத்தில் ஆரம்பமானது.

எதிர்வரும் 30 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள கண்காட்சி மற்றும் விற்பனைச் சந்தையினை பிரதம விருந்தினராக கலந்து கொண்ட நகர அலுவல்கள் சிரேஷ்ட அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

இந்த நிகழ்வில் பாரம்பரிய கைத் தொழில்கள் மற்றும் சிறுதொழில் முய ற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா, பிரதி அமைச்சர் வீரகுமார திசாநாயக்க, செயலாளர் வே. சிவஞான சோதி ஆகியோர் கலந்து கொண்டனர். (அ-6)

## சட்டத்தரணிகள் சங்க கருத்தமர்வு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண சட்டத்தரணிகளுக்கான விசேட கருத்தமர்வு ஒன்று நேற்றைய தினம் நடைபெற்றது.

யாழில் உள்ள கிறீன்கிறாஸ் ஹோட்டலிலேயே மேற்படி கருத்தரங்கு நடைபெற்றது.

காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகிய இக்கருத்தரங்கு பி.ப 4.30 மணிவரை இடம்பெற்று இருந்தது.

இதன்போது பெண்கள் எதிர்நோக்கும் பாலியல் வன்புணர்வு ரீதியான ஊடல் உள தாக்கங்கள், மரபணு (டி.என்.ஏ) பரிசோதனை தொடர்பிலான விளக்கங்கள், சட்ட மருத்துவம், சட்ட நுணுக்கம் தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டன.

இதில் பெருமளவிலான சட்டத்தரணிகள் கலந்து கொண்டு தமது சந்தேக கருத்துக்களினை முன்வைத்திருந்தனர்.

இந்நிகழ்விற்கு ஜனாதிபதி சட்டத்தரணியும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் வடமாகாண கிளையின் உப தலைவியுமான சட்டத்தரணி சாந்தா அபிமன்னசிங்கம் தலைமை வகித்தார். (அ-4)

# சட்டக்கல்லூரி நுழைவுத்தேர்வு சர்ச்சைக்குரிய முறையில்


## மாணவர் அமைப்பு குற்றச்சாட்டு

இவ்வாண்டு சட்டக்கல்லூரி நுழைவுத் தேர்வு சர்சைக்குரிய முறையில் நடைபெற்றதாக சட்டக்கல்லூரி நுழைவுக்கான மாணவர் அமைப்பு தெரிவித்துள்ளது.

இதனையடுத்து சட்டக்கல்லூரிக்கான பரீட்சையை மீள நடத்துமாறு அவ்வமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது. இம்முறை சட்டக் கல்லூரிக்கான பரீட்சையில் அதிகளவான முஸ்லிம் மாணவர்கள் சித்தியடைந்துள்ளதாகக் குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜனவரி மாதம் 7 ஆம் திகதி சட்டக்கல்லூரிக்கான மாணவர் பதவி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

பரீட்சை வினாத்தாள் மீள் மதிப்பீடு செய்யப்பட வேண்டும் அல்லது பரீட்சைகளை மீள நடத்த வேண்டுமென சட்டக்கல்லூரி நுழைவுக்கான மாணவர் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது. (அ-2)



வாழ்வாதார சுழற்சி கடன் உதவித்திட்டத்தின் கீழ் கோண்டாவில் சமுர்த்தி வங்கியினால் 7 பயனாளிகளுக்கு தையல் இயந்திரங்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் கோண்டாவில் சமுர்த்தி வங்கியில் நடைபெற்றது. இதில் பயனாளிகளுடன் வங்கி உத்தியோகத்தர்கள் நிற்பதைப் படத்தில் காணலாம். (படம்:- எஸ்.ஆர்.கரன்)


# பணிநிலை வெற்றிடங்கள்

ஜெயந்திநகர், கிளிநொச்சி என்னும் முகவரியில் அமைந்துள்ள மகாதேவா ஆச்சிரமச் சிறுவர் இல்லத்திற்கு கீழ்க்காணும் பணிநிலை வெற்றிடங்கள் உண்டு.

1. நடன ஆசிரியர் (பெண்) - பட்டதாரி ஆசிரியர் விரும்பத்தக்கது.

2. கணினி ஆசிரியர்கள் -பட்டதாரிகள், டிப்ளோமா சான்றிதழ் பெற்றவர்கள், வெப் டிசைனிங் செய்யக்கூடியவர்கள் விண்ணப்பிக்கலாம்.

நிறுவனத்தின் விதிமுறைகளுக்கு அமைந்து இல்லத்தில் தங்கியிருந்து சேவைபுரிய விருப்பம் கொண்ட நல்லொழுக்கமும் உடல் ஆரோக்கியமும் உள்ள 21 முதல் 35 வயதுக்குட்பட்டவர்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம். (கிழமை நாட்கள் மட்டுமன்றி சனி, ஞாயிறு ஆகிய நாட்களிலும் பணியாற்ற வேண்டும்.)

ஆண் பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்ப முடிவுத்திகதி: 30.12.2012

தொடர்புகளுக்கு:-
தி.இராசநாயகம்
தலைவர்
மகாதேவா ஆச்சிரம சிறுவர் இல்லம்
ஜெயந்திநகர்
கிளிநொச்சி
தொலைபேசி இலக்கம்: 077-0604950, 021-4923118

(இ1925)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தேசிய வளர்ச்சி யோசனைக் கூட்டம்; வெளிநடப்பு செய்தார் ஜெயலலிதா

## -பேசுவதற்கான நேரம் போதாதாம்-

பிரதமர் மன்மோகன்சிங் தலைமையில் நேற்று காலை புதுடில்லியில் கூடிய தேசிய வளர்ச்சி யோசனைக் குழுவின் 57ஆவது கூட்டத்தில் பங்கேற்ற ஜெயலலிதா இடையில் திடீரென வெளிநடப்பு செய்தார்.

கூட்டத்தில் கலந்து கொண்ட ஜெயலலிதாவுக்கு பேசுவதற்கு 10 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. அவர் பேசிக் கொண்டிருந்தபோது பேச்சுக்கு தடை ஏற்பட்டது.

அவர் 10 நிமிடங்கள் பேசி முடித்ததும் அவர் உடனடியாக அவரது உரையினை நிறுத்திக் கொள்ளும் படி மணி அடிக்கப்பட்டது. இதனால் அவர் ஏமாற்றம் அடைந்தார். பின்னர் உடனடியாக அந்தக் கூட்டத்தை விட்டு வெளியேறினார்.

பின்னர் வெளியில் வந்து அவர் இதுபற்றிக் கூறியபோது, ஒரு முதலமைச்சருக்கு தங்கள் தரப்பு விளக்கங்கள், கருத்துக்களைக் கூறுவதற்கு 10 நிமிடங்கள் என்பது போதுமானதல்ல. நான் என் பேச்சைத் தொடங்கி 10 நிமிடங்களில் முடிப்பதற்குள் மணி அடித்து நிறுத்தி விடச் சொன்னார்கள். இதனால் பெரிதும் ஏமாற்றம் அடைந்தேன் என்றார் ஜெயலலிதா.

நான் பிரதமர் தலைமையிலான எத்தனையோ கருத்தரங்குகளில், கூட்டங்களில் கலந்து கொண்டிருக்கின்றேன். இதுபோன்று இதுவரை நிகழ்ந்ததில்லை என்று கூறிய ஜெயலலிதா எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களின் குரல் வளையை அரசு நெரிக்கப் பார்க்கிறது என்றும் கூறினார்.

இக்கூட்டத்தில் 12ஆவது ஐந்தாண்டுத் திட்டம் குறித்து ஒப்புதல் பெறப்படவுள்ளது. இந்தக் கூட்டத்தில் குஜராத் முதல்வர் நரேந்திர மோடி உள்ளிட்ட ஏனைய மாநில முதல்வர்களும் கலந்து கொண்டுள்ளனர்.

பொருளாதார வளர்ச்சியை அதிகரிக்கும் வகையில் புதிய திட்டங்களை அறிமுகப்படுத்த மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. அத்திட்டங்கள் இடம்பெறும் 2012-17 ஐந்தாண்டு வரைவுத்திட்டத்துக்கு ஒப்புதல் பெற மாநிலங்களின் ஆதரவை தேசிய வளர்ச்சிக் குழு கூட்டத்தில் பிரதமர் மன்மோகன்சிங் கோரிக்கை விடுத்தார். அந்த திட்டங்களுக்கு ரூபா 47.70இலட்சம் கோடி நிதி தேவைப்படும் என்று வரவுத் திட்ட அறிக்கையில் மதிப்பிடப்பட்டுள்ளது. இது 11ஆவது ஐந்தாண்டு திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதியை விட 135 சதவீதம் அதிகம் என்று மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

# விசாரணைகளை மேற்கொள்ள இணைகிறது இந்தியா - பாகிஸ்தான்

## -கைச்சாத்தானது ஒப்பந்தம்-

மும்பை பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பாக இந்தியாவில் பாகிஸ்தான் நீதித்துறைக்குழு பயணம் மேற்கொள்வது குறித்து இரு நாடுகளிடையே ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்தாகியுள்ளது.

மும்பைத் தாக்குதல் தொடர்பாக சாட்சிகளிடம் விசாரணை நடத்த பாகிஸ்தான் நீதித்துறைக் குழு அடுத்த ஆண்டு இந்தியா வரவுள்ளது. அக்குழுவின் விசாரணைகள் குறித்த விவகாரங்கள் குறித்து முடிவு செய்வதற்காக இந்தியக் குழு சமீபத்தில் பாகிஸ்தான் சென்றது.

இஸ்லாமாபாத்தில் 5 நாட்கள் பேச்சுவார்த்தை நடத்தப்பட்ட பின் பாகிஸ்தான் குழு இந்தியாவில் விசாரிக்க வேண்டிய விவகாரங்கள் செவ்வாய்க்கிழமை மாலையில் முடிவு செய்யப்பட்டது.

அப்போது இரு தரப்புக்கும் இடையில் ஒப்பந்தம் கைச்சாத்தானது. எனினும் இந்த விவகாரத்தில் இந்தியத் தரப்புக்கு இன்னமும் சில சந்தேகங்கள் இருப்பதை இறுதியாக பாகிஸ்தான் தரப்புக்குத் தெரிவிக்கப்பட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும், பாகிஸ்தான் குழுவினர் இந்தியப் பயணத்தை முடிவு செய்ய இன்னும் சில மாதங்கள் ஆகும் என்று தெரிகிறது.

# புரட்சிப் படையுடன் இணைந்தார் சிரியாவின் இராணுவத் தளபதி

சிரியாவில் இராணுவத் தளபதி ஒருவர் புரட்சி படையினருடன் இணைந்துள்ளது அரசுக்கு பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

சிரியாவில் ஜனாதிபதி பஷர் அல் அசாத்தை பதவி விலகக்கோரி புரட்சி படையினர் தொடர் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

அசாத் பதவி விலக மறுத்ததால் புரட்சி படையினரை அங்கீகரித்து அவர்களுக்கு அமெரிக்கா ஆயுதம் வழங்கி வருகிறது. இதனால் சிரியாவில் ஓயாமல் மோதல் நடந்து வருகிறது.

இதன்காரணமாக கடந்த 22 மாதங்களில் 50ஆயிரம் பேர் பலியாகியுள்ளதுடன் இரண்டு இலட்சம் பேர் அண்டை நாடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

ரஷ்யா, சீனா, ஈரான் ஆகிய நாடுகள் சிரியாவை ஆதரிக்கின்றன. ஜனாதிபதி பஷர் அல் அசாத்தின் பிடிவாத போக்கைக் கண்டித்து துணை ஜனாதிபதி உள்ளிட்ட பலர் பதவி விலகி விட்டனர்.

இதற்கிடையே சிரியாவின் இராணுவத் தளபதி அல் ஷலால் பதவி விலகி புரட்சி படையினருடன் கைகோர்த்துள்ளார்.

அவர் கூறுகையில், சிரிய இராணுவம் கொல்லும் கொலை வெறி கும்பலாக மாறிவிட்டது என தெரிவித்துள்ளார்.

# மலேசியாவில் கடும் வெள்ளம்; 15 ஆயிரம் மக்கள் இடம்பெயர்வு



மலேசியாவின் கிழக்கு கடற்கரை பகுதியில் ஏற்பட்ட பலத்த மழை வெள்ளத்துக்கு 2 பேர் பலியாகியுள்ளனர். 15 ஆயிரம் பேர் வீடுகளை இழந்து தவிக்கின்றனர்.

மலேசியாவில் நான்கு மாகாணங்களில் பலத்த மழை பெய்வதால் தாழ்வான பகுதிகள் வெள்ளத்தால் சூழப்பட்டுள்ளன.

இம்மழைக்கு 2 பேர் பலியாகியுள்ளதுடன் 15 ஆயிரம் பேர் பாதுகாப்பான இடங்களுக்கு சென்றுள்ளனர்.

பகாங் மாகாணத்தில் ஆற்றின் கரை உடைந்து ஊருக்குள் தண்ணீர் புகுந்ததால் பிரதான வீதிகளில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

இன்னும் சில நாட்களுக்கு பலத்த மழை பெய்யும் என வானிலை ஆராய்ச்சிநிலையம்தெரிவித்துள்ளது.

## மண்டேலா வீடு திரும்பினார்

(ஜோஹன்ஸ்பெர்க்)

17 நாட்கள் சிகிச்சைக்குப் பின்னர் நெல்சன் மண்டேலா வைத்திய சாலையில்இருந்துவீடுசென்றுள்ளார்.

தென்னாபிரிக்க முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலா (வயது 94) உடல்நலக் குறைவால் கடந்த 8ஆம் திகதியன்று வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

தீவிர சிகிச்சைக்குப் பின் பூரண குணமடைந்துள்ளார். இதையடுத்து நேற்று முன்தினம் வைத்தியசாலையிலிருந்து வீடு திரும்பினார். (அ-2)



குஜராத்தின் அகமதாபாத்தில் நடைபெற்ற பதவியேற்பு விழாவில் நரேந்திரமோடி நான்காவது முறையாக முதல்வர் பதவியேற்றார். இவ்விழாவில் தமிழக முதல்வர் ஜெயலலிதா நேரில் கலந்து கொண்டு பூச்செண்டு வழங்கி வாழ்த்து தெரிவித்ததைப் படத்தில் காணலாம்.

# நிகாரகுவாவில் எரிமலை வெடிப்பு

நிகாரகுவாவில் மிகப்பெரிய எரிமலை திடீரென வெடித்ததையடுத்து கிராம மக்கள் வெளியேற்றப்பட்டனர்.

அமெரிக்க நாடான நிகாரகுவாவில் சினென்டெக்கா நகரம் அருகே சான் கிறிஸ்டோபல் என்ற இடத்தில் எரிமலை உள்ளது.

இந்த எரிமலை திடீரென வெடித்து சிதறியதால் கரும்புகை வெளியாகி வானத்தில் பல நூறு மைல் சுற்றுக்கு படர்ந்தது.

எனவே, விமானங்கள் பறக்க தடை விதிக்கப்பட்டதுடன் எரிமலையை சுற்றி வசிக்கும் மக்கள் வெளியேற்றப்பட்டனர்.

மேலும் இதிலிருந்து வெளியாகும் வெப்பம் 2ஆயிரத்து 500 மீற்றர் பரப்பளவு பிரதேசத்தை தாக்குகின்றது என தெரிவிக்கப்படுகிறது.

இதற்கு முன்பு கடந்த செப்ரெம்பர் மாதம் இந்த எரிமலை வெடித்ததில் கால்நடைகள் பலியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஆயுத விற்பனையை ஒழுங்குபடுத்துவதற்கான ஒப்பந்தம் குறித்து ஐ.நா. சபை பேச முடிவு

உலகளாவிய ஆயுத விற்பனையை ஒழுங்குபடுத்துவதற்கான ஒப்பந்தம் குறித்த பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிப்பதற்கான ஐ.நா. தீர்மானத்தை ஆதரித்து இந்தியா வாக்களித்துள்ளது.

உலகெங்கும் ஆண்டுக்கு 3.8 இலட்சம் கோடி ரூபா என்ற அளவுக்கு ஆயுத வர்த்தகம் நடைபெற்று வருகிறது. இதைக்கட்டுப்படுத்த உலகளாவிய ஒப்பந்தம் ஒன்றை உருவாக்குவதற்கு ஐ.நா. சபையின் உறுப்பு நாடுகளிடையே பேச்சுவார்த்தை நடைபெறுகிறது.

இந்த ஒப்பந்தம் குறித்துப் பரிசீலிக்க தனக்கு மேலும் அவகாசம் தேவை என்று அமெரிக்கா தெரிவித்ததைத் தொடர்ந்து இப் பேச்சுவார்த்தை இந்த ஆண்டு ஜுலையில் முறிந்து போனது.

எனினும் இந்தப் பேச்சுவார்த்தையை மீண்டும் தொடங்கி நடத்த வேண்டும் என்பதை வலியுறுத்தி தீர்மானம் ஐ.நா. பொதுச் சபையில் கொண்டுவரப்பட்டது. இதன் மீதான வாக்கெடுப்பில் தீர்மானத்தை ஆதரித்து இந்தியா, அமெரிக்கா உட்பட 133 நாடுகள் வாக்களித்துள்ளன. எந்த நாடும் தீர்மானத்தை எதிர்த்து வாக்களிக்கவில்லை. எகிப்து, சிரியா, யேமன், சவுதி அரேபியா, சிரியா உள்ளிட்ட 17 நாடுகள் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை.

தீர்மானத்துக்கு வெற்றி கிடைத்துள்ளதால் ஆயுத வர்த்தகக் கட்டுப்பாடு தொடர்பான இறுதிக்கட்டப் பேச்சுவார்த்தை ஐ.நாவில் அடுத்த ஆண்டு மார்ச் மாதம் 18 முதல் 28 ஆம் திகதி வரை நடைபெற வழி பிறந்துள்ளது. (அ-2)

# தொழுகை நேரத்தில் விமானம் பறக்கக்கூடாது

## ஈரான் அதிரடி

ஈரானில் காலைத் தொழுகையின்போது விமானங்கள் பறக்க அந்நாட்டு அரசு தடைவிதித்துள்ளது.

இஸ்லாமிய நாடான ஈரானில் சட்டங்கள் மிக கடுமையாக பின்பற்றப்பட்டு வருகின்றன.

இந்நிலையில்காலையில் தொழுவது அவசியம் என்பதற்காக புதிதாக கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

அதன்படி காலை நேரத்தில் விமானம் புறப்பாடு இருக்கக் கூடாது. காலை தொழுகை முடிந்து அரை மணி நேரத்திற்கு பின்பே விமானங்கள் புறப்பட வேண்டும்.

இதன்மூலம் காலைத் தொழுகையில் கலந்துகொள்ள வாய்ப்பு ஏற்படும் என அரச உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிந்துகொள்வது கடினமல்ல. செயலாற்றுவது தான் கடினம் – அதனால் செயல்வீரராகுங்கள்.
– சிவானந்தர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# பாதுகாப்புக் கூடிய இடங்களில் புலிக்கொடி பறப்பது எப்படி?

## கேள்வி எழுப்புகிறார் மாநகரசபை உறுப்பினர்

(கொழும்பு)

இலங்கையில் அண்மைக்காலமாக பாதுகாப்பு கூடிய இடங்களில் அசாதாரணமாக புலிக்கொடி பறக்கவிடப்படுவது எந்த நோக்கத்திற்காக, யாருடைய விசமத்தனமான செயற்பாடு, இன்னும் புலி உள்ளதாகக் காட்டுவதற்கான செயற்பாடா என கொழும்பு மாநகர சபை உறுப்பினர் சி.பாஸ்கரா கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் குறிப்பிடுகையில்,

அரசாங்கத்தால் விடுதலைப் புலிகள் முற்றாக அழிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்ட வேளையில் அண்மைக் காலமாக அகிம்சைப் போராட்டவாதிகள் மீது புலிச்சாயம் பூசுவதும் அதே வேளை, பாதுகாப்பு தரப்பினர் கூடுதலாக உள்ள வேளை புலிக்கொடி பறக்க விடப்படுவது போன்றன புலிகள் உள்ளதாக காட்டுவதற்கு சதி செய்யப்படுவதை காட்டுகின்றது.

அண்மைக்காலமாக மேதின கூட்டத்தின் ஊர்வலத்தின் போதும், நெல்லியடி அகிம்சைப் போராட்டத்தில் பொலிஸார் நூற்றுக்கணக்காக நின்ற போது மோட்டார் சைக்கிளில் வந்தும், முல்லைத்தீவில் முழுக்க முழுக்க இராணுவ மயமான சூழலில் சுனாமியில் இறந்தவர்களை நினைவு கூர்ந்து பொது இடத்தில் புலிக்கொடி கட்டப்பட்ட நிகழ்வுகள் மக்கள் போர் முடிந்து நான்கு வருடங்கள் ஆகின்ற போதும் நிம்மதியாகவும் சுபிட்சமாகவும் வாழ்வதை தடுப்பதற்கும், ஓர் அசாதாரண பீதி நிலையை உருவாக்குவதற்குமான சதித்திட்டமாக காணப்படுகின்றது.

இலங்கை அரசாங்கம் புலிகள் அழிக்கப்பட்டனர் என அறிவித்து நான்கு வருடங்கள் ஆகின்ற வேளை தற்போது தென்னிலங்கையில் தமக்கு ஏற்பட்ட அரசியல், சமூக, பொருளாதார நெருக்கடிகளை சமாளிப்பதற்கு இன்று அரசுக்கு எஞ்சியுள்ளது புலிக்கொடி மாத்திரமே என்று தெரியவருகின்றது.

புலிகளைப் பற்றிப் பேசியே அரசாங்கம் தனது அரசியலை சிங்கள மக்கள் மத்தியில் நடத்துகின்றது எனக் குற்றம் சாட்டினார். (எ-11)

# யாழ்.பல்கலைக்கழகப் புத்திஜீவிகள் புது வியூகம் அமைக்க வேண்டும்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் நான்கு பேர் கைது செய்யப்பட்டு வெலிகந்தையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில், யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தில் கற்றல் செயற்பாடுகள் தடைப்பட்டுப் போயுள்ளன.

மாணவர்களின் விடுதலை தொடர்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிர்வாகம் மட்டுமன்றி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எனினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதுவரை வெலிகந்தைக்குச் சென்று நான்கு மாணவர்களையும் பார்வையிடாமல் இருப்பது ஏன் என்பது தெரியவில்லை.

இவை ஒருபுறம் இருக்க, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் புத்திஜீவிகள் இனம் சார்ந்த பிரச்சினை தொடர்பில் ஒரு சுமுகமான தீர்வு முயற்சியினை எட்டுவதில் காத்திரமான நடவடிக்கைகளை எடுக்கும் பொறுப்பைக் கொண்டவர்கள் என்பது மறுதலிக்க முடியாத உண்மை.

ஈழத் தமிழர்களின் அவலத்திற்கு தமிழ் அரசியல்வாதிகளால் எந்த முடிவும் கிடைக்கப் போவதில்லை என்பது நிறுதிட்டமான முடிபு.

எனவே அரசியல்வாதிகளை நம்புதல் என்ற பழங்கதைக்கு முடிபுகட்டிவிட்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புத்திஜீவிகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகத்தை பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் குழுவொன்றை அமைத்து,

இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் அரசுடன் இணைந்து செயலாற்றும் தென்பகுதி பல்கலைக்கழகப் புத்திஜீவிகளுடன் பேசவேண்டும்.

இலங்கை அரசுடன் பேச்சு நடத்தி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதென்பது இறுக்கமான விடயமாக இருப்பதால், தென்பகுதியில் இருக்கக்கூடிய சிங்கள புத்திஜீவிகளுடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புத்திஜீவிகள் குழு பேச்சு நடத்தி அதன் ஊடாக இனப்பிரச்சினைக்கான தீர்வை அரசிடம் வலியுறுத்தச் செய்ய வேண்டும்.

இத்தகையதொரு நடவடிக்கை உட்பட பொருத்தமான பல்வேறு நடவடிக்கைகளைத் திட்டமிட்டு அவற்றை அமுல்படுத்துவதன் மூலம் இனப்பிரச்சினைக்கான தீர்வைக் கையாளுகின்ற பெரும் பொறுப்பை யாழ்.பல்கலைக்கழக புத்திஜீவிகள் சமூகம் பொறுப்பேற்றுக்கொள்வது காலத்தின் கட்டாய தேவையாகிவிட்டது.

அதேசமயம், வடபகுதியின் நிலை குறித்து ஆராயும் பொருட்டு வெளிநாடுகள் உட்பட ஐ.நா. போன்ற அமைப்புகளின் பிரதிநிதிகள் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யும்போது, அவர்களைச் சந்திக்கின்ற பொறுப்பை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புத்திஜீவிகளே பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும் என்பதுடன்,

ஒழுங்குபடுத்தப்பட்ட சந்திப்பொன்றை படைத்தரப்புடன் நடத்தி பொதுமக்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகளைத் தீர்க்கின்ற செயற்பாட்டையும் இக்குழு செய்தாக வேண்டும்.

இவற்றைச் செய்யும்போது தமிழ் மக்களின் நிலை தொடர்பில் சாதகமான மாற்றம் ஏற்படும் என்பது சர்வ நிச்சயம்.

# பாடசாலை வகுப்புக்கள் ஞாயிறன்று இல்லை

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பட்டமேற் டிப்ளோமா நிகழ்ச்சித் திட்டத்தில் 8ஆவது செயற்பாடு சாா்ந்தபாடசாலை வகுப்புக்கள் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.பிராந்திய நிலையத்தில் நடைபெறவுள்ளது.

எனினும் நாளை மறுதினம் 30ஆம் திகதி ஞாயிற்றுக்கிமை வகுப்புக்கள் நடைபெறாது என இணைப்பாளர் அறிவித்துள்ளார். (எ-11)

# குற்றப் பிரேரணை விடயத்தில் ஜனாதிபதி விலகிச் செல்லார்

## சிரேஷ்ட அமைச்சர் விதாரண

(கொழும்பு)

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான குற்றப்பிரேரணை விசாரணை நடவடிக்கைகள் குறித்தும் அடுத்தக் கட்ட நடவடிக்கை தொடர்பிலும் ஜனாதிபதி விலகிச் செல்வதற்குதயாரில்லை. இவ்வாறு சிரேஷ்ட அமைச்சர் திஸ்ஸ வித்தாரண தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் சிரேஷ்ட அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் இடதுசாரி கட்சிகள் நாடாளுமன்றத்தை ஒத்திவைக்குமாறும் இன்றேல் உள்ளக குழுவை நியமிக்குமாறும் கோரிக்கை விடுத்திருந்தன.

எனினும் தற்போதைய சூழ்நிலையில் ஜனாதிபதி இதில் எதனையும் செய்யமாட்டார் என்றும் தற்போது முன்னெடுக்கப்படுகின்ற செயல் முறை தொடரும் என்றும் எதிர்காலத் தில் புதிய சட்டங்களை தயாரிப்பது தொடர்பில் அடுத்த வருடத்தில் கவனம் செலுத்தப்படும்.

குற்றப்பிரேரணை தொடர்பில் தற்போது முன்னெடுக்கப்படுகின்ற செயன்முறை அரசியலமைப்பின் பிரகாரம் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# மயங்கிய நிலையில் குடும்பஸ்தர் மீட்பு

(கரவெட்டி)

வடமராட்சி வல்லிபுர குறிச்சிப்பகுதியில் நேற்றுமாலை 5.30 மணியளவில் வீதியோரத்தில் மயங்கிய நிலையில் இருந்த நபர் ஒருவரை அவ்வூர் மக்கள் மீட்டு பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் சேர்த்துள்ளனர்.

குறித்த நபர் யாழ்.வண்ணார்பண்ணை பகுதியைச்சேர்ந்த சின்னத்தம்பி சண்முகலிங்கன் (வயது 40) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவர் நஞ்சு அருந்திய நிலையில் மயங்கியிருந்ததாக மருத்துவ பரிசோதனையில் இருந்து தெரியவந்துள்ளது. (எ-11,24)



# வெள்ளி நற்சிந்தனை

## செவ்வியல் தமிழில் சீர்மியம்

104

பரத்தமையொழுக்கம் ஆண்கள் வாழ்வியலில் இணைந்திருவாற்றைப் பல தமிழிலக்கியங்கள் பதிவு செய்துள்ளன. ஆணின் ஒழுக்கச்சீர்கேட்டைத் தமிழர் சமூகம் அங்கீகரித்திருந்தது. சிலப்பதிகாரம் என்னும் தமிழ் நூல் பரத்தமையொழுக்கம் அரசனால் கூடக் கண்டிக்கப்படாத நிலையைப் பதிவு செய்து வைத்துள்ளது. பெண்கள் தொடர்பாக ஆண்களிடம் இருந்த பலவீனம் ஒரு தனியான ஆற்றலாகக்கூட மதிக்கப்பட்டது. மணி வாசகருடைய காலத்தில் பரத்தமை யொழுக்கம் எவ்வாறு இருந்ததென் பதை அவருடைய பாடல்கள்மூலம் அறியலாம். ஆனால் இக்கருத்தை மறுப்போரும் உளர். மெய்யடிய வரான மணிவாசகர் வாழ்வியலில் அப்படியான கூடாவொழுக்கத்திற்கு இடமில்லையென்று கருதுவோரும் உளர். ஆனாலவரது பாடல்களிலே வருகின்ற குறிப்புக்கள் உண்மையான உணர்வையே சுட்டி நிற்கின்றன. இறைவனிடம் அவர் எதையும் ஒளிக்க விரும்பவில்லை. புலனடக்கமற்ற, மனப்பக்குவமற்ற தன்னை இறைவன் வலிய வந்து ஆட்கொண்ட பின்னர்தான் தன்னுடைய முன்னைய செயற்பாடுகளை மீள் பார்வை செய்கிறார். அவ்வாறு செய்யும்போது அவர்களும் [illegible] சிந்திக்க வைக்கின்றது.

*செழிகின்ற தீப்புகு விட்டிலிற்*
*சின்மொழி யாரிற் பன்னாள்*
*விழுகின்ற என்னை விடுதி*
*கண்டாய்...*

இங்கு அவர் குறிப்பிட்டுள்ள சினமொழியார் யார் என்ற கேள்வி எழுகின்றது. சிலமொழிகளைப்பேசுகின்ற பெண்கள். குறிப்பிட்ட ஆசைவார்த்தைகளை மட்டுமே பயன்படுத்தும் பெண்கள். ஏனெனில் அந்த மொழிகளை உண்மையான அன்பான வார்த்தைகளை எண்ணி ஏமார்ந்தவர் மணிவாசகர். அதனை நல்லதொரு உவகைமூலமாகத் தெளிவாகக் கூறியுள்ளார். விட்டிற்பூச்சி சுதந்திரமாக எங்கும் பறந்து திரியும் இயல்புடையது. விளக்கின் ஒளியைக் கண்டு அதன் மேலே ஆசை கொண்டு பறந்துசெல்லும். ஆனால் விளக்கின் வெம்மை அதற்குத் தெரியாது. தெரியாமல் ஒளியின் கவர்ச்சியால் உயிரை இழந்துவிடும். அதுபோலவே பெண்களின் முதுமொழியில் கவரப்பட்டு பல நாட்கள் அவர்களோடு இருந்ததைக் குறிப்பிட்டுள்ளார். **விழுகின்ற என்னை** என்ற தொடர்மூலம் தனது பலவீனத்தை உணர்த்தியுள்ளார். மந்திரியாக அவர் வாழ்வு நடந்தபோது அதற்குரிய வாய்ப்புகளும் அவருக்கிருந்தன. அது மட்டுமல்லாமல் சமூகமும் அவருடைய செயற்பாட்டை விமர்சிக்க முடியாதநிலை. இத்தகைய பின்புல வாழ்வைக் கொண்டிருந்த மணிவாசகர் திருஉத்தரகோசமங்கை என்ற திருத்தலத்திற்கு சென்று வழிபாடு செய் கிறார். அத்தலத்திலே உறைகின்ற சிவனை அவர் கண்டபோது தன்னுடைய வாழ்வின் குறைபாடுகளையெல் லாம் எடுத்துக்கூறவேண்டும் என விரும்புகிறார். அத்தகைய ஒரு விருப்பம் அவருக்கு ஏற்படுவதற்கு இறைவனின் தோற்றமே காரணமாகிறது. திருமுடியிலே புனைந்திருந்த மாலை அவர் கண்களைக் கவர்கிறது. தேனுண்பதற்காக மலர்களை நாடிச்செல்லும் வண்டுகள் கால்களினாலே உழுதபூக்கள் என மணிவாசகர் குறிப்பிடும் போது ஓர் அற்புதமான இயற்கைக் காட்சியையும் காட்டிவிடுகிறார்.

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

நறுமணமுள்ள பூவிலே ஆறுகால்களால் அப்பூவின் மணமான அகவிதழ்களை உழுதபடியே வண்டு தேனுண்கிறது. அதனால் வெறியோடு நிற்கிறது. இத்தகைய நறுமணமுடைய மாலையை அணிந்த இறைவா! நீ வழியிலே வந்து அருளாகிய ஆரமுதை ஊட்டவும் நான் மறந்துவிட்டேனே என வருந்துகிறார்.

*செழிகின்ற தீப்புகு விட்டிலிற்*
*சின்மொழியாரிற் பன்னாள்*
*விழுகின்ற என்னை விடுதி கண்*
*டாய் வெறி வாயறுகால்*
*உழுகின்ற பூமுடி உத்தர*
*கோச மங்கைக்கரசே*
*வழிநின்று நின்னருளாரமு*
*தூட்ட மறுத்தனனே*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# யாழ். மத்திய கல்லூரியை வீழ்த்தி சென்.ஜோன்ஸ் அபார வெற்றி

இலங்கை கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ். மாவட்டப் பாடசாலைகளின் 13 வயதுப்பிரிவு அணிகளுக்கிடையில் மட்டுப்படுத்தப்படாத பந்துப்பரிமாற்றம் கொண்ட முதல் சுற்றுப்போட்டிகள் நடைபெற்று முடிந்துள்ளது.

இந்நிலையில் இரண்டாம் சுற்றுப்போட்டிகள் ஆரம்பிப்பதற்கு முன்னர் அணிகளுக்கிடையில் 50 பந்துப் பரிமாற்றங்கள் மட்டுப்படுத்தப்பட்ட துடுப்பாட்டப் போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இதற்கான போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியினை எதிர்த்து சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி 50 ஓவர்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 222 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் ஐங்கரன் 42, சொரூபன் 24 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி சார்பாக அன்டர்ஸன் 4 விக்கெட்டுக்களை கைப்பற்றினர். 223 ஓட்டங்களை பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி 17 ஓவர்களில் 69 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்து 153 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

பந்துவீச்சில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணிசார்பாக கபில்ராஜ் 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.



வாண இரவு நிகழ்வில் தேசிய ரீதியில் கராத்தே போட்டியில் வெற்றி பெற்ற சென். ஜோன்ஸ் கல்லூரியின் கராத்தே வீரர்களையும் பொறுப்பாசிரியர் மற்றும் கராத்தே பயிற்சி ஆசிரியர் ஆகியோரைப் படத்தில் காணலாம்.

## உதைபந்தாட்ட போட்டி

யாழ். உதைபந்தாட்ட லீக் தனது அங்கத்துவ அணிகளுக்கிடையே 7 பேர் கொண்ட உதை பந்தாட்டப் போட்டியினை நடத்தவுள்ளது.

இப்போட்டிகள் யாழ். துரையப்பா விளையாட்டரங்களில் நடைபெற்றுள்ளது. இப்போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் அங்கத்துவ அணிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் போட்டி நிரல் எதிர்வரும் 6 ஆம் திகதி காலை 11 மணிக்கு துரையப்பா விளையாட்டரங்களில் நடைபெறவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான போட்டியும் நடைபெறவுள்ளது.

இப்போட்டி 9 பேர் கொண்ட போட்டியாக அமையவுள்ளதுடன் இப் போட்டிக்கான நிரல் தயாரித்தலும் 6 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

## மட்டுவில் கண்ணகை வி.கழகம் வெற்றி

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஸ்ரீ முருகன் சனசமூக நிலையம் நடத்திய கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதி சுற்றுப் போட்டி கடந்த வாரம் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டியில் மட்டுவில் கண்ணகை விளையாட்டுக்கழகமும் மட்டுவில் வளர்மதி விளையாட்டு கழகமும் மோதின.

இதில் முதன்முறையாக 2 இனிங்ஸ் 40 ஓவர்களுக்கு நடைபெற்ற இப்போட்டியில் இறுதிச் சுற்றில் 16 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு துடுப்பெடுத்தாடிய மட்டுவில் கண்ணகை விளையாட்டு கழக அணி ஒரு விக்கெட்டை மட்டும் இழந்து தனது வெற்றி இலக்கை அடைந்தது. (3-29)

# செல்வபுரம் சந்திரன் சம்பியன்

முல்லைத்தீவு இராணுவப் படைப்பிரிவின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு மாவட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் விலகல் முறையிலான காற்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டியில் செல்வபுரம் சந்திரன் விளையாட்டுக்கழகம் வெற்றிபெற்றது.

முல்லைத்தீவு இராணுவ படைப்பிரிவின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு மாவட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் விலகல் முறையிலான காற்பந்தாட்டச் சுற்றுப்போட்டியை அளம்பில் விளையாட்டு மைதானத்தில் நடத்தி வந்தது. இந்நிலையில் அளம்பில் விளையாட்டு மைதானத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற இப்போட்டியில் செல்வபுரம் சந்திரன் விளையாட்டுக்கழக அணியும் சிலாவத்தை இளம் பறவையன் விளையாட்டுக்கழக அணியும் மோதின.

போட்டியின் 5 ஆவது நிமிடத்தில் இளம்பறவையன் அணி முதல் கோலினைப் போட்டது. முதல்பாதி ஆட்டத்தில் 1:0 என்ற கோல் கணக்கில் இளம்பறவையன் அணி முன்னிலை வகித்தது.

இரண்டாவது பாதி ஆட்டத்தில் சந்திரன் விளையாட்டுக்கழக அணி பனால்டி வாய்ப்பு ஒன்று கிடைக்க அதனை கோலாக்கியது. ஆட்டம் முடியும் வரையும் இரு அணிகளும் தலா ஒரு கோலினைப் பெற்றிருந்ததனால் ஆட்டம் சமநிலை தவிர்ப்பு உதையினை நோக்கிக் கொண்டு செல்லப்பட்டது. சமநிலை தவிர்ப்பு உதையில் செல்வபுரம் சந்திரன் விளையாட்டுக்கழகம் 4:2 என்ற கோலக்கணக்கில் வெற்றி பெற்று சம்பியனாகியது.

சுற்றுப் போட்டியின் சிறந்த வீரராக சந்திரன் விளையாட்டுக்கழக அணியினைச் சேர்ந்த கே.நிசாந்தன் தெரிவானார்.

வெற்றிபெற்ற அணிக்கும் வீரர்களுக்குமான பரிசில்களை பிரதம விருந்தினர்களாக கலந்து கொண்ட முல்லைத்தீவு மாவட்ட கட்டளைத் தளபதி பிரிகேடியர் மார்க், முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் என். வேதநாயகம் ஆகியோர் வழங்கினார்கள்.

# எங்களது முதல் வெற்றி பாகிஸ்தானுக்கான பரிசு

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்து இரண்டு இருபது-20 போட்டி மற்றும் 3 ஒருநாள் போட்டிகளில் பங்கேற்று வருகின்றது.


இதில் முதல் இருபது-20 போட்டி பெங்களூரில் நடந்தது.முதலில் ஆடிய இந்திய அணி 133 ஓட்டங்கள் எடுத்திருந்தது.அடுத்து ஆடிய பாகிஸ்தான் 19.4 ஓவரில் 134 ஓட்டங்கள் எடுத்து 5விக்கெட்டு வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இது தொடர்பாக இந்திய அணித்தலைவர் மஹேந்திர சிங் டோணி கூறுகையில், இந்திய அணியின் தொடக்க ஆட்டம் சிறப்பாக இருந்தது. தொடக்க வீரர்கள் நன்றாக ஓட்டங்கள் குவித்தார்கள்.

இதனால் எங்கள் அணி வெற்றி பெற்றுவிடும் என்று எதிர் பார்த்தோம்.ஆனால் அது நடக்கவில்லை. நாங்கள் கூடுதலாக 10அல்லது15 ஓட்டங்கள் எடுத்திருந்தால் வெற்றி பெற்று இருப்போம்.

145 ஓட்டங்கள் வரை எடுத்திருந்தால் அது பாதுகாப்பான ஸ்கோராக இருந்து இருக்கும். பாகிஸ்தானின் தொடக்க வீரர்கள் முதலிலேயே வீழ்ந்துவிட்ட நிலையில் மாலிக் ஹபீஸ் ஆகியோர் சிறப்பாக விளையாடி பாகிஸ்தானை வெற்றியடைய செய்து விட்டனர் எனவும் கூறியுள்ளார்.

பாகிஸ்தானின் அணியின் அணித்தலைவர் ஹபீஸ் கூறுகையில், இந்தியாவுக்கெதிராகநல்ல தொடக்கத்தை கொடுக்க வேண்டும் என்று விரும்பினோம் ஆனால்எங்கள்தொடக்க வீரர்கள் முதலிலேயே வீழ்ந்து விட்டதால் எங்களுக்கு சற்று பின்னடைவு ஏற்பட்டது.




ஆனால் நாங் கள் சரி கட்டிவிட்டோம். இதைவிட சிறப்பாக ஆட வேண்டும் என்று நினைத்தோம். இனிவரும் போட்டிகளில் இன்னும் சிறப்பாக விளையாட முயற்சிப்போம் என்றும் இந்த வெற் றியை எங்கள் நாட்டுக்கு பரிசாக வழங்குகிறோம் எனவும் கூறியுள்ளார்.

இருபது-20 போட்டிகள் இதற்கு முன்னர் 3முறை இந்தியா பாகிஸ்தான் அணிகள் மோதின. இவை அனைத்திலும் இந்தியாவே வெற்றி பெற்று இருந்தது.


தற்போது முதன்முறையாக பெங்களூர் போட்டியில் இந்தியாவை பாகிஸ்தான் வீழ்த்தியுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2-ம் நாள் முடிவில் இலங்கைக்கு எதிராக ஆஸி ஆதிக்கம்

(மெல்போர்ன்)

அவுஸ்திரேலியாவிற்கு கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணிக்கும், அவுஸ்திரேலிய அணிக்கும் இடையிலான 2-வது டெஸ்ட் போட்டியின் 2-ம் நாள் ஆட்டம் நேற்றாகும். நேற்றைய நாள் முடிவில் அவுஸ்திரேலிய அணி முழுமையான ஆதிக்கத்தை வெளிப்படுத்தியுள்ளது.





3 விக்கெட்டுக்களை இழந்து 150 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் நேற்றைய நாள் ஆட்டத்தைத் தொடர்ந்த அவுஸ்திரேலிய அணி ஆட்டநேர முடிவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 440 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இதன்படி அவுஸ்திரேலிய அணி 2 விக்கெட்டுக்கள் கைவசமுள்ள நிலையில் 284 ஓட்டங்களால் முன்னிலை வகிக்கிறது.

அவுஸ்திரேலிய அணி சார்பாக 4-வது விக்கெட்டுக்காக ஷேன் வோட்சன், மைக்கல் கிளார்க் இருவரும் 194 ஓட்டங்களைப் பகிர்ந்தனர். ஆனால் 4-வது விக்கெட்டாக மைக்கல் கிளார்க் ஆட்டமிழந்த அடுத்து ஓவரிலேயே ஷேன் வோட்சனும் ஆட்டமிழந்தார்.

துடுப்பாட்டத்தில் அவுஸ்திரேலிய அணி சார்பாக மைக்கல் கிளார்க் 106 ஓட்டங்களையும், ஷேன் வோட்சன் 83 ஓட்டங்களையும், மிட்சல் ஜோன்சன் ஆட்டமிழக்காமல் 73 ஓட்டங்களையும், டேவிட் வோர்னர் 46 பந்துகளில் 62 ஓட்டங்களையும் பெற்றனர்.


பந்துவீச்சில் இலங்கை அணி சார்பாக தம்மிக்க பிரசாத் 3 விக்கெட்டுக்களையும், சமிந்த எரங்க 2 விக்கெட்டுக்களையும், அஞ்சலோ மத்யூஸ், திலகரட்ண டில்சான் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

மெல்போர்னில் இடம்பெற்றுவரும் இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 156 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்டுக்களையும் இழந்தமை குறிப்பிடத்தக்கது.

இன்று போட்டியின் மூன்றாம் நாளாகும்.

# இந்தியாவை வீழ்த்துவோம்

## பாகிஸ்தான் கப்டன் உறுதி



இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் செய்துள்ள பாகிஸ்தான் அணி 2 இருபது-20 போட்டிகள் மற்றும் 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது.

இதில் பெங்களூரில் நடந்த முதலாவது இருபது-20 போட்டியில் இந்தியா 5 விக்கெட் வித்தியாசத்தில் தோல்வியைத் தழுவியது.

அடுத்து இன்று அகமதாபாத்தில் நடைபெறவுள்ள போட்டிக்காக இரு அணிகளும் தயாராகியுள்ளன.

இது குறித்து பாகிஸ்தான்அணித் தலைவர் ஹபீஸ் கூறியதாவது,

இன்றைய போட்டியிலும் வென்று இத்தொடரை வெல்வதற்கான நிறைய வாய்ப் புகள் எமக்கு உள்ளன.முழுத் தொடரையும் வெற்றி கொள்வோம் என்றார்.

## இராணுவப் பயிற்...

இராணுவப் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி வழங்கப்பட்டு வந்தது.

இவ்வாறு இராணுவப் பயிற்சி பெறும் தமிழ் பெண்களுக்கு எதிர்வரும் 3-ம் திகதி பயிற்சி நிறைவு இடம்பெறவுள்ளதாக தெரிய வருகின்றது. (எ-11)

## தொடரும் அடைமழை...

நாட்டில் கடந்த சில நாட்களாக பெய்து வரும் அடைமழையினால் வட மாகாணத்தில் 9 ஆயிரத்து 515 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணம் தவிர்ந்த வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் 9 ஆயிரத்து 515 குடும்பங்களைச் சேர்ந்த 30 ஆயிரத்து 714 பேர் பாதிப்படைந்துள்ளனர்.

இதில் வவுனியாவில் 4 ஆயிரத்து 550 குடும்பங்களைச் சேர்ந்த 15 ஆயிரத்து 891 பேரும், மன்னார் மாவட்டத்தில் 2 ஆயிரத்து 680 குடும்பங்களைச் சேர்ந்த 7 ஆயிரத்து 274 பேரும், கிளிநொச்சி மாவட்டத்தில் 706 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 525 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆயிரத்து 579 குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து 024 பேரும் பாதிப்படைந்துள்ளதாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை வவுனியாவில் 42 முகாம்களும், மன்னாரில் 12 முகாம்களும் கிளிநொச்சியில் 6 முகாம்களும் திறக்கப்பட்டு வெள்ளத்தால் பாதிப்படைந்த மக்கள் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் 321 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 30 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இவர்கள் 8 நலன்புரி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் துணுக்காய் பிரதேச செயலர் தெரிவித்தார்.

கடும்மழை பெய்யுமிடத்து பாதிக்கப்பட்ட மக்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, கிளிநொச்சிப் பகுதியில் உள்ள பிரதான குளங்கள் உடைப்பெடுக்கும் அபாயம் உள்ளது எனவும், இதனால் தாங்கள் இடம்பெயர வேண்டிய நிலை உள்ளது எனவும் தாழ்நிலப் பகுதியில் உள்ள மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

எனினும் ஆபத்து நிலை எதுவும் இல்லை என கிளிநொச்சி நீர்ப்பாசன பொறியியலாளர் எஸ்.விகிர்தன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் உட்பட வடக்கில் சீரற்ற காலநிலையும் கடும் மழையும் நிலவுவதால் இயல்பு வாழ்க்கைகளும் பாதிப்படைந்துள்ளது.

வெளிமாவட்டங்களுக்கான போக்குவரத்தும் பாதிப்படைந்துள்ளது. மீனவர்கள் தொழிலுக்குச் செல்வதும் குறைவடைந்து காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டது. (எ-11)

## ரொரன்டோவை...

2 ஆண்டுகளில் இல்லாத அளவு பெரிய பனிப் புயல் தாக்கும்.

அப்போது தரையில் 10 முதல் 15 செ.மீ உயரத்திற்கு பனிப்படலம் காணப்படும். இச்சூழ்நிலையில் 401 நெடுஞ்சாலை பாதிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்தப் பனிப்புயல் ரொரன்டோவைத்தான் அதிக பட்சமாகத் தாக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பனிப்புயலால் காற்று மணிக்கு 70 கிலோ மீற்றர் வேகத்தில் வீசும். இதனால் சாலைகளில் செல்வோர் சிரமப்படுவர். (எ-11)

## மிதிவெடி...

தொடர்புள்ளதாக அரச தரப்பு நம்புகின்றது.

எனவே அடுத்த வருடம் முதல் மிதிவெடி அகற்றலை அரசாங்கம் பொறுப்பேற்க திட்டமிட்டுள்ளது.

குறிப்பாக அடுத்த வருடமும் ஜெனிவாவில் இலங்கைக்கு கடும் சோதனை காத்துள்ள நிலையிலேயே அரசு இந் நடவடிக்கையை முன்னெச்சரிக்கையாக மேற்கொள்வதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக இறுதி யுத்தம் நடைபெற்ற ஒரு சில பகுதிகளில் மிதிவெடி அகற்றலை இதன் மூலம் இராணுவத்தைக் கொண்டே அரசு மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளது.

இதன்மூலம் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இன அழிப்பு நடவடிக்கைகள் தொடர்பான ஆதாரங்கள் வெளிஉலகிற்கு கொண்டு செல்லப்படுவதை அரசு கட்டுப்படுத்த நினைக்கிறது.

மிதிவெடி அகற்றலை பொறுப்பேற்றவுடன் ஐ.நா பணியாளர்களையும் மிதிவெடி அகற்றலில் இருந்து வெளியேற்ற அரச தரப்பு தீர்மானித்துள்ளதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-11)

## இடதுசாரிகளின்...

சுட்டிக்காட்டியுள்ளார்.

நம்பிக்கையில்லாத் தீர்மானம் தொடர்பான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, நாட்டுக்கு நல்லது என தாம் கருதிய யோசனைத் திட்டத்தை முன்வைப்பது தமது கடமை எனவும், அதனையே தாம் செயற்படுத்தியதாகவும் சிரேஷ்ட அமைச்சர் டி.யு.குணசேகர தெரிவித்துள்ளார்.

நம்பிக்கையில்லாத் தீர்மானம் குறித்த தமது மாற்று யோசனையை ஏற்றுக் கொள்வதும் நிராகரிப்பதும் அரசாங்கத்தின் விருப்பம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தீர்மானம் எடுக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு காணப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார். (எ-11)

## புலிச் சந்தேக...

இவர்கள் மூவரும் பிணை கோரி நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்திருந்தனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணைந்து செயற்பட்ட போதிலும் எந்தவித சீர்குலைப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபடவில்லை என அவர்கள் தமது மனுவில் நீதிமன்றத்திடம் தெரிவித்துள்ளனர்.

எனினும், இவர்களது பிணை கோரிய மனுவை நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

இலங்கைத் தமிழர்களான இவர்கள் கடந்த 10 வருடங்களுக்கு முன் அகதிகளாக இந்தியா சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## முல்லை...

மின்கம்பி அறுந்தாலோ உடனடியாக பாதுகாப்பு தரப்பிடமோ அல்லது முல்லைத்தீவு மாவட்ட மின்சார சபையின் 021 229 0020 என்ற தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொண்டு அறிவிக்க வேண்டும்.

அவற்றை உடனடியாக சீர்செய்வதற்கு மின்சார சபை ஊழியர்கள் தமது சேவையை செய்ய எந்நேரமும் தயாராக உள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். (எ-11,15)

DCM
DCM
யாழ்.நகர் (வேம்படி மகளிர் கல்லூரி அருகில்)
A/L - 2015
கலை வர்த்தகம்
ஆரம்பம் - 05.01.2013
சனி - காலை - 9.00
DCM
(அ-1932)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# NEW SCIENCE HALL
## JAFFNA

# 2015 A/L

## கணித, உயிரியல் பிரிவு

| | |
|---|---|
| PHYSICS | திரு. S.சோதிலிங்கம்<br>திரு. R.குமரன்<br>திரு. R.குகன் |
| CHEMISTRY | திரு. K.சிவத்திரன்<br>திரு. S.டயஸ்<br>திரு. M.மகேஸ்வரன் |
| BIOLOGY | திரு. T.தம்பிராஜா<br>திரு. T.கெங்காதரன்<br>வழமையான ஆசிரியர்<br>திரு. M.M.அல்போன்ஸ் |
| COM.MATHS | திரு. S.செந்தில்ராஜ்<br>திரு. S.செந்தில்நாதன்<br>திரு. A.குணசிங்கம் |

(சு-1926)

**ஆரம்பம்: 28.12.2012**

**வெள்ளி காலை 9.00 மணி**

# NEW SCIENCE HALL
JAFFNA

## 2015 A/L
ENGLISH MEDIUM
MAT & BIO

COMMENCES ON
28.12.2012

| | | |
|---|---|---|
| PHYSICS | : | MR. S.SOTHILINGAM |
| CHEMISTRY | : | MR. M.MAHESWARAN<br>MR. S.DIAS |
| COM.MATHS | : | MR. S.SIVAKARAN |
| BIOLOGY | : | MR. T.THAMBIRAJAH<br>OUR USUAL TEACHER |

(சு-1929)



புதிய முகவரி
# ஹரன்
ஜுவல்லர்ஸ்
நகை வைர வியாபாரிகள்
இல.217 மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 6083, 0714182480

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு:
T.P.: 021 321 0815, 021 5671540

A/L 2015
**New Economics College**
மணிக்கூட்டு வீதி, யாழ்நகர்.
**கலை, வர்த்தகப் பிரிவு**
ஜனவரி 05 சனி 8.00மணி
புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

# விடுதலைப் பெருவிழா

வாருங்கள் இலவசம்!

கவலை, கண்ணீர்,
தீராத வியாதி,
பிசாசின்பிடி,
பில்லி-சூனியக்கட்டு, பாவங்கள்,
பரம்பரை சாபங்கள்,
அடிமைத்தனம் ஆகியவற்றிலிருந்து

## இயேசு விடுதலை கொடுக்கிறார்!!!

இடம்: யா/நல்லூர் ஸ்தான சி.சி.த.க பாடசாலை
மைதானம் (யாழ். வலயக் கல்வி அலுவலகம்)
செம்மணி வீதி, நல்லூர்.

காலம் : 27,28,29 மார்கழி 2012
நேரம் : தினமும் மாலை 4.00மணி

"வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்." (மத்தேயு 11:28)

இலங்கை நாற்சதுர சுவிசேஷ சபை,
673 பருத்தித்துறை வீதி, முத்திரைச்சந்தி, நல்லூர்.

(1335)

## O/L, A/L தகுதியோடு நீங்களும் British Qualified Chartered Engineer / Quantity Surveyor ஆகலாம்

★ Apss International சர்வதேச நாடுகளில் இயங்கும் 1700 Centres க்கு சவாலாக விளங்கி 2012ற்கான 5 World Gold Medal (Medal Of Excellence) வென்று பொறியியல் துறையில் சரித்திரம் படைத்துள்ளது.

★ 30 வருட இடைவேளையின் பின் யாழ்.இனுவிலைச் சேர்ந்த திரு.அமிர்தலிங்கம் சிவகுமார் Advanced Diploma in Construction Industry (Civil Engineering) துறையில் Medal Of Excellence (World Gold Medal) பெற்றமைக்கும் அவரை திறம்பட பயிற்றுவித்த Eng B.தவேந்திரகுமார் (Chartered Engineer) அவர்களையும் Apss நிறுவனம் மனதார வாழ்த்தி பாராட்டுகிறது.

★ Apss நிறுவனத்தின் பணிப்பாளரும் விரிவுரையாளருமான Prof.கதிரவேலு சந்திரபோஸ் அவர்களுக்கு Electrical & Electronic துறையில் Outstanding Lecturerற்கான Medal Of Excellence (World Gold Medal) பெற்றமைக்கும் எமது நிறுவனம் வாழ்த்திப் பெருமையடைகிறது.

★ மேலும் மற்றைய துறைகளில் Medal Of Excellence பெற்றவர்களையும் வாழ்த்துவதில் எமது நிறுவனம் பெருமைகொள்கிறது.

## Medal of Excellence(World Gold Medal Winners)

### Outstanding Lecturers



**Prof.K.Chandirabose**
Medal of Excellence Winner
Outstanding Lecturer



**Mr.Neil Abeysekara**
Medal of Excellence Winner
Outstanding Lecturer

### Outstanding Students



**Miss.Kulini Peiris**
ENR.No: HWJ 2798
Medal of Excellence Winner
Advanced Diploma in Applied Telecommunication Systems



**Mr.A. Sivakumar**
ENR.No: VXL 9116
Medal of Excellence Winner
Advanced Diploma in Construction Industry (Civil Engineering)



**Mr.M.R.H.Eranda Bandara**
ENR.No: YGN 0251
Medal of Excellence Winner
Advanced Diploma in Electrical and Electronic Engineering

• Civil Engineering/Qunatity Surveying • Electrical & Electronics Engineering • Telecommunications Systems

**29 - 30 Dec 2012 காலை 10 மணிக்கு இலவச கருத்தரங்குடன் வகுப்புகள் ஆரம்பமாகின்றன.**
**அனுமதிகளும் வழங்கப்படும்**

▪ Diploma (6Months) ▪ Ad.Diploma (6Months)

Civil Engineering வகுப்புக்கள் Eng.B.தவேந்திரகுமார்(தவா Sir) கொழும்பு/யாழ் பிரபல விரிவுரையாளரால் நடாத்தப்படும்.

(சு-1916)

**APSS INTERNATIONAL**
**(College of Engineering Studies)**

அன்னவாசா, 242, Dr.சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம்.
HOTLINE: 077 2306642 | 072 2306642 | 077 3867695


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.12.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.